NAVA WILSON LLP
BARRISTERS AND SOLICITORS
WE OFFER SERVICES IN:
Real Estate
Corporate Law
Litigation
10 Milner Business Court, Suite 210
Toronto, ON M1B 3C6
416.321.1100
416.321.1107
info@navawilson.law
www.navawilson.law

August 2018
# eகுருவி
ekuruvi.com

Bring your parents & Grandparents worry free!
SuperVisa. Today
416 321 6000
support@supervisa.today

$1 WOW!

# குடும்ப அரசியலின் எதிர்காலம்?





## அங்கே மு.க...
## இங்கே லோ.க...

## வரம்பு மீறுகிறதா மாகாண அரசு?

## கனடாவில் நியாயம் எங்கே?

பத்திரிகை $1

Mortgage Alliance
THE GUARDIAN
GET A TEAM OF EXPERIENCED PROFESSIONALS WORKING FOR YOU.
WE HAVE THE Right Mortgage for you!
Cell : (416) 830-3241
Tel : (416) 556-7002
Fax : (416) 556-5115
info@mortgageguardian.ca
Gini Annarasa
Mortgage Broker
Independently owned and operated franchise of the Mortgage Alliance Network | Lic#12521
gini.annarasa@gmail.com
Cell : (416) 830-3241
80 Nashdene Rd, Unit D221-222, Toronto, ON M1V5K4
www.mortgageguardian.ca

DOVE SQUARE
PROPERTY MANAGEMENT INC.
www.dovesquare.ca
Integrity | Community | Commitment
416-335-DOVE (3683)
10 Milner Business Court, Suite 510, Toronto, ON, M1B 3C6

Ideal Auto Tech
For all your domestic and imported vehicle repairs and services
Oil Change
$24.99 + tax
Conditions apply.
Tel: 416-752.LUBE(5823)
Fax: 416-752-0457

Century 21
Regal Realty Inc., Brokerage*
The Local Experts
Jeyan Inpanayagam Comm.Eng
Sales Represntative
Direct: 416-877-3300
Tel: 416-291-0929
www.ihomeandcondo.com

GT Brokers
Protect You & Your Family
"JOIN OUR TEAM"
Get your industry licence at no cost...
Comprehensive skills training and mentoring by over 30 yrs.Experienced industry legend
Free in class teaching
Guna Thuraisingham
416 528 1407

வீடு விற்க... வாங்க...
Ram Krishnamurthy
SALES REPRESENTATIVE
Direct 416-526-4996
ROYAL LEPAGE
IGNITE REALTY- BROKERAGE 795 Milner Ave. Toronto. ON M1B 3C3 | Off: 416-282-3333

PAIN?
• PHYSIOTHERAPY • CHIROPRACTIC
• MASSAGE • ORTHOTICS
• ACUPUNCTURE • CAR ACCIDENTS
PRO-LIFE WELLNESS CENTRE
416.357.2808 OPEN 7 DAYS
1-1221 Markham Rd Toronto
COME FEEL THE DIFFERENCE!
AJAY THAVAM
416.704.8074
www.prolifewellnesscentre.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









































Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ekuruvi.com
www.ekuruvi.com
Tel: 416-272-8543
Email: ekuruvi@gmail.com

**இகுருவி பத்திரிகை ஒரு டொலர் சிவத்த உண்டியல் ... நம்பிக்கை**

வர்தக நிறுவனங்கள் தோறும் எமது சிவப்பு உண்டியல்கள் இகுருவிப் பத்திரிகை அருகில் கரம் கூப்பி உங்களின் ஒவ்வொரு டொலர்களையும் அன்போடு பெற்றுக் கொள்கிறது. ஜூன் மாதத்திலிருந்து உங்கள் அன்பினாலும், ஆதரவினாலும் சிவப்பு உண்டியல்களை மகிழ்வித்தீர்கள்.

சிலர் இத்தனை இலவச பத்திரிகைகளுக்குள் காசு பத்திரிகை சாத்தியமா? உண்டியலுக்குள் பணம் போடாமல் பத்திரிகையை எடுத்துச் சென்றால் என்ன செய்வீர்கள்? போன்ற கேள்விகள் எம்மை நோக்கி வந்த வண்ணமே உள்ளன. இதற்கு எங்களிடம் ஒரே பதில் தான் உண்டு அந்தப் பதில்....... நம்பிக்கை தான் வாழ்க்கை.



நீங்கள் பத்ரிகைக்காக கொடுக்கும் ஒவ்வொரு டொலர் அன்பளிப்புக்கும் புதிய வெளிச்சமூடாக தாயகத்தில் பல கல்வி , பொருளாதார , செயற்பாடுகளை செய்யலாம் என்று நம்புகின்றோம்

இந்த ஓகஸ்ட் மாத இகுருவி பத்திரிகையை அதற்குரிய பெறுமதியான $1 ஐ சிவத்த உண்டியலில் வழங்கி வாங்குவீர்கள் என்று அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்

## இந்த இதழில்....

உளவியல் பாதிப்புகளும் உயிர்போகும் அவலங்களும் ரமணன் சந்திரசேகரமூர்த்தி

முதல்வராக Doug பதவியேற்ற ஒரு மாதத்தில் தர்ஷினி உதயராஜா

மார்க்கம் 7ம் வட்டாரத்தில்: தடுமாறும் தமிழர் பிரதிநிதித்துவம் ரமணன் சந்திரசேகரமூர்த்தி

வரம்பு மீறுகிறதா மாகாண அரசு? Triden V Balasingam

மனித உரிமைகளின் துஷ்பிரயோகங்கள்! கனடாவில் எங்கே போகின்றது சிவ பஞ்சலிங்கம்

கனடாவில்; உருவாக்கப்படும் மாறுபட்ட தமிழ் இனங்கள் குரு அரவிந்தன்

கட்டாயமாக வேலைக்குத் திரும்பக் கோரும் சட்டமூலம் குயின்ரஸ் துரைசிங்கம்

குடும்ப அரசியல் எதிர்காலம்? மூக்கு கண்ணாடி ரதன்

பரதத்தின் பன்முக ஆளுமை அகேனம் வசந்தா டானியல்

# நாளை

நாளை என்பது நம்பிக்கை நாளை என்பது வாழ்க்கை. நாளை என்பது எதிர்பாப்பு. இப்படியாக நாளை என்பது நம்மை சுமந்து செல்கிறது.

நாளையை நம்ப மறுக்கும் மனிதர்களால் எவற்றிலும் நம்பிக்கை வைக்க முடியாது.வாழுதலில் ஈடுபாடு வைக்க முடியாது. கிடைக்கப்போகும் வெற்றியை எதிர்பார்த்திருக்க முடியாது.

நாளை எனும் நினைவலைகள் நம்மிடையே வீசியிராது போயிருந்தால் ஈழத் தமிழர்கள் புலம்பெயர்வு எனும் நம்பிக்கையை வாழ்க்கையை எதிர்பார்ப்புகளை கனவில்கூட கண்டு களித்திருக்க மாட்டார்கள்.எண்பதுகளில் உக்கிரம் அடைந்த இன்றைய புலம்பெயர்த் தமிழர்களுக்கு நாளை எனும் சொப்பனத்தை கொடுத்தது.ஒரு பகுதியினர் போராட மறுபகுதியினர் பல்வேறு தேசங்களுக்கும் புலம் பெயர்ந்தார்கள்.

இன்று ஏறத்தாள முப்பது ஆண்டுகள் கடந்து விட்ட நிலையில் வந்து குடியேறிய நாடுகளில் நாங்கள் வதிவிட உரிமை வீடுவாசல் கல்வி வியாபாரம் அரசியல் அடுத்த தலைமுறைகளின் வளர்ச்சி என எல்லா நிலைகளிலும் நிமிர்ந்து நிற்க கற்றுக் கொண்டோம்.

உதாரணமாக கனேடிய நாட்டிற்கு புலம் பெயர்ந்தவர்களில் பலர் வர்த்தகத்துறையில் மகாத்தான் வெற்றியை அடைந்துள்ளார்கள்.

எங்கள் சமுகத்துக்குள் வியாபாரம் செய்பவர்களாக இருந்தால் என்ன பெரும்பான்மை சமுகத்தோடு வணிகம் செய்பவர்களாக இருந்தால் என்ன, கலைத் துறையில் இருந்தால் என்ன ஊடகத்துறையில் இருந்தால் என்ன? அரச உத்யோகமாக இருந்தால் என்ன.. எங்களுக்கு நாளை என்ற நம்பிக்கை, நாளை என்ற வாழ்க்கை, நாளை என்ற எதிர்பார்ப்பு கொடுத்த வெற்றிகளே இவைகள்..!

புலம்பெயர் தேசத்து இன்றுகள் இன்பமாக இருப்பதால் நம்மால் நாளைகளைப்பற்றி நன்றாக சிந்திக்க முடிகிறது. இது எங்களுக்கு எப்படி சாத்தியமாகிறது. வார விடுமுறைகள் எல்லாம் ஏதாவது ஒரு கொண்டாட்டத்தில் நாம் இணைந்து கொள்வோம்.பொது அமைப்புகளும் அரசியல் அமைப்புகளும் அவ்வப்போது வைக்கும் விருந்துபசாரங்களும் விருது விழாக்களில் பங்காளாராகும் போது எங்களது சமுக அந்தஸ்தை உயர்த்துகிறது. கோடை காலத்து திறந்தவெளி குதூகலங்கள் குளிர்காலத்து உள்ளரங்க களியாட்டங்கள்.ஊர் ஒன்றுகூடல் பழைய மாணவர் ஒன்று கூடல் திருமணம் பூப்புனித நீராட்டுவிழா, மணி விழா, நூல் வெளியீட்டு விழா, அரங்கேற்றம், விழாவுக்கு விளம்பர அனுசரணை கொடுத்து பொன்னாடை வாங்குதல் என்பன எங்களை இந்த சமுகத்தோடு தொடர்பில் வைத்திருக்கிறது. இதுவே எங்களின் நாளைகளை திட்டமிடவும் உதவுகிறது.

நாளைய ஜெயித்தலின் நேரத்தை செலவிடுவதாலோ என்னவோ நமது நேற்றைகளை நாம் மறந்து விடுகிறோம்.

துப்பாக்கி முனையில் தன்னை நிறுத்திவிட்டு நம்மை உயிர் பிழைக்க வைத்த எத்தனையோ நம் நலம் விரும்பிகள் நமது இன்றைகளையோ நாளைகளையோ பார்ப்பதற்கு உயிரோடு இல்லை. ஆனால் அவர்களது உயிரை மதித்தே நாம் இங்கு இன்று இவ்வாறு இருக்கிறோம் என்பதும் அசைக்க முடியாத உண்மை.

அந்த ஜீவன்கள் விடை அனுப்பும் போதெல்லாம் கேட்டது ஒன்றே ஒன்றுதான் உலகத்தின் எத்திக்கு போனாலும் உலகத் தமிழனாய் இரு என்பதுதான்.

ஆனால் காலம் என்னவோ எங்களை சிறிது சிறிதாக உலோகத் தமிழனாய் மாற்றுகிறதோ என்ற சந்தேகம் ஏற்படத் தொடங்கி விட்டது.

எமது அடுத்த தலை முறையில் பெரும்பாலானவர்கள் ஆங்கிலம் பேசி கொத்து ரொட்டி சாப்பிடும் சமுகமாக மாறிவிட்டது.

நாங்களும் காலச்சக்கரத்தின் ஓட்டத்துடன் நேற்றைய நமது உயிர் காப்புகளையும் நமக்காக காவல் நின்று அனுப்பி வைத்தவர்களையும் மறந்து விடுகிறோம்.

யுத்தம் நிறைவு பெற்று பத்து வருடங்கள் வந்தோடி விடுகிறது.கடைசி யுத்தத்தில் நிராயுதமாக்கப்பட்டு,உணர்வுகள் களையப்பட்டு உயிர்கள் போக்கப்?பட்ட ஒரு சமுகம் இன்னும் கொடுத்து வாழ்ந்த தேசத்தில் இன்று கையேந்திதானே நிற்கிறது.

முகநூலிலும், இதர சமுக வலைத்தளங்களிலும் இணையம் வாயிலாகவும் எத்தனியோ பேருக்கு சுட்டுவிரல் காட்டும் எங்களால் இதுவரைக்கும் ஒன்று சேர்ந்து நமது சமுகம் தன்னிறைவு பெறும் அளவிற்கு ஓர் கட்டுமானத்தை அமைக்க முடியவில்லை என்பது மிகவும் கவலைக்குறியதாகும்.

எங்களிடம் இருக்கும் நாளைகளைப்போல அவர்களுக்கு ஒன்று வேண்டும்.அதை நாங்கள்தான் அவர்களுக்கு உருவாக்கி கொடுக்க முடியும். முப்பது வருட யுத்தம் முப்பது வருட அனுபவத்தை முதிர்ச்சியை சிந்தனை திறனை அவர்களிடமிருந்து காவு கொண்டுவிட்டது. அதனை மீளச்செலுத்தி அவர்களை மீண்டும் நம்மோடு இணைத்துக் கொள்ளும் பாரிய பொறுப்பு நம்மிடம் உள்ளது.

கனேடிய தேர்தலில் நின்று கொண்டு வன்னியை வாழ வைப்பேன் என்று அதை கூறியவர்களின் தமாசுகளுக்கு நாங்கள் எடுபடாமல் பிரதம மந்திரிக்கு இந்திய உடை உடுத்தி பொங்கல் வாழ்த்து கேட்கும் காமடிகளில் மயங்காமல் உளமாற ஒன்று பட்டு பொருளாதாரத்திட்டம் தீட்டினால் மட்டுமே நாளை என்பது போர்க்களம் கண்டு எங்களின் கைகளை எதிர்பார்த்திருக்கும் மனிதர்களுக்கு நாம் செய்யும் கைமாறாகும்.

அதுவே நாளை நமது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரம்பு மீறுகிறதா மாகாண அரசு?

டொரோண்டோ மாநகரசபை உறுப்பினர்களை 25 ஆக குறைப்பதாக மாகாண முதல்வர் Ford அறிவித்ததில் இருந்து தொடர்ச்சியாக நடந்தேறும் விடயங்கள் தொடுக்கும் ஒற்றை கேள்வி இதுதான். தனது அதிகாரங்களை சுய நிகழ்ச்சிநிரலுக்கு ஏற்ப பிரயோகிப்பதன் மூலம் மாகாண அரசு அத்துமீறி செயற் படுகிறதா என்பதே !

இவற்றை நியாயப்படுத்தும் அல்லது மறுதலிக்கும் வழமையான கட்சி சார் அரசியல் மூளைச்சலவைகளுக்கும் போதனைகளுக்கும் அப்பால் இது குறித்த தெளிவான விளக்கத்தை தமிழர்கள் மத்தியில் ஏற்படுத்துவதே இக்கட்டுரையின் குறிக்கோள்.

கேள்வியின் முழுமையான சூத்திரத்தை புரிந்துகொள்வதற்கு நாங்கள் 1998 இல் பழமைவாதி மைக் ஹாரிஸ் இன் அரசாங்கம் கொண்டுவந்த டொரோண்டோ பெரும்பாக இணைப்பு பற்றி சிந்திக்க வேண்டும். டொரோண்டோ நகர், வடக்கு



மற்றும் கிழக்கு யோர்க், யோர்க், எட்ரோபிகோ, ஸ்கார்பரோ உள்ளிட்ட 6 நகரசபைகளை இணைத்து தனிபெரும் டொரோண்டோ நகராக மாற்றுவதன் மூலம் 136மில்லியன் டொலர்களை வருடாந்தம் சேமிக்கும் யுடோபியன் கனவு அது. இதன் மூலம் 4000கும் அதிகமான மேலதிக தொழிலாளர்களை பணிக்கு அமர்த்த நேர்ந்ததோடு 275மில்லியன் மேலதிக செலவும் ஏற்பட்டது. அப்போது இந்த இணைப்பு குறித்து பெரும் எதிர்ப்பு கிளம்பியதோடு இதனை நிரூபித்த இரண்டில் மூன்று பெரும்பான்மையுடைய வாக்கெடுப்பும் பழமைவாத அரசால் நிராகரிக்கபட்டது.

அன்று மைக் ஹாரிஸ் பிரேரித்த திட்டத்தில் ஒன்றிணைந்த டொரோண்டோ பெருநகரில் காலப்போக்கில் வட்டாரங்களை குறைத்து மீள் வரைபு செய்வதும் ஒன்றாகும். அன்றைய இந்த தோல்வியடைந்த பழைய கள்ளை புதிய மொந்தையில் ஊற்றுவதன் மூலம் முதலாளித்துவ நன்மைகள் பெறுவதே சமீபத்திய குளறுபடிகளின் பின்னணி. தவிர மாகாண முதல்வர் Ford நகர பிதாவாக போட்டியிட்டு தோல்வியடைந்த டொரோண்டோ நகரசபை மீதும் காழ்ப்புணர்வு மிகையான தமது அரசியல் எதிரிகள் மீதும் பழிதீர்ப்பதும் துணை பின்னணிகளாகவும் இருக்கலாம்.

தமது செயற்பாடுகளை நியாயப்படுத்த குயீன்ஸ் பார்க்கில் பேசிய முதல்வர் Ford டொரோண்டோ நகரசபை உறுப்பினர்கள் மதுபோதையில் மிதக்கும் மாலுமிகளை போல் செயற்படுபவர்கள் என்றும் நகராட்சி விடயங்களில் அவர்கள் இடியப்ப சிக்கல் போன்ற நிலைமைகளை தோற்றுவிப்பவர்கள் என்றும் தெரிவித்தார். உண்மையில் டொரோண்டோ மாநகர சபை அவ்வளவு மோசமானதா என்றால் இல்லை என்பதே உடனடி பதில்.

Ford அரசாங்கத்தின் பிரேரணைகளின் படி 47 மாநகரசபை உறுப்பினர்கள் எண்ணிக்கையை 25ஆக குறைப்பதில் 25 மில்லியன் சேமிக்கமுடியுமாம். இது டொரோண்டோவின் மொத்த செலவீனத்தின் ஒரு வீதத்தின் ஒன்றில் இருபது பங்கு. இதன் மூலம் பெரிதாக எதுவும் சாதித்து விட முடியாது என்பதோடு இதன் விளைவாக வரும் அதிகாரத்துவம் சார்ந்த மேலதிக செலவுகள் இந்த 25 மில்லியன் சேமிப்பிலும் பலமடங்கு அதிகம் என்பதே உண்மையாகும். இவை எல்லாவற்றிட்கும் அப்பால் தமிழர்கள் போன்ற சிறுபான்மையினத்தவரின் எண்ணங்கள் நகரசபையில் பிரதிநிதித்துவப்படுத்த படமுடியாமல் போகும் அபாயமும் உருவாகியுள்ளது.

நிலக்கீழ் தொடருந்து கட்டுமானம் தொடர்பாக தெளிவான ஒரு முடிவை டொரோண்டோ நகரசபை எடுக்க முடியாமல் திண்டாடுவதும் நகரசபை உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரிப்புடன் தொடர்புபடுத்தபடுகிறது. பலபில்லியன் முதலீட்டை அடிப்படையாக கொண்ட நிலக்கீழ் திட்டங்கள் பலகாலமாக திரிசங்கு நிலையில் இருப்பதன் பின்னணி அதுவல்ல. முன்பு பதவியில் இருந்த மாகாண லிபரல் அரசின் தலையீடுகள் நிதி வழங்கல் தொடர்பான கொள்கை மாற்றங்கள் உட்பட சட்ட நடவடிக்கைகள் மற்றும் சிக்கலான பாதாள கட்டுமான பொறியியல் தொடர்பான பிரச்சினைகளுமே முதன்மையானவை. இப்போது நத்தை வேகத்தில் நகர்ந்துகொண்டிருக்கும் எக்ளிண்டன் மெது தட தொடருந்து பாதை நிர்மாணம் இதற்கு நல்ல உதாரணமாகும்.

கிடப்பில் போடப்பட்ட அனைத்து தொடருந்து தடங்கலும் இப்போது பாவனையில் இருந்திருந்தால் டொரோண்டோவில் அதிகரித்து வரும் வாகன நெரிசல் கட்டுக்குள் இருந்திருக்குமா என்றால் துரதிஷ்டவசமாக பழமைவாதிகள் இங்கேயும் தவறான நிலைப்பாட்டிலேயே இருக்கின்றார்கள்.

டொரோண்டோவில் தோன்றும் சிக்கலான வாகன தேக்க நிலைக்கு காரணம் நகருக்கு உள்வரும் வெளிச்செல்லும் வாகனங்களும் பல்வேறுபட்ட கட்டமைப்பு பராமரிப்பு வேலைகளுக்காக மூடப்படும் வீதிகளுமே காரணங்கள் ஆகும். இவற்றை தொடருந்து தடங்களை விஸ்தரிப்பதன் மூலம் சரிசெய்ய இயலாது என்பதே வெளிப்படை.

மாறாக கம்பெனிகள் தமது நடைமுறை சாத்தியம் உள்ள தொழிலாளர்களை கணிசமான நாட்கள் வீட்டில் இருந்து தொழில்படவைப்பதன் மூலமாகவும் கனரக வாகனங்களை உச்ச நேரங்களில் நகரின் மத்திய பகுதிக்கு செல்வதை தடுப்பதன் மூலமும் எளிதாக



தீர்க்கலாம். இவற்றிற்கு மாகாண அரசு பல ஆக்கபூர்வமான முதலீடுகளை செய்ய வேண்டி வரும் என்பதோடு தற்போது பதவி ஏற்றுள்ள அரசு தீவிர வலதுசாரிகளுக்கும் பின்கதவு முதலாளிகளுக்கும் நன்மை பயக்காத திட்டங்களில் நாட்டம் காட்டாது என்பதுமே பேருண்மை ஆகும்.

நகரசபை தன் பங்குக்கு என்ன விதமான எதிப்புகளை காட்ட போகிறது என்று சிந்தித்தால் பழமைவாத கட்சியின் அனுதாபியும் 13 வட்டார நகரசபை உறுப்பினருமான றொக்கோ அச்சன்பொங் , Ford அரசாங்கம்

நியாயமற்ற ரீதியில் நடந்து கொள்வது அதிருப்தி அளிப்பதாகவும் தான் இதுகுறித்து மாகாண அரசுக்குள்ள அதிகாரங்களை பரிசீலிக்க உச்சநீதிமன்றை நாடவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். நகரசபை உறுப்பினர்கள் மாகாண அரசை எதிர்ப்பதாக வாக்களித்துள்ள நிலையில் கணக்காளர்கள் மற்றும் சட்ட ஆலோசகர்கள் மூலமாக அரசியலமைப்பில் உள்ள வரைபுகளை நகரபிதா தமக்கு சாதகமாக பயன்படுத்தலாம்.

மத்திய லிபரல் அரசு இவை யாவற்றையும் விரும்ப தகாத பொறுமையுடன் பார்த்துக் கொண்டிருந்தாலும் Ford அரசு அத்துமீறுகிற சந்தர்ப்பத்தில் குயின்ஸ் பார்கை தனிமைப்படுத்திவிட்டு நிதிவழங்கல்களை நேரடியாக நகரசபைகளுக்கு வழங்க எத்தனிக்கலாம். அரசியலமைப்பின் படி நகரசபைகளின் தோற்றுவாய் மாகாண அரசு ஆகையால் இங்கேயும் பல சிக்கல்கள் தோன்றும். மத்திய அரசு வழங்கும் மாகாண நிதி ஒதுக்கீடுகளின் மூலமாக அழுத்தம் கொடுக்கும் சந்தர்ப்பத்தில் ஒண்டாரியோ மாகாணம் NAFTA தொடர்பில் மத்திய அரசுக்கு ஒத்துழைப்பு வழங்காமல் பின்வாங்கலாம்.

பழமைவாதிகள் ஆட்சிக்கு வந்து முப்பது நாட்கள் கடந்துள்ள நிலையில் ஆக்கபூர்வமற்ற அல்லது இஸ்திரமற்ற அமளிதுமளிகள், தினம் எதாவது ஒரு வம்பை உருவாக்கி அதன் மூலமாக காலத்தை ஓட்ட முயலும் தன்மை இவை யாவும் ஒன்றை தான் நினைவூட்டுகிறது. தெற்கில் அமெரிக்க அதிபர் Trump இன் வழிமுறைகள் ஒண்டாரியோவின் பழமைவாத அரசுக்கு ஈர்ப்புமிக்கதாக தென்படுகிறதா என்கிற பீதி மிக்க கேள்வியே அதுமாகாண முதல்வரிடம் குவிந்து கிடக்கும் அதிகாரங்கள் இந்த கேள்விக்கான பதிலை இனிவரும் நாட்களில் எடுத்துணர்த்தும்.

கடைசியாக எஞ்சியிருக்கும் மிகப்பெரிய கேள்வி இந்த அரசியல் பூகம்பத்தின் மத்தியில் தமிழர்களின் கணிசமான விருப்புவாக்குகளுடன் குயீன்ஸ்பார்க் போன நம்மவர்களின் நிலை என்ன என்பதே. அவதானித்த வரையில் பழமைவாத தமிழர்கள் அமைச்சு பதவிகள் கிடைக்கும் என்கிற தவறான கற்பனை துயரத்தில் இருந்து இன்னமும் முழுதாக வெளிவராத நிலையில் இருக்கின்றனர். அமைச்சு பதவிகள் ஒதுக்கீடுகள் எல்லாம் சிறுபான்மையினரின் அபிலாசைகளை நிராகரிப்பதாகவே உள்ளன.


இந்நிலையில் இவர்கள் மாகாண அரசில் அழுத்தம் மிக்க அல்லது தமிழ் தேசிய நிகழ்ச்சி நிரலுக்கு ஆக்கபூர்வமான பங்களிப்பு வழங்கக்கூடிய ஏதேனும் ஒன்றை செய்யமுடியுமா என்பது சந்தேகமே.

அவ்வாறான நிலையில் சுய வேலைத்திட்டங்கள் மூலமாக நான்கு வருடங்களில் தொகுதிகளில் தன்னம்பிக்கையுடன் இறங்கி வாக்கு சேகரிப்பது என்பது இம்முறை மாதிரி அல்லாது தனிப்பட்ட வெற்றியின் பாற்பட்டது. ஒரு சிறுபான்மை இனம் சார்ந்ததல்ல!

By Triden V Balasingam



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உளவியல் பாதிப்புகளும் உயிர்போகும் அவலங்களும்

கனடாவில்தமிழ்மக்கள் அதிகளவில் வாழும் பெருநகரமான ரொரன்ரோ உண்மையில் பாதுகாப்பான நகரமா என்ற கேள்வி இப்போது பரவலாக எழுப்பப்படுகின்றது.

இந்த ஆண்டில் ரொரன்ரோ பெரு நகரில் இடம்பெற்ற வன்முறைகளில் 58 பேர் உயிரிழந்துள்ளதாக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

Younge வீதியில் வாகனம் ஒன்று பாதசாரிகள் மீது மோதியதில் 10 பேர் உயிழந்தமை இந்த ஆண்டு இடம்பெற்ற மிக மோசமான வன்முறையாக பதிவாகியிருந்தது.

ஏனைய ஆண்டுகளை விட இந்த வருடம் வன்முறைகளினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை இருமடங்காக அதிகரித்துள்ளதாக தெரியவந்துள்ளது.

இதுவரை 228 துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் பதிவாகியுள்ளதாகவும் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்தவர் களின் எண்ணிக்கை 71 சதவீதம் அதிகரித்துள்ளதாகவும் காவல்துறை யின் புள்ளி விபரங்கள் சுட்டிக் காட்டுகின்றன.

துப்பாக்கி வன்முறைகளில் இந்த ஆண்டில் இதுவரை 30 பேர் உயிரிழந்துள்ளனர்.

கடந்த வருடம் 92 கொலைச் சம்பவங்கள் ரொரன்ரோவில் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கனடாவின் பெரு நகரங்களில் அதிகளவான கொலைகள் இடம்பெற்ற நகரமாக ரொரன்ரோ நகரம் கடந்த ஆண்டு பெயரிடப்பட்டிருந்தது.

வன்கூவரில் 52 பேரும் எட்மண்டன் நகரில் 49 பேரும் மொன்ரியல் நகரில் 46 பேரும் கடந்த வருடம் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

மன அழுத்தங்களுக்குட் பட்டவர்கள் கூட துப்பாக்கிகளை வைத்திருப்பதற்கு அனுமதிக்கபடுவதே இதற்கு பிரதான காரணம் என தெரிவிக்கப்படுகின்றது.




கடந்த மாதம் ரொரன்ரொவின் டன்போர்ட் வீதியில் உள்ள உணவகத்தில் உணவு அருந்திக் கொண்டிருந்த அப்பாவிப் பொது மக்கள் மீது தாக்குதல் நடத்திய 29 வயதான பைசல் ஹூசைன் என்ற 29 வயதுடைய நபரும் கடுமையான மன அழுத்தத்திற்கு உட்பட்டிருந்தவர் என அவருடை குடும்பத்தினர் குறிப்பிடுகின்றனர்.

பைசல் ஹூசைன் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 18 வயதுடைய மாணவி ஒருவரும் 10 வயதுடைய சிறுமி ஒருவரும் உயிரிழந்துள்ளனர் மேலும் 13 பேர் காயமடைந்துள்ளனர்.

இந்த தாக்குதலை தொடர்ந்து காவல்துறையினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் பைசல் ஹூசைனும் கொல்லப்பட்டதாக அறிவிக்கபட்டுள்ளது.

ரொரன்ரோவில் இடம்பெற்ற துப்பாக்கி வன்முறைகளில் பெரும் பாலனவற்றில் உயிரிழந்தவர்கள் அப்பாவிகள் என்றும் எழுந்தமான மான முறையில் மேற்கொள்ளப்படும் துப்பாக்கி பிரயோகங்களிலேயே அதிகளவானோர் பாதிக்கப் படுவதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

இந்த துப்பாக்கி வன்முறைகளில் பயன்படுத்தபடும் துப்பாக்கிகள் குறித்து காவல்துறையின் அக்கறை செலுத்தி வருகின்றனர்.

பைசல் ஹூசைன் கடந்த பல வருடங்களாக மன உலைச்சலுக்குட் பட்டிருந்ததாகவும் அதற்கான சிகிச்சைகளை தொடர்ந்து பெற்று வந்ததாகவும் அவரின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

மன அழுத்தத்திற்கு உட்பட்டு அதற்கான சிகிச்சைகளை பெற்று வந்த ஒருவருக்கு எவ்வாறு துப்பாக்கி கிடைத்தது என்பதே பலரிடமும் எழுந்துள்ள கேள்வி.

2012 ம் ஆண்டிற்கு முன்னர் இடம்பெற்ற தாக்குதல் சம்பவங்களில் பயன்படுத்தப்பட்ட துப்பாக்கிகளில் 75 வீதமானவை அமெரிக்காவில் இருந்து சட்டவிரோதமான முறையில் கனடாவிற்கு கொண்டு வரப்பட்டவை என தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் கடந்த வருடமும் இந்த வருடமும் ரொரன்ரொவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவங்களில் பயன்படுத்தப்பட்ட துப்பாக்கிகளில் அரைப் பங்கிற்கும் அதிகமானவை கனடாவிலேயே பெறப்பட்டவை என காவல்துறையினர் குறிப்பிடுகின்றனர்.

கனடாவில் துப்பாக்கிகளை வைத்திருப்பதற்கான அனுமதிப் பத்திரத்தை கொண்டுள்ளவர்கள் தமது துப்பாக்கிகளை சட்டவிரோதமான முறையில் விற்பனை செய்வதாகவும் அவ்வாறன துப்பாக்கிகள் மூலமே அதிகளவான தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

துப்பாக்கி அனுமதிப்பத்திரம் வைத்துள்ளவர்கள் பல துப்பாக்கிகளை கொள்வனவு செய்து அவற்றை அதிக விலைக்கு விற்பனை செய்து வருகின்றனர்.

இவ்வாறு சட்டவிரோமான முறையில் துப்பாக்கிகளை விற்பனை செய்யும் நடவடிக்கைகளை முடிவிற்கு கொண்டு வருவதற்கு உடன் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று ரொரன்ரோ நகர பிதான ஜோன் ரொரி அவர்கள் அறிவித்துள்ளார்.

இதேவேளை கடந்த மாதம் டன்போர்ட் வீதியில் இடம்பெற்ற தாக்குதல் மற்றும் ஜங் வீதியில் வாகனத்தால் மோதி பாதசாரிகள் கொல்லப்பட்ட சம்பவம் ஆகியவற்றின் பின்னால் மன அழுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் இருந்துள்ளமை தெரியவந்துள்ளது.

கனடாவில் வாழும் ஐந்து பேரில் ஒருவர் மன நலம் சார்ந்த சாவல்களை எதிர் கொள்ளவதாகவும் 40 வயதை அடையும்போது இரண்டுபேரில் ஒருவர் மன நல பாதிப்பிற்கு உட்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த எண்ணிக்கையானது மிக ஆபத்தான எதிர்விளைவுகளை எதிர்காலத்தில் ஏற்புடுத்தும் என்று உளவள நிபுணர்கள் எச்சரித்து வருகின்றனர்.

15 வயதிற்கும் 24 வயதிற்கும் இடைப்பட்ட இளம் பிராயத்தினரே அதிகளவில் உளவளப் பாதிப்புகளை எதிர் கொள்வதாகவும் இந்த வயதுடையவர்கள் அவர்களின் குடும்ப அங்கத்தவர்களால் மிகவும் கவனமாக கையாளப்பட வேண்டியது அவசியம் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஒன்ராறியோ மகாணத்தில் உள்ள உயர்தர பாடசாலை மாணவர்களில் 34 வீதமானவர்கள் கடுமையான மன உளைச்சலுக்கு உட்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

கனடாவில் விசேட தேவையுடைய வர்களின் எண்ணிக்கை அதிகரிப்பில் உளவியல் பாதிப்புகளை எதிர் கொண்டுள்ளவர்கள்; பெரும் பங்கு வகிக்கின்றனர்.

ஒவ்வொரு வருடமும் சுமார் 4000 பேர் மன உலைச்சல் காரணமாக கனடாவில் தற்கொலை செய்து கொள்கின்றனர் சராசரியான நாளொன்றிற்கு 11 தற்கொலைகள் கனடாவில் இடம்பெறுவதாக புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.


12 வீதமான உயர் கல்லூரி மாணவர்கள் தற்கொலை செய்து கொள்வது குறித்து தீவிரமான ஆராய்ந் துள்ளதாகவும் சுமார் 3 விதமான மாணவர்கள் தற்கொலை முயற்சியில் ஈடுபடுவதாகவும் குறிப்பிடப்படுகின்றது.


உயர் கல்வி கற்கும் மாணவர்கள் மீது பெற்றோர் கூடுதல் கவனமும்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அக்கறையும் கொள்ள வேண்டியது அவசியம் என்றும் அவர்களுடன் திறந்த உரையாடல்களை மேற் கொண்டு அவர்களின் மன இறுக்கத்தை போக்குவதற்கு பெற்றோர் முன்வர வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

ஒன்ராறியோ மாகாணத்தில் அதிகரித்து வரும் உளவியல் தாக்கங்களை எதிர் கொள்வதற்கு போதுமான மருத்துவ ஆலோசனை வசதிகள் ஏற்படுத்தப்படவில்லை என தொடர்சியாக விசனம் வெளியிடப்படுகின்றது.

ஒன்ராறியோ மகாணத்தின் முன்னை அரசாங்கம் எதிர் வரும் நான்கு ஆண்டுகளில் ஒன்ராறியோவில் உளவியல் சிகிச்சைகள் மற்றும் ஆற்றுப்படுத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நிலையங்களை விரிவுபடுத்தவதற்கும் மாகாணத்தின் மன நலன் பேணும் திட்டத்திற்காகவும் 2.1 பில்லியன் டொலர் நிதியினை ஒதுக்குவதாக அறிவித்திருந்தது.

இந்த நிதி ஒதுக்கீட்டின் மூலமாக உயர் கல்வி கற்றும் மாணவர்கள் மற்றும் இளம் வயதினரின் உளவியல் பிரச்சினைகளை எதிர் கொள்வதற்கான ஏற்பாடுகளை வினைத்திறன் மிக்கதாக மாற்ற முடியும் என்று முன்னை அரசாங்கம் நம்பிக்கை வெளியிட்டிருந்தது.

எனினும் தற்போதைய கொன்சவேற்றி அரசாங்கம் அந்த திட்டத்தை இரத்துச் செய்வதாக அறிவித்துள்ளதுடன் எதிர் வரும் 10 வருடங்களில் ஒன்ராறியோவில் மன நலன் பேணும் திட்டங்களை முன்னெடுப்பதற்கு 1.9 பில்லியன் டொலர் நிதியினை ஒதுக்குவதாக அறிவித்துள்ளது. இந்த நிதியின் இதன் ஒரு பகுதி உளவியல் தாக்கம் காரணமாக ஏற்படும் வன்முறைகளை கையாளும் காவல் துறையினருக்கு விசேட பயிற்சிகைள வழங்குவதற்கும் பயன்படுத்தப்படவுள்ளதாக மாகண முதல்வர் டக் போர்ட் அறிவித்துள்ளார்.

ஒன்ராறியோ மகாணத்தை ஆரோக்கியமான மனிதர்கள் வாழும் மகாணமாக மாற்றுவதற்கு இங்குள்ள உளவியல் பிரச்சினைகளை வினைத்திறனுடன் கையாளக் கூடியதான திட்டங்கள் விரைவாக உருவாக்கப்பட வேண்டும் என்று சமூக ஆர்வலர்கள் வலியுறுத்தி வருகின்றர்.

இதன் மூலமாகவே இந்த மாகாணத்தையும் ரொரன்ரோ நகரையும் பாதுகாப்பானதாக மாற்ற முடியும் என்று அவர்கள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

**ரமணன் சந்திரசேகரமூர்த்தி**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முதல்வராக Doug Ford பதவியேற்ற ஒரு மாதத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள மாற்றங்கள், Ontario மாகாணத்தை எங்கே கூட்டிச் செல்கிறது?

15 வருடங்களுக்குப் பின்பு Ontario மாகாணத்தை நிர்வகிக்க றிசி கட்சி தெரிவுசெய்யப்பட்டுள்ளது. இதன் 26ஆவது முதல்வராக 53 வயது Doug Ford அவர்கள் Jun 29, 2018இல் பதவியேற்றுக் கொண் டார். இதன் பின்பு, கடந்த ஒரு மாதத்தில் மாகாணத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் என்ன என்பது பற்றி அலசுவதே இந்த கட்டுரையின் பிரதான நோக்கமாகும்.

புதிய அமைச்சரவையில் 21 பேர் இடம்பெற்றுள்ளனர். இதில் Doug Ford அவர்கள் தன்னுடன் கட்சியின் தலைமைக்கு போட்டியிட்ட Christine Elliottஐ துணை முதல்வர் மற்றும் சுகாதார, நீண்ட கால பராமரிப்புத் துறை அமைச்சராகவும், Caroline Mulroneyஐ அரச வழக்கறிஞர் மற்றும் பிரெஞ்சு மொழி அலுவல்கள் அமைச்சராகவும் நியமித்துள்ளார். முதியோர் நல அமைச்சராக தெரிவுசெய்யப்பட்ட 81 வயதான RaymondCho தவிர்ந்த ஏனையோர், பல் கலாச்சார மக்களை பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் இல்லை என்றும், 7 பெண்கள் மட்டுமே அமைச்சரவையில் இடம்பெறுகின்றமையும் சுட்டிக் காட்டப்படுகிறது.

அமைச்சரவை குறைக்கப்பட்டதன் காரணமாக **ஒன்றுக்கு மேற்பட்ட பொறுப்புக்களை சிலர் வகிக்கவேண்டியிருக்கும்.** உதாரணமாக சக்தி துறை அமைச்சர் Greg Rickford, வடபகுதி வளர்ச்சித் திட்டங்கள் , சுரங்க தொழில்துறை, பூர்வகுடிகள் விவகாரம் அனைத்தையும் கவனிக்கவேண்டியவராகிறார். இதனால் முன்னைய அரசின்கீழ் குற்றஞ் சுமத்தப்பட்ட Hydro One விவகாரத்தை கையாள்வதில் சிரமங்கள் ஏற்படலாம். அத்துடன், **காலநிலை மாற்றம், குடிவரவு, இனப்பாகுபாட்டுக்கு எதிரான நடவடிக்கைகள், ஆராய்ச்சி, புத்தாக்கம், விஞ்ஞானம் தொடர்பில் எந்த அமைச்சு பதவிகளும் இல்லை** என்பதும் குறிப்பிடத்தக்கது

றிசி கட்சி பதவியேற்றது முதல் இதுவரையான மாற்றங்களை திகதி வாரியாகக் கவனிக்கலாம்:

June 30 - தனியார் மருந்து திட்டம் (Private Drug Plan) உள்ள 25 வயதுக்குட்பட்டவர்களுக்கு — **மாகாணத்தின் சுகாதார காப்பீட்டு திட்டத்தை (OHIP +) இல்லாமல் செய்தல்.**

கடந்த லிபரல் அரசால் இந்த திட்டத்தின் கீழ், வைத்தியரால் பரிந்துரைக்கப்படும் மருந்துகள் (Prescriptions) இலவசம் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. இத்திட்டத்தை ரத்து செய்ததன் மூலம், காப்புறுதி நிறுவனங்களுக்கு அரசு செலுத்தும் பெரும் தொகை பணம் மீதப்படுத்தப்படும் என்று கூறப்படுகிறது.

மறுபுறத்தில், தனியார் திட்டங்களுக்கு செலுத்தும் மாதக்கட்டணம் (premium), பாவனைக் கட்டணம் (user fee), பயனாளருக்கான மேலதிக கட்டணம் (co-payment) என்பன அதிகரிக்கும். அத்துடன், பெரும்பாலும் இந்த திட்டங்களின் கீழ் மருந்து பெறும் ஒருவர், deductible அல்லது co-payment¡ 20%தை செலுத்தவேண்டி ஏற்படுகிறது.

புற்றுநோய் உட்பட கடுமையான நோய் ஏற்படுமிடத்து, பல ஆயிரம் செலவு ஏற்பட்டால், பல நூறுகளை ஒரு குடும்பம் செலவு செய்யவேண்டி ஏற்படும். அத்துடன் கருத்தடை, பாலியல் நோய், மாற்று பாலின தெரிவுகளை மேற்கொண்டவர்களுக்கான மருந்துகள் மற்றும் துஷ்பிரயோகமான முறையில் நடக்கும் பெற்றோர் மூலமாகவும் மருந்துகளைப் பெறுவதில் சிக்கல்கள் ஏற்படும்.

July 03 - பொது சேவை முகாமையாளர்களுக்கான சம்பளம் உறை நிலையில் வைக்கப்பட்டது. அத்துடன் நிர்வாக மற்றும் மேலாண்மை இழப்பீட்டுத் தொகைகள் மீளாய்வு செய்யப்படும் என்றும் காவல்துறை முதலான அத்தியாவசிய முன்னணி பணியாளர் தவிர்ந்த ஏனையவர்கள் புதிதாக பொதுசேவையில் இணைத்துக்கொள்ளப்பட மாட்டார்கள் என்றும் அறிவிக்கப்பட்டது. இதனால் சேவைகளைப் பெற காத்திருப்பு நேரம் அதிகரிக்கும். புதிதாக கல்வியை முடித்து வெளியேறும் பட்டதாரிகளுக்கான பொது சேவை வேலைவாய்ப்பு தடுக்கப்படுகிறது.

Cap and Trade திட்டம் கைவிடப்படுவதாக அறிவிக்கப்பட்டது. இதன்மூலம் பயனடைந்த பல திட்டங்கள் கைவிடப்பட்டன. இதன் ஏலத்தின் மூலம் கடந்த வருடம் 3 billion வருமானம் பெறப்பட்டது.

I. இந்த வருடத்துக்கான பாடசாலை புனரமைப்புக்கான 100 million நிதி ரத்து. ஏற்கனவே, 4900 பொது பள்ளிகள் 15 பில்லியன் வரையான திருத்த வேலைகள் செய்யப்பட காத்திருக்கின்றன. (July 9, 2018)

II. தற்போது சமூக வீடுகளுக்கான புனரமைப்பு மற்றும் திருத்த வேலைகளுக்கு வழங்க இருந்த 300 million பணத்தின் 129 million மட்டுமே வழங்கப்படும்.

III. TTC/GO-Transit co-fare discount ரத்து — இதுவரை Go Transit / UP Express இல் பயணம் செய்தவர்கள், TTC இல் பயணம் செய்ய, அரைவாசி கட்டணமே அறவிடப்பட்டது.

IV. இதுவரை வீடுகளில் சக்தி சேமிப்பை ஊக்கப்படுத்த யன்னல் Solar, thermostat, Heat pumpsகளைப் பொருத்த பகுதியளவாக பணம் வழங்கப்பட்டுவந்தது.

V. இதுவரை வாகனங்களுக்கு காலத்துக்கு காலம் செய்யும் emission testக்கு பணம் அறவிடப்படுவதில்லை.

VI. அத்துடன் ஒருவர் தமது பாவனை நேரத்தை மாற்றுவதன் மூலம் (time of use) கட்டணத்தை குறைக்கக் கூடியதாக இருந்தது.

VII. சரியான பாவனை கட்டணத்தை தீர்மானிக்க புதிய திறன் கூடிய smart metreகள் பொருத்தப்பட்டு வந்தன. இவை அனைத்தும் நிறுத்தப்படுகின்றன.

July 04 - கடந்த லிபரல் அரசு அங்கீகரித்த கீழ்வரும் சட்டங்கள் தற்காலிகமாக நிறுத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டது.

a. புகையிலை தவிர்ந்த ஏனையவற்றை புகைத்தல் (vaping e-cigarettes) தொடர்பாக மாற்றப்பட்ட சட்டங்கள் நிறுத்தம்

b. விளையாட்டு மற்றும் நிகழ்ச்சிகளுக்கான சீட்டுக்களின் முகப் பெறுமதியின் அரை பங்கிலும் அதிகமாக — மீள விற்பனை செய்தலை நிறுத்தல்

c. சட்ட அமுலாக்கத்தை மேற்பார்வையிடுதல் மற்றும் காவல்துறையின் கடமைகளை மீட்டெடுத்தல் தொடர்பான சட்டங்கள் நிறுத்தம்

d. காவல் துறையை கண்காணிக்கும் 3 பிரதான — Inspector General, Ombudsman, Special Investigations Unit இவர்களினால் விசாரணை செய்யப்படக்கூடிய மற்றும் மேலதிக பொறுப்பு கூறல் நடவடிக்கைகள் நிறுத்தப்படுகின்றன.


**காவல்துறையினால் பொதுமக்கள் சுடப்பட்டு இறக்கும், காயப்படுத்தப்படும், வன்முறையாக நடத்தப்படும் பல சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன. இதனைக் கண்காணிப்பவர்களின் கைகள் கட்டப்பட்டுள்ளன.**

e. வைத்தியர்கள் தடுப்பூசி தொடர்பான அறிக்கைகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





சமர்பித்தலில் ஏற்படுத்தப்பட்ட மாற்றம் நிறுத்தப்பட்டுள்ளது. — பிள்ளைகளின் நலனை விடவும் வைத்தியர்களின் மேலதிக வேலைப்பளு இங்கு கவனத்தில் எடுக்கப்பட்டுள்ளது

July 5 - கனடிய பிரதமர் Justin Trudeauவும் மாகாண முதல்வர் Doug Fordஉம் முதன் முதலில் சந்தித்துக் கொண்டனர். இதன் போது, கனடிய சமஷ்டி அரசு சட்டவிரோதமாக எல்லை கடந்து கனடாவுக்குள் வருபவர்களை ஊக்குவிக்கிறது. இதனால் Ontarioஇல் உள்ளவர்கள் மீது சுமை அதிகமாகிறது என்று Ford தெரிவித்திருந்தார்.

இதற்கு பதிலளித்த கனடிய பிரதமர், கனடிய குடிவரவு சட்டம் பற்றிய பூரண விளக்கத்தை Ford கொண்டிருக்கவில்லை, எல்லை கடந்து கனடா வரும் புகலிடக்கோரிக்கையாளர்களையும், கனடாவில் குடியேற விரும்பி அதற்காக விண்ணப்பித்து வரும் குடிவரவாளர்களையும் இரு வேறு விதங்களில் கனடா கையாள்வதாகவும், அகதிகோரிக்கையாளர்கள் தொடர்பாக கனடாவுக்கு உள்ள கடப்பாடு தொடர்பிலும் விளக்கியிருந்தார்.

குடிவரவாளர்களை பெரும்பான்மையாகக் கொண்ட கனடாவில், அவர்களின் பங்களிப்பை மறந்து, அகதிகளுக்கெதிரான மனநிலை கொண்ட ஒருவராக Ford தன்னை வெளிப்படுத்தியுள்ளார் என்பது இங்கு நோக்கத்தக்கது.

July 11 - Hydro One CEO, Mayo Schmidt மற்றும் குழு உறுப்பினர்கள் பணி நீக்கம்.

கடந்த வருடம், $6.2million சம்பளமாக பெற்ற Schmidt, குழு உறுப்பினர்களால் பதவி விலக்கப்படுமிடத்து $10.7 million (severance) கொடுக்கப்படவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது. ஆனால் $400,000 மொத்த பணத்தைப் பெற்றுக்கொண்டு அவர் பதவி விலகியமை சந்தேகத்தை தோற்றுவித்துள்ளது. இதில் பாவனையாளர் சிணிளிக்கான சம்பளத்தின் 2 சதங்களை மட்டுமே தமது மாதக் கட்டணத்தில் இருந்து செலுத்த, மிகுதி பங்குதாரர்கள் மூலமாகவே வழங்கப்பகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

ஒன்டாரியோவின் முன்னைய ஆட்சியில் பதவி வகித்த தலைமை முதலீட்டு அதிகாரி O'Dette, தலைமை விஞ்ஞானி Molly Shoichet, வணிக ஆலோசகர் Ed Clarke பணி நீக்கம் செய்யப்பட்டனர். இவர்கள் ஏன் நீக்கப்பட்டனர் ? பதிலாக இணைத்துக் கொள்ளப்பட்டவர்கள் யார் ? கொடுப்பனவுகள் பற்றி தெளிவில்லை. விஞ்ஞான அமைச்சகத்தை இல்லாமல் செய்தால் விஞ்ஞான ஆய்வுகள் தொடர்பான பெறுமதி அற்றுப்போயுள்ளது.

சுகாதார நல ஆலோசகராக Dr. Rueben Devlin நியமனம் செய்யப்பட்டுள்ளார். இவருக்கான கொடுப்பனவு — $348,000/வருடம் + paid expense. இந்த நியமனத்துக்கான காரணம், சகோதரர் Rob Ford அனுமதிக்கப்பட்ட Humber River மருத்துவமனையில் தலைவர் மற்றும் CEOவாக இருந்த Devlin செய்த சிறப்பான சேவைக்காகவும், தேர்தல் பிரச்சார காலத்தில் மூத்த ஆலோசகராக செயல்பட்டமைக்காகவும், தனது குடும்ப நண்பரை இந்த பதவிக்கு Ford தெரிவு செய்ததாகக் கூறப்படுகிறது.

Mike Harris ஆட்சி காலத்தில் கட்சியின் தலைவராக இருந்த Devlin மருத்துவ செலவினங்களை பெருமளவு குறைத்ததினால் சேவை குறைப்பு ஏற்பட்டு மக்கள் அவதியுற்றமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் முன்னைய மாகாண முதல்வருக்கான சம்பளம் $209,000/வருடம் ஆகவே இருந்தது.

July 12 - Doug Ford தனது சிம்மாசன உரையின் போது, பல அறிவிப்புகளை வெளியிட்டார். கார்பன் வரியை நீக்குவது மின்சார கட்டணத்தை குறைப்பது உட்பட பல வாக்குறுதிகளும் மீண்டும் வழங்கப்பட்டன.

பியர், வைன் என்பவை மளிகை கடை, Convenience Store என்பவற்றில் விற்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

நடுத்தர வர்க்கத்தினருக்கான வருமான வரி 9.15%இல் இருந்து7.32%ஆக குறைக்கப்படும். ஆனால். இது 2020-2021லேயே நடைமுறைக்கு வரும் என்று அறிவிக்கப்பட்டது.

20 வருடங்கள் பிற்படுத்தப்பட்ட பாலியல் பாடத்திட்ட மாற்றம் (சில சேர்க்கைகளுடன்) இணைய, சமூக வலைதள பாவனை, துஷ்பிரயோகங்கள், தொந்தரவுகள் அதிகரித்துள்ள நிலையிலும், ஒரே பாலின திருமணம் அங்கீகரிக்கப்பட்ட பின்பு, பிள்ளைகள் தம்மை தற்காத்துக்கொள்ளக்கூடிய வகையிலாக அறிமுகப்படுத்தப்பட்ட பாடத்திட்டமே மாற்றப்படுகிறது.

July 16 - சூழலை பாதுகாக்கும் வகையிலான காற்றாலைத்திட்டம் முடியும் தறுவாயில் ரத்து செய்யப்படுகிறது.

கிழக்கு ஒண்டாரியோ, Prince Edward County இல் 2010களில் தொடங்கப்பட்ட White Pines Wind Project - 3005 வரையான வீடுகளுக்கு மின்சாரம் வழங்க, 9 காற்றாலைகளுடன் நிர்மாணிக்கப்பட்டு பரீட்சிக்கப்பட காத்திருந்தது. இதனை கடைசி நேரத்தில் ரத்து செய்வதால் ஏற்படும் செலவு 100 மில்லியன் ஆகும்.

யாருடனும் கலந்தாலோசிக்கப் படாமல் ரத்து செய்வதால் அரசுகளின் மீது ஏற்படும் நம்பிக்கையீனம், சட்ட நடவடிக்கை, தண்டப்பணம், நிர்மாண மற்றும் இதர செலவீனம் என்பவற்றுக்கு யார் பொறுப்பு ?

ஆனால் Pickering இல் இயங்கி வரும் அணு மின் உற்பத்தி நிலையத்தை 2024ம் ஆண்டு வரை இயங்க அனுமதிக்கப்போவதாக Ford கூறியுள்ளார்.

இதில் பெறப்படும் மின்சாரத்துக்கு 2cents/kwhr என்ற அடிப்படையில் அமெரிக்காவின் விவீநீலீவீரீணீஸீ மாநிலத்துக்கு அனுப்பி விட்டு, Ontario Power Generation இடம் 9cents/kwhrக்கு கொள்வனவு செய்கிறோம். அத்துடன் அணு மின் உற்பத்தியினால் சூழல் மாசடைகிறது. சூழல் மாசை குறைக்கும் விதத்தில் உற்பத்தியை மேற்கொள்ள அதிகம் செலவாகிறது. மின்சார பற்றாக்குறை ஏற்படாதிருக்கவும் 7500 தொழில்களை பாதுகாக்கவும் எனக்கூறி லிபரல் அரசால் 2024வரை திறந்திருக்க முடிவு செய்யப்பட்டது. இப்போது அதனையே இந்த அரசு மீளவும் உறுதி செய்துள்ளது.

July 18 - சமஷ்டி காலநிலை அமைச்சர் Catherine McKenna காலநிலை தொடர்பாக Ontario மாகாணம் எந்த திட்டத்தையும் கொண்டிராதது தொடர்பில் ஏமாற்றம் வெளியிட்டார். சமஷ்டி அரசினால் அமுல்படுத்தப்பட இருக்கும் கார்பன் வரியை செலுத்தாது, அதற்கு எதிராக நீதிமன்றம் சென்று விலக்குப் பெற Ford விரும்புகிறார். இது சாத்தியம்தானா என்பதை பொறுத்திருந்து தான் பார்க்கவேண்டும்.

July 24 - கடந்த லிபரல் அரசால் மனநலன் தொடர்பான ஆரோக்கியத்துக்கு நான்கு வருடங்களில் $2.1 billion செலவுசெய்ய தீர்மானிக்கப்பட்டிருந்தது. இதனை ரத்துச் செய்துள்ள அரசு, அடுத்த பத்தாண்டுகளில் செலவு செய்ய தீர்மானிக்கப்பட்ட $1.9 billion இல் பகுதியளவு, காவல்துறையில் முதல் பதிலளிப்பவர்கள் எவ்வாறு மனநல பிரச்சினைகளை கையாள்வது , பெரிதாகாமல் தடுப்பதற்கான பயிற்சிகளை வழங்க பயன்படுத்தப்படும் என்று அறிவித்துள்ளது. மனநல ஆலோசனைகள், பணியாளர்கள் அதிகளவு தேவைப்படும் சூழ்நிலையில் அதற்கான நிதி மிகக்குறைவாகவே செலவு செய்யப்படும் என்பதைக் கவனிக்கலாம். அண்மையில் Danforthஇல் (Jul 22) மனநல பிரச்சனையில் பாதிக்கப்பட்டதாக கூறப்பட்ட Faisal Hussain நடத்திய துப்பாக்கிச் சூட்டில் இருவர் இறந்து 13 பேர் காயமடைந்தமை குறிப்பிடத்தக்கது.

Jul 25 - Oct 17இல் பொழுது போக்கு கஞ்சாப் பாவனை சட்ட பூர்வமாக்கப்பட்டபின்பு, அரசால் நிர்வகிக்கப்படும் LCBO இன் கட்டுப்பாட்டுக்குள் கஞ்சா நிறுவனமும் இயங்கவேண்டும் என தீர்மானிக்கப்பட்டிருந்த நிலையில், தனியாரும் கஞ்சா விற்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால் கட்டுபாடு அற்ற விதத்தில் விற்பனை மேற்கொள்ளப்பட்டு குற்றச்செயல்கள் அதிகரிக்க வழிவகுக்கும்.

July 27 - கடந்தமுறை லிபரல் அரசால் உருவாக்கப்பட்ட Peel, York, Niagara, Muskoka பிராந்திய தலைவர்களை தெரிவு செய்வதற்கான தேர்தலை நிறுத்தி வைப்பதாகவும், Oct 22ம் திகதி இடம்பெற இருக்கும் நகரசபை தேர்தலுக்கு முன்பாக, Toronto நகரசபை உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் குறைக்க இருப்பதாகவும் Doug Ford அறிவித்துள்ளார்.

4 வருடங்கள் கலந்தாலோசிக்கப் பட்டு மக்களின் கருத்துக்களையும் உள்வாங்கி தற்போது 44 ஆக உள்ள தொகுதிகள் — அடுத்த தேர்தலுக்கு 47ஆக உயர்த்தப்பட்டன. அவை மீண்டும் 25ஆக சுருக்கப்படுவது, மக்களின் ஆணையை புறக்கணிப்பதாகும். எல்லைகள் விரிவாக்கப்படும் போது, கூடிய தொகை மக்களுக்கான சேவையை சரிவர கவனிக்கமுடியாது போகலாம் என்றும், இதன் மூலம் பெருமளவு பணம் சேமிக்கப்பட வாய்ப்பில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இவற்றுக்கான காரணம், 2014 Toronto நகரசபை தேர்தலில் தன்னை தோற்கடித்த John Tory மற்றும் பிராந்திய தலைமைக்கு போட்டியிட இருந்த தனது அரசியல் போட்டியாளர் pJatrick Brown இருவரின் மீதான அரசியல் பழிவாங்கல் நடவடிக்கையாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது. பலர் இந்த முடிவுகளுக்கு தமது கண்டனத்தை தெரிவித்தாலும், பலரும் ஆதரவு தெரிவித்துள்ளனர். இதன் மூலம் $25.5 million மீதப்படுத்தப்படும் என்று தெரிவித்துள்ளார்.

இந்த புதிய மாற்றங்களின் உண்மையான பலன்களை, அடுத்தடுத்த ஆண்டுகளில் அனுபவிக்க நாங்கள் தயாராவோம் ! நல்ல மாற்றங்களை வரவேற்கும் அதே நேரம், மாகாணத்துக்கு நன்மை தராதவற்றுக்கு எதிர்ப்பு தெரிவிப்பது நம் ஒவ்வொருவரின் கடமையுமாகும்.

**தர்ஷினி உதயராஜா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டாயமாக வேலைக்குத் திரும்பக் கோரும் சட்டமூலம்

## Back-to-Work Legislation

வேலை நிறுத்தம் செய்யும் ஊழியர்களை அல்லது குழுமங்களை, கட்டாயமாக வேலைக்குத் திரும்ப வேண்டுமெனக் கோரும் சட்டமூலத்தை Back-towork legislation கனடிய மத்திய மாகாண அரசுகள் அவ்வப்போது பாவித்து வருகின்றன. இவற்றின் சாதக பாதக நிலைமைகள் மற்றும் இதர விபரங்கள் பற்றி அறிந்து வைத்திருப்பது அவசியம்.

அடிப்படையில் வேலை நிறுத்தம் செய்யும் ஊழியர்களை, நீதிமன்ற சட்டமூலத்தைப் பாவித்து, மீளவும் வேலைக்குத் திரும்பும்படி கோருகின்ற சட்டச்சரத்தையே இப்படி அழைக்கிறார்கள்.

இந்த சட்டமூலம் யாருக்கு சாதகமாக இருக்கிறது என்று பார்த்தால், அதை ஆராய்கின்ற நபர் சார்ந்தே சாதக பாதக நிலை நோக்கப்படுகிறது. ஒரு ஊழியர் அல்லது அந்த ஊழியர் சார்ந்த தொழிற்சங்கம் இந்த சட்டமூலத்தைப் பார்த்தால், அது அவர்களுக்கு பாதகமாகத் தெரியும். ஒரு பொதுமக்கள் நலன் சார் அமைப்பை அல்லது அரசை அல்லது




இதனால் பாதிப்படையும் நிறுவன நிர்வாகம் சார்ந்து நோக்கினால், இது ஒரு சாதகமான விடயமாகத் தெரியும். ஒரு ஊழியர் என்று பார்த்தால் அவர் பொதுமக்களில் ஒருவர் என்ற வகையில், அவர் சார்ந்த வேலை நிறுத்தம் அவருக்கு நன்மையாகத் தெரியும் அதேவேளை, அவர் சாராத வேறு சிலரின் வேலை நிறுத்தம் அவருக்கு பாதகமான ஒன்றாக மாற்றமடையலாம்.

ஆக, இதன் சாதக பாதகம் என்பது ஒரு தனிநபர் இந்த வேலைநிறுத்தத்தின் மூலம் பெற முயற்சிக்கும் நன்மை தீமைகள் சார்ந்ததே தவிர, பொதுவாக வேலைநிறுத்தங்கள் அனைத்தும் நன்மையானவையா தீமையானவையா என்று பொதுப்பட விவாதிப்பது தவறானது.

**கட்டாயமாக வேலைக்குத் திரும்பும் சட்டமூலம் என்றால் என்ன?**

வேலைநிறுத்தம் அல்லது வேலைமறுப்புப் போராட்டம் நடைபெறும்போது, மத்திய அல்லது மாகாண அரசால் வழங்கப்படும் இந்த சட்டமூலத்தின் கீழ் ஊழியர்கள் உடனடியாக வேலைக்குத் திரும்பும்படி பணிக்கப்படுவதுடன், அதை மீறும் பட்சத்தில் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு அனுமதியுண்டு. வேலைநிறுத்தத்திற்கு ஊழியர்களைப் பணிக்கும் விடயத்தில் தொழிற்சங்கங்களுக்கு சட்டரீதியான அங்கீகாரம் உண்டா என, 1987ல் அல்பேட்டா அரசு நீதிமன்றத்தை வினவியபோது, அப்படி தொழிற்சங்கங்களுக்கு சட்டஉரிமை இல்லை என நீதிமன்றம் அறிவித்ததைத் தொடர்ந்து, கட்டாயமாக வேலைக்குத் திரும்பும் சட்டமூலத்தை அரசாங்கங்கள் கைக்கொள்ள ஆரம்பித்தன. வேலை நிறுத்தம் ஆரம்பித்து, பேச்சுவார்த்தைகளில் இழுபறி நிலை தோன்றி, அதனால் நீண்டகாலம் வேலை நிறுத்தம் தொடரும் பட்சத்திலேயே இந்த கட்டாய வேலைக்குத் திரும்பும் சட்டமூலத்தை அரசு கருத்தில் எடுக்கும்.

இவ்வாறு கட்டாயம் வேலைக்குத் திரும்பும் சட்டமூலமொன்றை அரசு அறிவிக்கும் பட்சத்தில், மேலதிக பேச்சுவார்த்தைகளின்றி புதிய ஒப்பந்தமொன்றை சிபாரிசு செய்யவோ அல்லது பிறிதொரு சட்டரீதியான நடவடிக்கைக்கு இரு தரப்பையும் அதிகாரபூர்வமாகக் கோரவும் அனுமதி உண்டு. 2010ம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில், கியூபெக் மாகாணத்தில் 1,500 அரசாங்க வழக்கறிஞர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டபோது, ஐந்து வருட தொழில் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டு கட்டாயமாய் வேலைக்குத் திரும்பும்படி கோரியதை உதாரணமாகச் சொல்லலாம்.

**இந்தச் சட்டமூலம் அதிகளவில் பாவிக்கப்படுகிறதா?**

1950ம் ஆண்டிலிருந்து தற்போதுவரை 33 தடவைகள் வேலைநிறுத்தங்களை முடிவுக்குக் கொண்டுவர கனடிய மத்திய அல்லது மாகாண அரசுகள் இந்த கட்டாயமாய் வேலைக்குத் திரும்பும் சட்டமூலத்தைப் பயன்படுத்தியுள்ளன.

2011 யூன் மாதம் கனடிய தபால் ஊழியர்கள் (கனடா போஸ்ட்) 48,000 பேர் தொடர் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுவந்தபோது, நான்கு வருட தொழில் ஒப்பந்தம் மற்றும் திட்டமிட்ட சம்பள உயர்வுடன் 24 மணித்தியாலத்திற்குள் வேலைக்குத் திரும்பும் சட்டமூலம் கொண்டுவரப்பட்டது.

2007ல், கனடிய தேசிய ரயில் நிறுவன ஊழியர்கள் 2,800 பேர் வேலைநிறுத்தம் செய்தபோது, கட்டாயமாய் வேலைக்குத் திரும்பும் சட்டமூலத்தை அரசு பயன்படுத்தியது.

பொதுப்போக்குவரத்து ஊழியர்களின் பல வேலைநிறுத்தங்கள் இந்த கட்டாயமாய் வேலைக்குத் திரும்பும் சட்டமூலம் ஊடாக முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட வரலாறுகள் உண்டு. தினமும் 1.5 மில்லியனுக்கும் அதிகமான பொதுமக்கள் பாவிக்கும் ஒரு சேவை என்ற வகையில், அத்தியாவசிய தேவையுள்ள ஒன்றாக போக்குவரத்து அமைகிறது.

குறிப்பிட்ட ஓரிரு சந்தர்ப்பங்களில் கட்டாயமாக வேலைக்குத் திரும்பும் சட்டமூலத்தில் சற்று மிதவாதத்துடனான நடவடிக்கை எடுக்கப்பட்ட வரலாறும் உண்டு. உடனடியாக வேலைக்குத் திரும்பும்படி பணிக்கப்பட்டாலும், பின்னர் தொடர்ந்தும் பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்க புதிய வாய்ப்புக்கள் வழங்கப்படுவதை இதற்கு உதாரணமாகக் கூறலாம்.

அத்தியாவசிய தேவை சார்ந்த சேவைகள் பாதிக்கப்படும்போது பொதுமக்களின் நாளாந்த நடவடிக்கைகள் பாதிக்கப்படும் என்ற வாதத்தை முன்வைத்து இந்த கட்டாயமாக வேலைக்குத் திரும்பும் சட்டமூலம் முன்மொழியப்படும். பாதுகாப்பு அல்லது உடல் ஆரோக்கியம் சார்ந்து உயிராபத்து விளைவிக்கக்கூடிய சேவைகள், நீதிமன்ற நடவடிக்கைகள் தடைப்படுதல், பொதுமக்களின் பிரதான பொருளாதாரத்தைப் பாதிக்கக்கூடிய விடயங்கள் என்று மிக அத்தியாவசிய சேவைகள் தடைப்படும்போது மட்டுமே இத்தகைய சட்டமூலம் கையாளப்படுகின்றன.

உதாரணமாக, ரொறன்ரோ போக்குவரத்து சேவையைப் பொறுத்தவரை, ஒரு நாளுக்கு 50 மில்லியன் டொலர்கள் ரொறன்ரோ பொருளாதாரத்தில் துண்டுவிழும் தொகையாக மாறிவிடும் அபாயத்தை வேலைநிறுத்தம் உருவாக்கும் என்பதால், இதை எதிர்கொள்ள கட்டாயமாக வேலைக்குத் திரும்பும் சட்டமூலம் ஒரு அவசியமான ஆயுதமாகப் பாவிக்கப்படுகிறது.

2007ம் ஆண்டு சி.என். ரயில் ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட போது, கட்டாயமாக வேலைக்குத் திரும்பும் சட்டமூலம் நடைமுறைப்படுத்தப் பட்டதுடன், அதை மீறும் ஊழியர் ஒருவர், ஒரு நாளுக்கு 1,000 டொலர்களைத் தண்டமாகச் செலுத்த வேண்டும் என்றும், அதை மீறும் தொழிற்சங்கம் அல்லது நிறுவனம் ஒன்று, ஒரு நாளுக்கு 50,000 டொலர்களைத் தண்டமாகச் செலுத்தவேண்டும் என்றும் மிகவும் கடுமையாக தண்டனையுடன் கூடிய சட்ட நிபந்தனையும் விதிக்கப்பட்ட வரலாறும் உண்டு.

1978ல், கட்டாயமாக வேலைக்குத் திரும்பும் சட்டமூலத்தை மீறிய குற்றச்சாட்டில், தபால் ஊழியர்களுக்கான தொழிற்சங்கத்தின் தலைவர் ஜீன்—கிளட் பரோ, இரண்டு மாதங்கள் சிறையிலடைக்கப்பட்டார். இருப்பினும் அதன் பின்னர், சிறைத் தண்டனை வழங்கும் விதிமுறை இந்த சட்டமூலங்களிலிருந்து நீக்கப்பட்டுள்ளது.

வேலைநிறுத்தத்தை மேற்கொள்வதற்கான அனுமதியை வழங்கும் கனடிய மத்திய—மாகாண அரசுகள், இதற்கான செயற்பாடுகளை ஊக்கப்படுத்தும் தொழிற்சங்கங்களின் வளர்ச்சியை தடை செய்வதில்லை. இருப்பினும் இந்த வேலைநிறுத்தங்கள் பொதுமக்களினதும் அரசாங்கத்தினதும் நாளாந்த செயற்பாடுகளைக் குழப்பி, அரச பொருளாதாரத்திற்கும் குந்தகம் விளைவிக்கும் பட்சத்தில், அதைக் கட்டுப்படுத்தவே இந்த கட்டாயமாக வேலைக்குத் திரும்பும் சட்டமூலத்தைப் பாவிக்கின்றன.

இத்தகைய கட்டாயமாக வேலைக்குத் திரும்பும் சட்டமூலம், நாடாளுமன்றத்தில் சிபாரிசு செய்யப்பட்டு, பெரும்பான்மை ஆதரவைப் பெறும் பட்சத்தில் மட்டுமே நடைமுறைப்படுத்தப் படலாம்.

**குயின்ரஸ் துரைசிங்கம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

RE/MAX

DOING MORE FROM
FOR SALE
TO SOLD

THINKING OF
SELLING
YOUR HOME ?

NAVIGATE THE REAL ESTATE
MARKET WITH A TRUE EXPERT !

FREE
Comparative Market
Analysis & Home
Evaluation



WWW.REMAXHOMESALE.COM



Realtor Ramanan
416 290 6000
Re/Max Community Realty Inc Brokerage *
(Independently owned and operated)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்காபுரோ ரூச் பார்க் தொகுதியின் நகரசபை உறுப்பினர் நீதன் சாண் அவர்களது கோடைகால மக்கள் சந்திப்பு நிகழ்வு ஜூலை 06 2018






மேலதிக புகைப்படங்களை இகுருவி இணையத்தளத்தில் பார்வையிடலாம்.



# பிரம்ரனில் கரபிராமின் பல்கலாச்சார விழா










பிரம்ரனில் தமிழ் அமைப்பின் ஏற்பாட்டில் பல்கலாச்சார விழாவான கரபிராமின் மிகப்பெரும் நிகழ்வான ஈழம் சாவடி தமிழர்களின் பாரம்பரிய கலை கலாச்சாரப் பண்பாட்டைப் பிரதிபலிக்கும் இயல் இசை நாடக நிகழ்வுகளும் தவில் நாதஸ்வர கச்சேரிகளும் தமிழர்களின் பயன்பாட்டிலிருந்த பொருட்களின் கண்காட்சியும் நிகழ்வு ஜூலை மாதம் 13, 14, 15ம் திகதிகளில் வழமைபோல் மிகச்சிறந்த திட்டமிடலுடன் வெகு விமரிசையாக நடைபெற்றது

மேலதிக புகைப்படங்களை இகுருவி இணையத்தளத்தில் பார்வையிடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மார்க்கம் 7ம் வட்டாரத்தில், தடுமாறும் தமிழர் பிரதிநிதித்துவம்

**எதிர் வரும் ஒக்ரோபர் மாதம் 22ம் திகதி நடைபெறவுள்ள மாநகரா சபைத் தேர்தலில் மார்க்கம் நகரின் 7 வட்டாரம் முக்கிய கவனிப்பை பெற்றுள்ளது.**

## 7ம் வட்டாரமும் லோகன் கணபதியும்

தற்போதைய மாகண சபை உறுப்பினர் திரு.லோகன் கணபதி கடந்த 12 ஆண்டுகாளக இந்த வட்டாரத்தின் நகரசபை உறுப்பினராக செயல்பட்டு வந்தார்.



தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்ட முதல் தமிழ் பிரதி நிதி என்ற பெருமையினை திரு.லோகன் கணபதி அவர்களுக்கு பெற்றுத் தந்த இடமாக மார்க்கம் 7ம் வட்டாரம் விளங்குகின்றது.

2006ம் ஆண்டு நகரசபைக்கு தெரிவான திரு.லோகன் கணபதி அதனை தொடர்ந்து 2010ம் ஆண்டு மற்றும் 2014ம் ஆண்டுகளில் நடைபெற்ற தேர்தல்களிலும் வெற்றி பெற்று அந்த வட்டாரத்தின் அசைக்க முடியாத பிரதிநிதியாக தன்னை அடையாளப்படுத்திக் கொண்டார்.

நீண்டகால லிபரல் கட்சியின் ஆதரவாளரான திரு.லோகன் கணபதி 2015ம் ஆண்டு ஸ்காபுரோ வடக்கு தொகுதிக்கான லிபரல் கட்சியின் வேட்பாளர் தெரிவுக்கான தேர்தலில் போட்டியிட்டிருந்தமை நினைவு கூரத்தக்கது.

எனினும் திடீரென அவர் புறோகிறசிவ் கொன்சவேற்றிவ் கட்சியில் இணைந்து மார்க்கம் தோன்ஹில் தொகுதியில் போட்டியிடப் போவதான அறிவிப்பினை வெளியிட்டு பலரையும் வியப்பில் ஆழ்தினார்.

ஒன்ராறியோ மாகணத்தின் கொன்சவேற்றிவ் கட்சியின் தலைவராக பற்றிக் பிரவுண் இருந்த காலத்தில் அவருக்கு நெருக்கமாக இருந்த தமிழர்கள் சிலர் லிபரல் கட்சியின் தீவிர ஆதரவாளராக இருந்த திரு லோகன் கணபதியை அணுகி பல வாக்குறுதிகளை வழங்கி அவரை கொன்சவேற்றிவ் கட்சிக்கு மாற்றியதாக தெரியவந்தது.

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் நடைபெற்ற மாகாணசபைத் தேர்தலில் கடுமையாக வீசிய கொன்சவேற்றிவ் அலை மற்றும் மார்க்கம் நகரசபையில் 12 ஆண்டு கால பயணம் என்பவை மிகப் பெரிய வாக்கு வித்தியாத்தில் அவருக்கான வெற்றியினை தேடித் தந்திருந்தது.

இந்த பின்னணியில் எதிர் வரும் நகர சபைத் தேர்தலில் மார்க்கம் நகரசபையின் 7ம் வட்டாரம் அதிக கவனிப்பை பெறுகின்றது.

## 7ம் வட்டாரமும் வரவிருக்கும் நகரசபை தேர்தலும்

நடைபெற்று முடிந்த மாகாண சபைத் தேர்தலில் மார்க்கம் தோன்ஹில் தொகுதியில் லிபரல் கட்சியின் சார்பில் போட்டியிட்ட யுனித்தா நாதன் நகர சபை உறுப்பினர் பதவிக்கு போட்டியிடும் தனது விருப்பினை வெளிப்படுத்தினார்.

ஏற்கனவே அந்த பகுதியின் கல்விச் சபை உறுப்பினராக இரு முறை தெரிவாகியவர் மாகாண சபைத் தேர்தலில் 9,000 வாக்குகள் பெற்றவர் என்கின்ற வகையில் வெற்றி வாய்ப்புகள் அதிகம் கொண்ட வேட்பாளராக இவர் கருதப்பட்டார்.

இவரை விடவும் இந்த தொகுதியில் கிள்ளிவளவன் செல்லையா, மலர் வரதராஜா, சோதி செல்லா, இலகுப்பிள்ளை ஸ்ரீநாதன் ஜெரமயா விஜயரட்ணம் ஆகிய தமிழ் வேட்பாளர்கள் தமது பெயர்களை பதிவு செய்திருந்தனர்.

ஆக மொததம் 5 தமிழ் வேட்பாளர்கள் மார்க்கம் நகரசபையின் 7ம் வட்டாரத்தை கைப்பற்றுவதற்கான போட்டிக் களத்தில் குதித்திருந்தனர்.

2014ம் ஆண்டு தேர்தலில் மூன்று தமிழர்கள் உட்பட 5 வேட்பாளர்கள் போட்டியிட்ட இந்த வட்டாரத்தில் இம்முறை 5 தமிழர்கள் உட்பட 9 வேட்பாளர்கள் போட்டியிடும் நிலை ஏற்பட்டிருந்தது.









ஏற்கனவே தமிழ் நகர சபை உறுப்பினரை கொண்டிருந்த தொகுதி என்பதாலும் மீண்டும் தமிழர் ஒருவர் வெற்றி பெறக் கூடிய தொகுதி என்பதாலும் அதிக எண்ணிக்கையான தமிழர்கள் போட்டியிட்டு வாக்குகள் பிரிந்து அனைவரும் வெற்றி வாய்பினை இழக்கும் நிலை ஏற்படலாம் என சில தரப்பினர் அபிப்பிராயம் வெளியிட்டனர்.

இந்த அடிப்படையில் சில தமிழ் அமைப்புகள் அனைத்து தமிழ் வேட்பாளர்களையும்; அழைத்து சில கலந்துரையாடல்களும் நடத்தப் பட்டுள்ளன.

இந்த கலந்துரையாடல்களின் போது வேட்பாளர்கள் தமக்குள் விட்டுக் கொடுப்புகளை மேற்கொண்டு ஒரு வேட்பாளரை தெரிவு செய்யுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

எனினும் இந்த சமரச முயற்சி வெற்றியளிக்கவில்லை என்றும் தாங்கள் போட்டியிடும் முடிவில் இருந்து பின்வாங்குவதற்கு எந்த ஒரு வேட்பாளரும் விரும்பவில்லை என்றும் தெரியவந்துள்ளது.

இது ஒரு ஜனநாயக நாடு என்பதாலும் தமக்குள்ள வாய்புகளையும் வரப்பிரசாதங்களையும் பயன்படுத்தும் அனைத்து உரிமைகளும் இந்த நாட்டின் குடிமக்களுக்கு இருக்கின்ற என்ற அடிப்படையிலும் வேட்பாளர்கள் தமது முடிவுகளில் இருந்து பின்வாங்கப் போவதில்லை என்று எடுத்த தீர்மானம் தவறானதல்ல என்றே கருதப்படுகின்றது.

இந்த வேண்டுகோள்கள் மற்றும் வெற்றிவாய்புகளில் காணப்படும் உறுதியற்ற தன்மை ஆகியவற்றின் அடிப்படையில் தான் மீண்டும் கல்விச் சபை உறுப்பினர் பதவிக்கு போட்டியிடப் போவதான தனது எண்ணத்தை யுனீத்தா நாதன் ஏனைய வேட்பாளர்களிடம் வெளிப் படுத்தியிருக்கின்றார்.

எனினும் அவர் அதனை உத்தியோகபூர்வமான கடந்த 26ம் திகதியே சமூக வலைத்தளங்களின் மூலமாக பகிர்ந்து கொண்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கீத்திகா லோகன் VS கீத்திகா லோகன் கணபதி

அதேநாளில் ஆச்சரிய மூட்டும் வகையில் முன்னாள் நகர சபை உறுப்பினரம் தற்போதைய மாகாண சபை உறுப்பினருமான லோகன் கணபதி அவர்களின் புதல்வியான கீத்திகா லோகன் இந்த தேர்தலில் போட்டியிடும் தீர்மானம் குறித்த அறிவித்தலை வெளியிட்டுள்ளார்.

இந்த அறிவிப்பு ஏற்கனவே எதிர்பார்க்கப்பட்ட ஒன்று என்று பலராலும் கூறப்பட்டு வருகின்ற போதிலும் கீத்திகா லோகன் போட்டியிடும் அறிவிப்பும் யுனீற்றா நாதனின் மாற்றம் குறித்த அறிவிப்பும் பல்வேறு வாதப் பிரதிவாதங்களை ஏற்படுத்தி நிற்கின்றது.

கீத்திகா போட்டியிடுவதற்காக யுனிற்றா விலகினாரா அல்லது யுனிற்றா விலகியதால் வெற்றி வாய்ப்புகள் அதிகம் இருப்பதாக கருதி கீத்திகா போட்டிக் களத்தில் குதித்தாரா என்ற கேள்விகள் பலராலும் எழுப்பப்படுகின்றன.

12 ஆண்டுகள் தனது கட்டுப்பாட்டில் இருந்த ஒரு வட்டாரத்தில் வேறு ஒருவர் வருவதை விரும்பாமல் தனது மகளை போட்டியிட வைத்து அந்த வட்டாரத்தை தொடர்ந்தும் தனது ஆளுகைக்குள் வைத்திருக்க முயல்வது ஒரு மூத்த அரசியல்வாதிக்கு அழகல்ல என்று சிலர் இது குறித்து தமது விமர்சனங்களை முன்வைத்துள்ளனர்.

ஆசிய நாடுகள்போல் குடும்ப அரசியலை இங்கும் கொண்டு வருவதற்கு முயற்சிப்பதான கோபமும் அவர்களின் கருத்துகளில் வெளிப்பட்டது.

மறுபுறமாக ஒரு ஜனநாயக நாட்டில் நடைபெறும் தேர்தலில் போட்டியிடுவதற்கான தகுதிகளை கொண்டுள்ள எவரும் போட்டியிட முடியும் என்ற நிலையில் தந்தையார் வகித்த பதவிக்கு மகள் போட்டியிடுவதில் என்ன தவறு என்று மறுவாதம் முன்வைக்கப்படுகின்றது.

அதே சமயம் இதுவரை கீத்திகா லோகன் என தனது பெயரை பயன் படுத்தி வந்த லோகன் கணபதியின் புதல்வி வேட்பாளர் பெயரான 'கீத்திகா லோகன் கணபதி' என தன்னை பதிவு செய்துள்ளமையும் சில கேள்விகளை எழுப்பியுள்ளது.

ஏற்கவே அந்த வட்டாரத்தில் 12 ஆண்டுகள் நகர சபை உறுப்பினராக இருந்தவரின் மகள் என்ற அடையாளத்தை இந்த பெயர் மாற்றத்தின் மூலம் உறுதிப்படுத்தி தனக்கான வெற்றி வாய்பினை பிரகாசமாக்க கீத்திகா முயல்வதாக கூறப்படுகின்றது.

அதேவேளை திரு.லோகன் கணபதி அவர்கள் மாகாண சபைக்கு தெரிவு செய்யப்பட்டதை அறியாத 'அப்பாவிகள்' மீண்டும் அவர் தான் போட்டியிடுகின்றார் அவரையே தெரிவு செய்வோம் என கண்மூடித் தனமாக வாக்குகளை அள்ளி வீசி கீத்திகாவை வெற்றியடை வைத்துவிடுவார்கள் என்றும் சிலவேளைகளில் அவர்கள் சிந்தித்திருக்கலாம்.

நகரசபைத் தேர்தல்களில் போட்டியிடும் வேட்பாளர்கள் தமக்கு விருப்பமான வகையில் வேட்பாளர் பெயரை பயன்படுத்தலாம் என்ற அடிப்படையில் கீத்திகா லோகன் தனது பெயருடன் தனது தந்தையின் இறுதிப் பெயரையும் இணைத்து கீத்திகா லோகன் கணபதி என்று போட்டியிட தீர்மானித்துள்ளார்.

அவர் வெற்றி பெறுவதற்கான முக்கிய வியூகமான அதனை அவர் தெரிவு செய்திருக்கின்றார் என்றே நம்பப்படுகின்றது. இது சரியானதா தவறானதா அல்லது மக்கள் ஏமாளிகளா ஏமாற்றப்படுகின்றார்களாக என்பதை ஒக்ரோபர் 22ம் திகதி தான் தீர்மானிக்கும்.

அதுவரை ஒதுங்கியிருந்து வேடிக்கை பார்பது தான் திருவாளர் பெதுசனத்திற்கு பொருத்தமாக இருக்கும்.




வன்னிவீதியை இரண்டாவது தடவையாக திறந்து வைத்தபோது, தமிழர் கலை நிகழ்வுகளுடன் நடைபெற்ற திறப்பு விழா நிகழ்வை தொகுத்து வழங்கிய கீத்திகா லோகன்

## பிரதான போட்டியாளர் காலித்

இதேவேளை மாகாண சபை உறுப்பினராக லோகன் கணபதி அவர்கள் தெரிவானதை தொடர்ந்து ஏற்பட்ட நகரசபை உறுப்பினருக்கான வெற்றிடத்தை 2014ம் ஆண்டு நடைபெற்ற நகரசமைத் தேர்தலில் இரண்டாவது அதிகப்படியான வாக்குகளை பெற்ற காலித் உஸ்மான் நியமிக்கபட்டார்.

இதன் மூலம் அந்த வட்டாரத்தின் தற்போதைய நகரசபை உறுப்பினராக இயங்கி வரும் காலித் உஸ்மானும் இந்த தேர்தலில் போட்டியிடுவதை உறுதி செய்திருந்தார்.



காலிட் உஸ்மான் என்ற பெயர் மார்க்கம் 7ம் வட்டார மக்களுக்கு மிகவும் நெருக்கமானது. 1998ம் அண்டு முதல் 2006ம் ஆண்டு வரை அந்த வட்டாரத்தின் நகர சபை உறுப்பினராக பதவி வகித்தவர் காலிட் உஸ்மான் இப்போது அவர் நியமன நகர சபை உறுப்பினர்.

அவர் நகர சபை உறுப்பினராக இருந்த காலப்பகுதியில் ஆற்றிய பணிகளுக்காக நகர பிதாவின் சிறப்பு விருதான Mayor's Seniors Hall of Fame விருது வழங்கி கௌரவிக்கப்பட்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

யோர்க் பிராந்தியத்தின் சமாதான மர நடுகதை; திட்டத்தின் தலைவராகுவும் மார்க்கம் ஸ்ரோவில் மருத்துவமனை அபிவிருத்திக் குழுவின் தலைவராகவும் இவர் சேவையாற்றியுள்ளார்.

இவருக்கு தாம் நேரடியாக ஆதரவு வழங்கி வருவதாகவும் இவருக்கு எதிராக போட்டிக் களத்தில் உள்ள 5 தமிழ் வேட்பாளர்களும் தமக்குள் வாக்குகளை பிரித்து இவரது வெற்றிக்கு மறைமுகமான ஆதரவை வழங்குவதாகவம் காலிட் உஸ்மானுக்கு ஆதரவு வழங்கும் சில தமிழ் பிரமுகர்கள் குறிப்பிடுகின்றனர்.

ஏழாம் வட்டாரம் இறுதியாக வெளியிடப்பட்டுள்ள வேட்பாளர் பட்டியிலின் அடிப்படையில் Killi Chelliah, Sundy Huang, Johnson Irimpan, Kethika Logan Kanapathi,Mohammed Rahman,Sothy Sella,Elaguppillai (Mike) Srinathan ,Khalid Usman,Malar Varatharaja ஆகிய 9 பேர் போட்டியிடுகின்றனர். வதான அறிவிப்பை வெளியிட்ட ஜெயரமயா விஜயரட்ணம் 7ம் வட்டாரத்தில் இருந்து விலகி 5ம் வட்டாரத்தில் போட்டியிடுகின்றார்.

காலித் உஸ்மானுக்கு ஆதரவளிப் பதாக சில தமிழ் பிரமுகர்கள் வெளிப் படையாக அறிவித்துள்ளதுடன் அவருக்கு சார்பான பரப்புரைகளையும் மேற்கொண்டு வருகின்றமையும் சுட்டிக்காட்டதக்கது. "பல தமிழ் போட்டியாளர்கள் மறைமுகமாக காலித் உஸ்மானின் வெற்றிக்கு உழைக்கின்றார்கள். நாம் நேரடியாக இயங்குகின்றோம் அது தான் வித்தியாசம் என, பல தமிழர்கள் ஒரு தேர்தலில் போட்டியிட்டு வாக்குகள் பிரிப்பதையிட்டு விசனம் தெரிவித்துள்ளார்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நகரசபை பதவி



நகரசபை உறுப்பினர் பதவி என்பது மக்களோடு மக்களாக இணைந்த பணியாற்ற வேண்டிய ஒரு பதவி,

மக்களின் அன்றாட வாழ்கையில் அவர்கள் சந்திக்கும் சவால்களான போக்குவரத்து நெருக்கடிகள், பனி அகற்றல், கழிவகற்றல், மரம் வெட்டுதல் என நீளும் இந்த பட்டியலில் காணி உரிமங்கள், கட்டிட நிர்மாண திட்டங்கள் என பெரிய திட்டங்களுக்கான அனுமதிகள் என முக்கியமான அம்சங்களும் அடங்கும்.

வெறுமனே அந்த வடடார மக்களின் தேவைகளை பூரத்தி செய்தல் என்பதை தாண்டி மத்திய மாகாண அரசுகளின் அபிவிருத்தி நடவடிக்கைகள் பெரு நிறுவனங்கள் முன்னெடுக்கும் திட்டங்கள் வரை நகர சபையினதும் அதன் உறுப்பினர்களதும் பங்களிப்பு அவசியமானது.

நகர சபைகளுக்கான சட்ட திட்டங்களின் உருவாக்கம், தீர்மானங்களை நடைமுறைப்படுத்தல் ,நகரசபைக்கான கொள்கைகளை உருவாக்குதல் மற்றும் அவற்றை நடைமுறைப்படுத்தல், என மிகப் பெரிய பொறுப்புகளை நகர சபை உறுப்பினர் கொண்டுள்ளார்.

மக்களோடு நெருங்கி பழகுவதற்கும் அவர்களின் பிரச்சினைகளை அறிந்து கொள்வதற்கும் இந்த பதவி உதவியாக அமையும்.

ஏதிர்காலத்தில் முழுநேர அரசியிலில் பிரவேசித்து மாகாண சபைக்கு அல்லது பாராளுமன்றத்திற்கு செல்ல விரும்புகின்றவர்களுக்கு இது சிறப்பான ஆரம்பத்தை வழங்கக் கூடிய ஒரு பதவியாக நகர சபை உறுப்பினர் பதவி கருதப்படுகின்றது.

மறுபுறம் ஊதியம் மற்றும் ஏனைய வரப்பிரசாதங்கள் என சுமார் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் டொலர்கள் வருமானத்தை ஆண்டொன்றுக்கு பெற்றுத் தரக் கூடிய ஒரு பதவி என்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

மாத நகர சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்கு பலரும் ஆர்வம் காட்டுவதற்கு இதுவும் கூட ஒரு காரணம் என பரவலாக நம்பப்படுகின்றது.

மாதந்தம் இருபதினாயிரம் டொலர்கள் சம்பளம் பெறக் கூடிய நிரந்தரமான ஒரு தொழிலாகவும் இது கருதப்படுகின்றது.

இந்த பின்னணிகளோடு தான் இந்த தேர்தலை நாம் அணுக வேண்டும்.

சமூக அக்கறையும் சமூகத்துடனா ஈடுபாடும் கொண்டவர்கள் தேர்தலில் ஈடுபடுவதை ஒரு சமூகமாக நாம் ஊக்குவிக்க வேண்டும்.

அதன் மூலமாகவே நாம் ஆரோக்கியமான சமூகமா இங்கு வளர்சியடை முடியும்.

மாறாக தேர்தல் அறிவிப்புகளின் போது பாதையோரங்களில் சிரித்தபடி இருக்கும் படங்களை படரவிடுவதற்கும் மக்களிடம் நிதி சேகரித்து இலவச விளம்பரங்களை தேட முற்படுகின்றவர்களையும் கவனமாக கையாள வேண்டும்.

ஏற்கவே மகாண அரசாங்கம் ரொரன்ரோவில் நகர சபை உறுப்பினர்களின் எண்ணிக்கையை குறைப்பதற்கு எடுத்துள்ள முயற்சியானது சிறுபான்மை சமூகங்களின் பிரதிநிதித்துவத்தினை நகரசபைகளில் பாதிக்கும் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

இதுபோன்ற நிலை ஏனைய பகுதிகளுக்கம் பரவும் போது நாம் சமூகமாக சிந்தித்து செயல்படுவதன் மூலமாகவே பலமான சமூகமாக எம்மை வளர்த்துக் கொள்ள முடியும்.

**ரமணன் சந்திரசேகரமூர்த்தி**


# கடன்தொல்லை?

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

**நாங்கள் ஒரு புதிய ஆரம்பத்திற்கு வழிகாட்டுகிறோம், இனி**

- நிம்மதியான தூக்கம்
- மீண்டும் தொலைபேசி அழைப்புகளுக்கு பதிலளிக்கலாம்
- ஏக்கத்தை விட்டொழிக்கலாம்
- உங்கள் மேலிருக்கும் அந்தச்சுமையை அகற்றிவிடலாம்
- உங்களைப் பற்றி பெருமையாயும், ஆனந்தமாயும் உணருங்கள்
- இனி கட்டவேமுடியாத Billகளைப்பற்றி கவலையில்லை.
- நண்பர்கள், உறவினர்களிடம் கடன் வாங்கும் சிறுமையும் இனி இல்லை

அனைத்து கடன் பிரச்சனைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

**V. SRI**

Certified Insolvency Counsellor

**CREDIT SOLUTION CENTRE**


Trustee in bankruptcy இணைந்து ஒரே கூரையின் கீழ் இயங்கும் ஒரு தமிழர் நிறுவனம்

80 Corporate Drive, Suite 309
Scarborough, ON M1H 3G5
Tel: **416.439.0224**
Fax: 416.439.0226
creditsolutioncentre@gmail.com






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கனடாவில் உருவாக்கப்படும் மாறுபட்ட தமிழ் இனங்கள்

சங்க இலக்கியத்தை எடுத்துப்பார்த்தால் தென்னிந்தியா முழுவதும் ஒரு காலத்தில் தமிழர் வாழ்ந்ததற்கான ஆதாரங்களைக் கவனிக்கலாம். முத்தமிழ் வேந்தர்களான சேர சோழ பாண்டியரின் ஆட்சியின் கீழ் தென்னிந்தியாவின் பெரும்பகுதி நீண்ட காலம் இருந்திருக்கிறது. எமக்குக் கிடைத்த கல்வெட்டுகள், ஏடுகள் போன்றவை இதைத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன. நாம் அறியாத இன்னும் எவ்வளவோ தகவல்கள் மண்ணுக்குள் புதைந்து கிடக்கின்றன. தமிழ் மொழிக்குப் பேச்சு வடிவம் மட்டுமல்ல எழுத்து வடிவமும் அன்று தொட்டு இருந்திருக்கிறது. மொழி என்பது முதலில் ஒலி வடிவத்தில் வார்த்தையாகவும், அதன்பின் சைகையாகவும், அதன்பின் எழுத்து வடிவமாயும் மெல்ல மெல்ல வளர்ச்சி அடைந்திருக்கின்றது. ஏதோ ஒன்றை உணர்த்துவதற்காக இந்த மொழிகள் உருவ வடிவமாக மரங்கள் கற்கள் குகைகள் போன்றவற்றில் முதலில் பதியப்பட்டன. அப்படிப் பதியப்பட்ட வடிவங்களில் குடைந்த வடிவங்கள் மட்டும் காலத்தால் அழியாமல் சில இடங்களில் இன்னும் தப்பி இருக்கின்றன.

தமிழ் நாட்டிலும், இலங்கையிலும் கண்டெடுக்கப்பட்ட கல்லில் பதியப்பட்ட கல்வெட்டுக்கள் இதற்கு நல்ல உதாரணமாகும். கனடாவில் முதற்குடி மக்களால் மரத்தில் வடிவமைக்கப்பட்ட ரோற்ரொம் தூண்கள் இப்பொழுதும் நல்ல நிலையில் இருப்பதால், முதற்குடி மக்களின் வாழ்க்கை முறையைப் பற்றிய பல தகவல்களை அதில் இருந்து அறிந்து கொள்ள முடிகின்றது. எனவே ஒரு மொழியின், அல்லது இனத்தின் இருப்பை ஏதோ ஒரு விதத்தில், எந்த வடிவமாக இருந்தாலும் ஆவணப் படுத்துவது என்பது மிகவும் முக்கியமானது. தற்போது பல நவீன வடிவங்களில் விரைவாகவும், தெளிவாகவும் வரலாற்றை வடிவமைக்கக்கூடிய பல வசதிகள் எம்மிடம் இருக்கின்றன. அடுத்த தலைமுறைக்கு எமது சரியான வரலாற்றைக் கொண்டு செல்ல இது மிகவும் முக்கியமானதாகும்.

இந்தியாவில் தமிழர்களின் வரலாற்றை முதலில் பார்ப்போம். சிந்துவெளி நாகரிகம் திராவிடர்களின் பண்பாட்டை எடுத்துக் காட்டுகின்றது. மொகஞ்சதாரா, ஹரப்பா போன்ற பகுதிகளில் எமது பண்பாட்டுச் சின்னங்கள் இருந்ததற்கான ஆதாரங்கள் உண்டு. அரசியல்ரீதியாக நிலம் பிரிக்கப்பட்டதால் அவற்றை நாம் இழந்து விட்டோம். தென்னிந்தியாவை எடுத்துப் பார்த்தால், சேர சோழ பாண்டியர்காலத்தில்வாழ்ந்ததமிழர்கள் தமிழ் மொழியைப் பேசினாலும் சில இடங்களில் அவர்களின் வட்டார வழக்கு மொழியும் கலந்திருந்தது. இந்த வட்டார மொழிகளே பின்னாளில் புதிய மொழிகள் உருவாகக் காரணமாயிற்று. தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய தென்திராவிட மொழிகள் மூன்றும் தொடக்கநிலையில் முழுக்க முழுக்க தமிழாகவேயிருந்து நாளடைவில் திரிந்து புது மொழிகளாக மாறின என்பதற்குச் சான்றுகள் பல இருக்கின்றன. மலையாளம் தமிழின் கிளைமொழியாக இருந்து பின் தனிமொழியாக வளர்ந்தது என்று மலையாள இலக்கண நூல் 'கேரளா பாணினீயம்' கூறுகிறது. இன்று தமிழ் மொழி செம்மொழி அந்தஸ்தைப் பெற்றிருந்தாலும் அவ்வப்போது உடைந்து சிதைந்து போனாலும் இன்றும் தலை நிமிர்ந்து நிற்பதற்குக் காரணம் தமிழர்கள் தங்கள் மொழி மீது கொண்ட தீராத பற்றேயாகும். நான், எனது குடும்பம் என்பதையும் கடந்து தங்கள் தாய் மொழியான தமிழ் மீதும் அழியாத காதல் கொண்டவர்கள் தமிழர்கள். அதனால்தான் எங்கள் மொழி அழியாது நிலைத்து நிற்கின்றது.

இலங்கையில் வடக்கு, கிழக்கு, மலையகப் பகுதியில் வாழும் தமிழர்கள் தமிழ் மொழியைப் பேசினாலும் அவர்களுடைய தமிழ் மொழியிலும் வட்டார வழக்கு ஆதிக்கம் செய்வதை அவதானிக்க முடியும். சில பகுதிகளில் பேச்சு மொழியில் இவர்கள் பாவிக்கும் சில சொற்கள் ஏனைய தமிழ் பேசும் மக்களுக்குப் புதிதாகத் தெரியும். ஆனாலும் எல்லாமே தமிழ் மொழியாக இருப்பதால் அந்தச் சொல்லின் அர்த்தத்தை அறிந்து கொள்ளவும், புரிந்து கொள்ளவும் மற்றவர்கள் பழகிக் கொண்டார்கள். குறிப்பாகச் சொல்வதானால் யாழ்ப்பாணக் குடா நாட்டுக்குள்ளேயே சில கிராமங்களில் மக்கள் பேசும் வட்டார வழக்குத் தமிழ் சொற்கள் மற்றவர்களுக்குப் புதிதாக இருப்பதை அவதானித்திருக்கின்றேன். சில இடங்களில் கலப்பில்லாத நல்ல தூய தமிழ் சொற்களையும் அவர்கள் பேசுவதைக் கேட்க முடியும். பரம்பரையாக அதையே அவர்கள் பேசி வருகின்றார்கள். ஆனாலும் தமிழர்கள் என்ற நிலைப்பாட்டில் இருந்து அவர்கள் தங்களை மாற்றிக் கொள்ளவில்லை. இதே நிலை இலங்கையின் நீர்கொழும்பு, சிலாபம் பகுதிகளில் வாழ்ந்த தமிழர்களுக்கும் ஏற்பட்டது. ஆனால் அவர்களில் அதிகமானோர் மெல்ல மெல்ல தமிழ் மொழியை மறந்து விட்டார்கள்.

நீர்கொழும்பில் தமிழ் கலவன் பாடசாலை என்று சீமெந்து சுவரில் பதியப்பட்ட எழுத்திற்குமேல் கறுப்பு நிறம்பூசி சிங்கள மகா வித்தியாலயம் என்று எழுதப்பட்டிருந்ததைப் பார்த்தேன். காலப்போக்கில் அங்கே இருந்த தமிழர்களின் அடுத்த தலைமுறையினர் இனம் மாற்றப்பட்டு விட்டார்கள். தாய் மொழியை அவர்கள் புறக்கணித்ததால் புதியதொரு இனம் அங்கே உருவாக்கப்பட்டது. இன்று அப்பகுதியில் பழைய தலைமுறையினரில் சிலர் தமிழ் கதைத்தாலும் அடுத்த தலைமுறையினர் பெரும்பான்மை இனத்தவரின் மொழி பேசுபவர்களாக மாறிவிட்டார்கள்.

தமிழர்கள் கனடிய மண்ணில் காலடி பதித்து சுமார் 40 வருடங்கள் ஆகின்றன. இலங்கையில் 1983 ஆம் ஆண்டு ஏற்பட்ட இனப்படுகொலை காரணமாகத் தமிழர்கள் பாரம்பரியமாக வாழ்ந்த தங்கள் சொந்த மண்ணை விட்டு புலம் பெயர்ந்தார்கள். பல நாடுகளுக்கும் அவர்கள் புலம் பெயர்ந்த போது ஒரு பகுதியினருக்குக் கனடா நாடு அடைக்கலம் கொடுத்தது. எந்த மொழியை தாய் மண்ணில் அழிவில் இருந்து காப்பாற்ற நினைத்தார்களோ அந்த மொழியைக் கனடிய மண்ணில் தக்க வைக்க வேண்டும் என்ற பெருவிருப்புடன் புலம் பெயர்ந்த சான்றோர்கள் செயற்பட்டனர். புலம் பெயர்ந்த தமிழர்களில் பெரும் பகுதியினர் ரொறன்ரோவிலும், மொன்றியலிலும் வாழ்கிறார்கள். சுமார் மூன்று தலைமுறையைச் சேர்ந்தவர்கள் அனேகமானக் கனடிய தமிழ் குடும்பங்களில் இருக்கிறார்கள்.

கனடாவிற்குப் புலம் பெயர்ந்த தமிழர்களின்ஒருபகுதியினர்தாய்மொழி மீது கொண்ட பற்றுக்காரணமாகத் தங்கள் பிள்ளைகளுக்குத் தமிழ் கற்பித்தார்கள். இன்னும் ஒரு சாரார் தங்கள் பிள்ளைகளுக்கு இந்த மண்ணில் தமிழ் தேவையில்லை என்று சொல்லி ஒதுங்கிக் கொண்டார்கள். சமீபத்தில் பழைய மாணவர் சங்கம் ஒன்று தமிழ் பிள்ளைகளுக்காக கணிதம், பொதுஅறிவுப் போட்டி ஒன்றை நடத்திய போது ரொறன்ரோவில் தங்கள் பிள்ளைகளுக்குத் தமிழ் தெரியாது என்றும் எனவே ஆங்கிலத்தில் வினாத்தாள்கள் வேண்டும் என்றும் சில பெற்றோர்கள் கேட்டார்கள்.

அதேபோல மொன்றியலில் உள்ள தமிழ்பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு பிரெஞ்சு மொழியில் வினாத்தாள்கள் வேண்டும் என்று கேட்டார்கள். எங்களை அறியாமலே வேற்று மொழி பேசும் சமுதாயம் இரண்டை நாம் இந்த மண்ணிலே உருவாக்கிக் கொண்டிருக்கின்றோம் என்பது அப்போது தான் புலனாகியது. இந்த நிலை இப்படியே நீடிக்குமானால் இன்னும் சில தலைமுறைகளில் தமிழர்களால் உருவாக்கப்பட்ட இரண்டு பெரிய வேற்று மொழிபேசும் புதிய இனங்கள் இந்த மண்ணில் புதிதாகத் தோன்றியிருக்கும்.

இன்னும் ஒரு விடயத்தை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். அதாவது தமிழ் இனத்தின் அடுத்த தலைமுறையினர் பலர் வேற்று இனத்தவர்களைத் திருமணம் செய்வது இன்று ஒரு சாதாரண நிகழ்வாகிவிட்டது. மொழியோ அல்லது மதமோ இங்கே தடையாக இல்லை என்பதால், ஆங்கிலமோ அல்லது பிரெஞ்சு மொழியோதான் அவர்களின் தொடர்பாடல் மொழியாக இருக்கப் போகின்றது. தமிழ் இனத்தில் இருந்து ஒரு ஆணோ அல்லது பெண்ணோ வேற்று இனத்தில் திருமணம் செய்தால் அவர்கள் அந்த இனமாகவே மாறிவிடுகின்றார்கள். அதனால் தலைமுறைகளை இழக்க வேண்டிய சூழ்நிலையை தமிழ் இனம் எதிர்கொள்ளப் போகின்றது. தமிழன் என்றால் யார் என்ற கேள்வி மீண்டும் இங்கே எழுகின்றது. தமிழ் பெற்றோருக்குப் பிறந்தவர்கள் தமிழரா அல்லது தமிழ் மொழியைப் பேசுபவர்கள் தமிழரா என்பதற்குத் தெளிவான விளக்கம் வேண்டி நிற்கிறார்கள் இந்த மண்ணில் உள்ள அடுத்த தலைமுறையினர். மொழி என்பது எல்லோருக்கும் பொதுவானதாக இருந்திருந்தால் இந்த உலகிற்கு எவ்வளவோ நன்மை கிடைத்திருக்கும். இதோ 'மொழி' என்ற படத்தில் கவியரசு வைரமுத்துவின் வரிகளைப் பாருங்கள்.

'இயற்கையின் மொழிகள் புரிந்து விடில் மனிதரின் மொழிகள் தேவையில்லை!


இதயத்தின் மொழிகள் புரிந்து விடில் மனிதர்க்கு மொழியே தேவையில்லை!'

இதை ஏன் குறிப்பிடுகின்றேன் என்றால் எங்கள் மொழி பண்பாடு நிலைத்து நிற்க வேண்டுமானால் தமிழர் என்ற அடையாளம் எமக்குத் தேவை. மொழி இல்லாமல் இனம் இல்லை, மொழி அழிந்தால் இனமும் அழிந்து விடும். கனடிய மண்ணில் தமிழ் இனத்தை தக்க வைக்க வேண்டுமானால், எங்கள் தமிழ் மொழி இந்த மண்ணில் நிலைத்து நிற்க வேண்டும். கடந்த நாற்பது வருடங்களாக தமிழ் மொழியைக் கட்டிக்காத்தது மட்டுமல்ல, அதை நாங்கள் நிலைத்து நிற்கவும் வைத்திருக்கிறோம். தமிழ் மொழி இந்த மண்ணில் தொடர்ந்தும் நிலைத்திருக்க வேண்டும் என்றால் இங்குள்ள தமிழ் பெற்றோர்களின் துணையுடன் அடுத்த தலைமுறையினர்தான் அதைச் சாதிக்க வேண்டும். மொழிமீது பற்றுக் கொண்டவர்கள் நிச்சயம் சாதிப்பார்கள் என்று நம்புவோம்.

**குரு அரவிந்தன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ராஜபக்ஷ–சம்பந்தன் சந்திப்பு?
# எங்கே போகிறது

புதிய அரசியலமைப்புக்கான வாய்ப்புகள் அனைத்தும் பொய்த்துப்போன புள்ளியில், இரா.சம்பந்தனுக்கும் ராஜபக்ஷ சகோதரர்களுக்கும் இடையிலான மிக முக்கிய சந்திப்பொன்று, அண்மையில் இடம்பெற்றிருக்கின்றது. இந்தச் சந்திப்பின் ஏற்பாட்டாளராக இலங்கைக்கான சீனத்தூதுவர் செங் ஷியுவான் இருந்திருக்கின்றார் என்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டியது.

சீன இராணுவத்தின் 91வது ஆண்டு நிறைவையொட்டி, சீனத் தூதரகம் ஏற்பாடு செய்திருந்த நிகழ்வு, கொழும்பிலுள்ள நட்சத்திர விடுதியொன்றில் கடந்த வாரம் நடைபெற்றது. குறித்த நிகழ்வுக்கு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக அழைக்கப்பட்டிருந்தனர். அத்தோடு, ஆச்சரியப்படும் அளவுக்கான விருந்தினராக எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தனும் அழைக்கப்பட்டிருந்தார். சீனத் தூதரக நிகழ்வுகளில், கடந்த காலங்களில் அவர் கலந்து கொண்டிருந்தாலும், இராணுவ பாதுகாப்புச் சார்ந்த நிகழ்வுகளில் கலந்து கொண்டதில்லை. அதுவும், கூட்டமைப்பின் ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒருவரும் இல்லாது அவர் கலந்து கொண்டதில்லை. குறைந்தபட்சம் எம்.ஏ.சுமந்திரனையாவது தன்னோடு இருக்கும்படி சம்பந்தன் பார்த்துக் கொண்டிருக்கின்றார். ஆனால், இம்முறை எல்லாமும் வழக்கத்துக்கு மாறாகவே நிகழ்ந்திக்கின்றது.

சம்பந்தனுக்கும் ராஜபக்ஷ சகோதரர்களுக்கும் இடையிலான இந்தச் சந்திப்புக்கு, அரசியல் — இராஜதந்திர ரீதியில் பல கோணங்கள் உண்டு. அரசாங்கத்தின் முக்கியஸ்தர்களைத் தவிர்த்துவிட்டு, எதிர்க்கட்சி வரிசையிலுள்ளவர்களை அழைத்து, ஊடகக் கவனம்பெறும் சந்திப்பொன்றை ஏற்பாடு செய்ய வேண்டும் என்பதில், சீனா குறியாக இருந்திருக்கின்றது. அதுவும், கிட்டத்தட்ட தன்னுடைய கட்டுப்பாட்டில் இருந்த ராஜபக்ஷக்களின் ஆட்சியை அகற்றுவதற்கு, மேற்கு நாடுகளுடனும் இந்தியாவுடனும் இணங்கிச் செயற்பட்ட சம்பந்தனுக்கு, சீனா தற்போது வழங்கியுள்ள முக்கியத்துவம் நிராகரிக்கப்பட முடியாதது.

அடுத்த இரண்டு ஆண்டுகளும் தேர்தல்களால் நிறையப்போகின்றன. கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல்

**கூட்டமைப்பின் மீதான மக்களின் அதிருப்தி என்பது, எதிர்பார்க்கப்பட்ட அளவைக் காட்டிலும் அதிகரித்திருக்கின்றது.**

முடிவுகள் ஒவ்வொரு தரப்புக்கும் ஒவ்வொரு விதமான செய்திகளைச் சொல்லியிருக்கின்றன.

தென்னிலங்கையில் ராஜபக்ஷக்களின் கை மீண்டும் ஓங்குவதற்கான காட்சிகள் எழுந்த போது, வடக்கு— கிழக்கில் கூட்டமைப்பின் தோல்வி முகம் வெளிப்பட்டது. நல்லாட்சி, கூட்டு அரசாங்கம் என்கிற பெயரில் தங்களுக்கு இடையில் இழுபறிப்பட்டுக் கொண்டிருந்த ஐக்கிய தேசியக் கட்சியும் சுதந்திரக் கட்சியும் எதிர்பார்க்காத தோல்விகளைச் சந்தித்தன.

இவ்வாறான கட்டத்தில், தென்னிலங்கையில் ஆட்சி மாற்றமொன்றை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளின் போக்கில், சீனா தன்னுடைய நடவடிக்கைகளை வெளிப்படையாக ஆரம்பித்திருக்கின்றது.

இலங்கை தொடர்பிலான சீனாவின் வெளிவிவகாரக் கொள்கை மற்றும் இராஜதந்திர நடவடிக்கை என்பது, ஒரே கோட்டிலேயே இதுவரை காலமும் இருந்தது. அதாவது, ஆட்சியில் யார் இருக்கின்றார்களோ அவர்களைக் கையாள்வது. அதனையே, 2015களில் ராஜபக்ஷக்களின் ஆட்சி அகற்றப்பட்டதன் பின்னரும் சீனா செய்து வந்தது. அதற்காக, தன்னோடு இணக்கமாக இருந்த ராஜபக்ஷக்களை சில விடயங்களில் வெளிப்படையாகக் கடிந்து கொள்ளவும் செய்தது. ஆனால், கடந்த ஒரு வருட காலத்தில், அந்த நிலைப்பாடுகளில் பாரிய மாற்றத்தைச் சீனா காட்டியிருக்கின்றது. ராஜபக்ஷக்களை மீண்டும் தன்னோடு அணைத்துக் கொண்டு, தனக்கு வேண்டாதவர்கள் என்று கருதிய அல்லது இதுவரை காலமும் போதிய முக்கியத்துவம் வழங்காத கூட்டமைப்பையும் கையாள எத்தனித்திருக்கின்றது.

சீனாவின் இந்த நடவடிக்கை, மைத்திரிக்கும் ரணிலுக்கும் மாத்திரமல்ல, அமெரிக்கா உள்ளிட்ட மேற்கு நாடுகளுக்கும் இந்தியாவுக்கும் கூட ஒரு வகையில் அச்சுறுத்தலானது. ஏனெனில், என்ன செய்தாலும், சம்பந்தன் தங்களுடன் இணக்கமான சூழலில் இருப்பார் என்றே இந்தத் தரப்புகள் நம்பின. சம்பந்தனும் அப்படி இருக்கவே இன்னமும் விரும்புகின்றார். ஆனால், அவர் எதிர்பார்த்திருக்கும் அரசியல் மாற்றங்கள் சாத்தியமாகாத போது, கிடைத்த வாய்ப்புகளைப் பயன்படுத்த நினைக்கின்றார். அதன்மூலம், மேற்கண்ட தரப்புகளுக்கு ஒரு வகையில் எச்சரிக்கையையும் விடுத்திருக்கின்றார்.

சீனத் தூதரகத்தின் நிகழ்வில், சம்பந்தன் கலந்து கொண்டிருந்த அதே காலப்பகுதியில், யாழ்ப்பாணத்தில் இந்திய உயர்ஸ்தானிகராலயத்தால் வடக்கு— கிழக்குக்கு அன்புலன்ஸ் வழங்கும் நிகழ்வொன்று நடாத்தப்பட்டது. பிரதமர் ரணில் விக்ரமசிங்க அதில் கலந்து கொண்டார். கூட்டமைப்பின் பெரும்பாலான பாராளுமன்ற உறுப்பினர்களும் கலந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருந்தனர். அந்த நிகழ்வில், இணைய வழி மூலம் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, நேரடியாக உரையாற்றியிருந்தார். வடக்கு, கிழக்குக்கான இலவச அம்புலன்ஸ் வழங்கும் நிகழ்வு என்பது, சீனத் தூதரகத்தின் இராணுவ நிகழ்வைக் காட்டிலும் முக்கியத்துவம் வாய்ந்தது. அதுவும் மோடி, இணைய வழி நேரடியாக உரையாற்றும் தருணம், மிக முக்கியமானது. ஆனால், அதைச் சம்பந்தன் தவிர்த்துவிட்டு, சீனத் தூதரக நிகழ்கில் கலந்து கொண்டார்.

ஆட்சி மாற்றம் ஏற்பட்டதும், அதிக நம்பிக்கையோடு காத்திருந்தவர்களில் சம்பந்தன் முக்கியமானவர். அவர், தன்னுடைய காலத்துக்குள் தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைகளுக்குப் புதிய அரசியலமைப்பினூடாக இறுதித் தீர்வொன்றைப் பெற்றுக் கொடுத்துவிட முடியும் என்றும், அதன் மூலம், காலாகாலத்துக்கும் சாதித்த பெருமையைத் தான் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் நம்பினார். அதன்போக்கில்தான், ‘2016க்குள் தீர்வு; 2017 தீபாவளிக்குள் தீர்வு’ என்று அவர் நம்பிக்கை ஏற்படுத்தும் வகையில், தமிழ் மக்களை நோக்கித் தொடர்ச்சியாகப் பேசி வந்தார். இன்னமும் அந்தப் பேச்சுத் தொனியை அவர் மாற்றவில்லை.

எனினும், புதிய அரசியலமைப்புக்கான வாசல்கள் அனைத்தும் அடைக்கப்பட்டுவிட்டன என்பதை சம்பந்தன் உணராமல் இல்லை. இன்னமும் புதிய அரசியலமைப்புக்கான வழிநடத்தல் கூட்டங்களிலோ,

**புதிய அரசியலமைப்புக்கான வாசல்கள் அனைத்தும் அடைக்கப்பட்டுவிட்டன என்பதை சம்பந்தன் உணராமல் இல்லை**

துறைசார் வல்லுநர்கள் சந்திப்புகளிலோ கலந்து கொள்வதை அவர் வழக்கமாகக் கொண்டிருக்கின்றார். அதன்போக்கில், சுமந்திரன் உள்ளிட்டவர்களை இன்னமும் அரசியலமைப்பு வரைபு சார்ந்த செயற்பாட்டுத் தளத்தில் வைத்துக் கொண்டிருக்கவும் விரும்புகின்றார். ஆனால், புதிய அரசியலமைப்புக் குறித்து தற்போது மைத்திரியோ, ரணிலோ கிஞ்சித்தும் ஆர்வத்தோடு இல்லை. இந்தியாவோ, அமெரிக்கா உள்ளிட்ட மேற்கு நாடுகளோ கவனத்தில் எடுப்பதில்லை.

அவ்வாறான நிலையில், பாராளுமன்றத்துக்குள் புதிய அரசியலமைப்பு ஒன்றுக்காக பேசிப் பேசி எவ்வளவு தூரம், தொண்டைத் தண்ணீர் வற்றியதோ, அதே மாதிரியான கட்டத்தையே, ஆட்சி மாற்றத்துக்கு ஒத்துழைத்த தரப்புகளும் சம்பந்தனுக்கு வழங்கியிருக்கின்றன. இது, அவரைப் பெரிய அளவில் கோபப்படுத்தியிருக்கின்றது. அப்படியான கட்டத்தில், தன்னுடைய அரசியல் நகர்வுகளில் ஒருவகையிலான வேகத்தைக் காட்ட வேண்டும் என்றும் அவர் விரும்பியிருக்கின்றார்.

கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் ஏற்பட்ட பின்னடைவு, வடக்கு மாகாண சபைக்குள் தொடரும் குழப்பங்கள் போன்றவற்றுடன், முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனின் நடவடிக்கைகளாலும் சம்பந்தன், ஏற்கெனவே எரிச்சலடைந்திருக்கின்றார். அத்தோடு, கூட்டமைப்பின் மீதான மக்களின் அதிருப்தி என்பது, எதிர்பார்க்கப்பட்ட அளவைக் காட்டிலும் அதிகரித்திருக்கின்றது. இவ்வாறான கட்டத்தில், இன்னொரு தேர்தலொன்றை நோக்கிய நகர்வு, எதிர்கால அரசியலில் இன்னும் பெரிய பின்னடைவுகளை ஏற்படுத்தும் என்று அவர் நினைக்கின்றார்.

அப்படியான நிலையில், பின்னடைவுகளுக்கு தடுப்புக்கட்டை போட்டு நிறுத்துவதற்கு, புதிய அரசியலமைப்பின் வழி, இறுதித் தீர்வு என்கிற விடயம் உதவும் என்று நம்புகின்றார். அதனால்தான், புதிய நண்பர்களோடு இணங்கிச் செல்வது தொடர்பில், தனக்குச் சிக்கல் ஏதும் இல்லை என்று மைத்திரியையும் ரணிலையும் மாத்திரமல்ல, அமெரிக்காவையும் இந்தியாவையும் நோக்கிக் கூறியிருக்கின்றார். அதற்கான நகர்வாகவே, சீனத் தூதரகத்தின் நிகழ்வுக்கு முக்கியத்துவம் அளித்திருக்கின்றார்.

புதிய அரசியலமைப்பு தொடர்பில், வெளிப்படையாகத் தற்போதைக்குத் தெரிவது, அதிகபட்சமாக புதிய அரசியலமைப்புக்கான வரைபை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதோடு எல்லாமும் முடிந்துவிடும் என்பதே. இதனை, நோக்கியே ரணில் அதிக ஆர்வத்தோடு இருக்கின்றார். வரைபை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்ததும், கூட்டு எதிரணியும் சுதந்திரக் கட்சியும் முழுமையாக எதிர்த்து, அதைச் செல்லாக் காசாக்கிவிடும். அந்தச் சாக்கோடு புதிய அரசியலமைப்பு என்கிற கட்டத்திலிருந்து ஒதுங்கிக் கொள்ள முடியும் என்று

**புதிய நண்பர்களோடு இணங்கிச் செல்வது தொடர்பில், தனக்குச் சிக்கல் ஏதும் இல்லை என்று மைத்திரியையும் ரணிலையும் மாத்திரமல்ல, அமெரிக்காவையும் இந்தியாவையும் நோக்கிக் கூறியிருக்கின்றார்.**

கருதுகிறார். அதன்போக்கில்தான், பாராளுமன்றத்தை இன்னமும் வலுப்படுத்தும் 20வது திருத்தச் சட்டத்தை நிறைவேற்றுவது சார்ந்து, அதிக ஆர்வத்தை ரணில் வெளிப்படுத்துகின்றார். அது, அவருக்கான எதிர்கால அரசியல் இருப்புக்கு உதவும். அதற்காக, ஜே.வி.பி.யின் வரைபுகளை அவர் மனதார வரவேற்கிறார். இதுதான், இன்றைய நிலை. இப்படியான கட்டத்தில்தான், சம்பந்தனின் ராஜபக்ஷக்களுடனான சந்திப்பை நோக்க வேண்டும்.

**புருஜோத்தமன் தங்கமயில்**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சனத் ஜெயசூரியா நல்ல வீரர்தான். ஆனால்...



"சனத் ஜெயசூரியா" என்பது பெயர் சொல் அல்ல, அது ஒரு வினைச்சொல். ஒரு காலத்தில் எங்களை பிணைந்தெடுத்துக்கொண்டிருந்த வெறித்தனமான பெயர்தான் சனத் ஜெயசூரியா. கிரிக்கெட் ஆட்டங்களை பார்க்கத்தொடங்கிய பால்ய காலத்தில் எமக்கெல்லாம் மிகப்பெரிய ஆதர்ஷமாக விளங்கிய நபர் சனத் ஜெயசூரியா.

அவர் விளையாடிய போட்டிகள் முதல் விளாசிய சிக்ஸர்கள் வரை அனைத்தும் இன்றைக்கும்கூட மனப்பாடம். இந்திய சுதந்திர தின கிண்ணத்துக்கான போட்டியின் இறுதி ஆட்டத்தில் ஆரம்ப துடுப்பாட்ட வீரராக இறங்கி கடைசிவரை ஆட்டமிழக்காமல் நின்று 151 ஓட்டங்களை விளாசிய போட்டியா —

அல்லது அதற்கு முன்னால் 48 பந்துகளில் சார்ஜாவில் சதமடித்து சாதனை படைத்த போட்டியா —

இல்லை, 340 அடித்துவிட்டு கங்குலியிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்த போட்டியா அல்லது அபே குருவில்லாவின் பந்துக்கு 199 இல் ஆட்டமிழந்து சென்றதா எதுவென்றாலும் இன்றும்கூட துடுப்பொன்றை தந்தால் சனத் ஆட்டமிழந்த பாணியை அப்படியே ஆடிக்காட்டுமளவுக்கு ஜெயசூரியாவின் வெறிபிடித்த ரசிகனாக திரிந்த காலமது.

சனத்தை ரசிக்க தொடங்கிய பின்னர் அவர் விளையாடிய பழைய ஆட்டங்களையெல்லாம் SPORTS STAR மகஸீனை வாங்கி படித்து அவரது வரலாற்றை மனப்பாடம் செய்துகொண்டோம். யார் யாரெல்லாம் சனத்திடம் தொடர்ந்து அடி வாங்குவார்கள் என்பதற்கு ஒரு பெரிய லிஸ்டே எங்களிடம் அப்போதிருந்தது. அது மனோஜ் பிரபாகரில் தொடங்கி வெங்கடேஸ் பிரசாத் ஊடாக பெரிய பட்டியலாக நீளும். சயன்ஸ் ஹோலில் டியூஷனுக்கு போவதற்கு முன்னர் 'பில்லி' வீட்டிலிருந்து மேட்ச் பார்க்கும்போது சரி, சண்முகம் அண்ணன் வீட்டிலிருந்து மேட்ச் பார்க்கும்போதுசரி எங்கள் வீட்டிலே பெருங்கும்பலாக இருந்து மேட்ச் கண்டு ரசிக்கும்போதுசரி சனத் களத்தில் நிற்கிறார் என்றால் கண்கள் இமைக்காது. அவர் களத்தில் நிற்கின்ற இலங்கை அணியின் முதல் பதினைந்து ஓவர்கள் வயிற்றில் புளி கரைக்கும். ஜெயசூரியாவுக்கு பந்து வீசப்படும் ஒவ்வொரு கணமும் சிறுநீர்பை வீங்கி சுருங்கும்.

ஒவ்வொரு பந்தையும் முகம் கொடுப்பதற்கு முன்னர் ஜெயசூரியா தனதுதுடுப்பைதொடையில்சாத்திவிட்டு இரண்டு பொக்கெட்டுக்களிலும் பெரு விரல்களால் குத்தி ஏதோ செய்வார். (அவர் மயூராபதி கோயிலுக்கு வாறவர் என்றும் அங்கு அர்ச்சனை செய்த விபூதி சரையைத்தான் ஒவ்வொரு போட்டியின்போதும் பொக்கெற்றில் வைத்திருப்பவர் என்றும் சண்முகம் அண்ணை வீட்டில் மேட்ச் பார்க்க வந்தவன் ஒருத்தன் அப்போது சொன்னான். அதையெல்லாம் அப்போது பயங்கரமாக நம்பினோம். அவனே பிறகொருநாள் மேட்ச் பார்க்க வந்தபோது மஹேல ஜெயவர்த்தனவின் தகப்பன்தான் ஜே.ஆர்.ஜெயவர்த்தன என்றான். அதோடு கொஞ்சம் உசாராகிக்கொண்டோம்)

கையுறையை கழற்றிவிட்டு மீண்டும் அணிந்துகொள்வார். காலுறைகளை இழுத்து சரிப்பண்ணுவார். பிறகு இரண்டு கால்களையும் அகட்டி வைத்து ஆடுகளத்தை துடுப்பினால் கொத்தோ கொத்தென்று கொத்துவார். வீசப்போகும் பந்துக்கு கொடுக்கப்போகும் அடியை தரையிலே அடித்து சரிபார்க்கிறார் என்று கதிரை நுனியிலிருந்து பார்த்துக்கொண்டிருப்போம். அடுத்த கணம், ஜெயசூரியா கொடுத்த அடியில் off side வழியாக பந்து மின்னல் வேகத்தில் தடுப்பாளர்களை கிளித்துக்கொண்டு பறக்கும்போது அந்த கறுப்பு சிங்கத்தை கட்டிப்பிடித்து கன்னத்தை கவ்விக்கொள்ளலாம் போல இருக்கும்.

அரவிந்தாவையெல்லாம் அப்போது விசாகன்தான் தூக்கிப் பிடித்துக்கொண்டிருப்பானே தவிர, எமக்கெல்லாம் சனத்தான். துடுப்பாட்டம் மாத்திரமல்ல, அவரது பந்து வீச்சையும்கூட ரசித்தோம். கங்குலி, ஷஹிட் அவ்ரிடி, ரொபின் சிங் என்று பெரியதொரு பட்டாளமே ஜெயசூரியா பந்து வீச வருகிறார் என்றால் ஏக குஷி ஆகிவிடுவார்கள். குழந்தைப்பிள்ளை ஒண்டுக்கிருப்பதுபோல ஜெயசூரியா வீசுகின்ற பந்தினை பவிலியனைதாண்டியும் சிக்ஸர் அடிப்பார்கள். ஆனால், நாங்கள் அவற்றையெல்லாம் எங்கள் வெற்றி நாயகனுக்காக கண்ணீருடன் ரசித்தோம்.

இவ்வாறு சனத் விளையாடிக் கொண்டிருந்தபோதே —ஒரு காலகட்டத்தில் — அவரது வயதோடிருந்த பலர் ஒவ்வொருவராக கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறத்தொடங்கினார்கள். அந்த செய்திகள் எமக்கு பேரிடியாக இறங்கத்தொடங்கின. இளைப்பாறும் இந்த வீரர்களின் வரிசையில் ஜெயசூரியாவையும் நாங்கள் இழந்துவிடப்போகிறோமா என்ற பயம் அப்போதுதான் எமக்குள் துளிர்விட்டது. இவ்வளவுக்கும் பிற்காலகட்டத்தில் ஜெயசூரியா ஆடுகளத்தில் எதையுமே வெட்டி புடுங்காவிட்டாலும் அவரை இழப்பதற்கு மனம் சம்மதிக்கவில்லை. சந்தியில் சடைத்துக்கிடந்த பெருமரத்தை தறிப்பதுபோன்றதொரு உணர்வுதான் உள்ளுக்குள் எழுந்தது. ஆனால் எங்களது உணர்வை புரிந்துகொண்டாரோ என்னவோ, ஜெயசூரியாவுக்கு இளைப்பாறும் எண்ணம் இம்மியளவுக்கும் இருக்கவில்லை.

இலங்கை அணிக்கு பத்து பேரை எவ்வாறு தெரிவு செய்வது என்பதுதான் அப்போதுதெரிவுக்குழுவுக்கு வேலையாக இருந்தது. ஏனெனில் ஜெயசூரியா அணி வீரர்களின் பட்டியலில் நீண்ட காலமாக பாய் போட்டு படுத்திருந்தார். விளையாடினார் விளையாடினார் 41 வயது வரைக்கும் விளையாடினார். சங்கக்கார — மஹெல போன்றோருக்கு இவரை ஆரம்ப துடுப்பாட்டக்காரராக வைத்து இனியெல்லாம் என்ன செய்வது என்று வெறுக்குமளவுக்கு விளையாடினார். விளையாடினார் என்று கூறுவதிலும் பார்க்க மைதானதுக்கு போய் வந்தார் என்று கூறுவதுதான் சரி.

அவரது அந்திம காலத்தில்தான் ஒரு தடவை, மைதானத்தில் இலங்கை அணிக்கு எதிராக தமிழர்கள் குரல் எழுப்பி, எல்லைக்கோட்டுக்கு அருகில் நின்றுகொண்டிருந்த ஜெயசூரியாவை பார்த்து கத்தியபோது அவர் நடு விரலை காண்பித்த சம்பவமும் நடந்தேறியது.

அவ்வளவுதான்!

எமக்குள் வீரபூருஷனாக வியாபித்துக்கிடந்த அந்த வீரனின் விம்பம் கொஞ்சம் கொஞ்சமாக உதிரத்தொடங்கியது. அவர் இல்லை என்றால் கிரிக்கெட்டே இல்லை என்று விரதமிருந்த நாள்கள் அனைத்தும் பின்னர் ஒரு காலத்தில் எமக்கு ஜெயசூரியாவினால் சபிக்கப்பட்டது போலானது.இலங்கைஅணியின் ஆரம்பத் துடுப்பாட்டக் காரராக ஜெயசூரியா வருகிறார் என்றாலே "ஐயோ........." என்று ஒப்பாரிவைக்குமளவுக்கு அவர் முற்றிலுமே வேண்டத்தகாதவராக நினைவுகளில் அலையத்தொடங்கினார். அவரது பழைய சாதனைகளைக்கூட எண்ணிப்பார்க்க விரும்பாத அளவுக்கு அவர் மீதான வெறுப்பு அதிகரிக்கத்தொடங்கியது.

வீரபுருஷர்களுக்கு எப்போதும் expiry date என்று ஒன்றுள்ளது. அந்த திகதியை அண்மிப்பதாக தாங்கள் உணருவதற்கு முன்னரே அவர்கள் களத்திலிருந்து அகன்றுவிடவேண்டும். முரண்டு பிடிப்பவர்களை வரலாறு ஒருபோதும் வாழ்த்தி வழியனுப்புவதில்லை.

அதுபோலத்தான், கலைஞர் கருணாநிதியின் மீது எத்தனையோ விமர்சனங்கள் இருந்தாலும் அவர் இன்று படுக்கையில் உழன்று கொண்டிருக்கும் அந்த காட்சி ஒருகணம் ஜெயசூரியாவை ஞாபகப்படுத்திச்சென்றது. வயதின் மூப்போடும் நோயின் தாக்குதலோடும் போராடும் கலைஞரின் நிலை மிகவும் பரிதாபமாக இருந்தது ஒருபுறம். மறுபுறத்தில், அவரது உண்மையான நிலையை உணர்ந்தும்கூட சில அரசியல் வியாதிகள் "தலைவா நீ மீண்டும் எழுந்து வந்து எங்களை வழி நடத்தவேண்டும்" — என்று வீர முழக்கமிட்டுக்கொண்டிருப்பதையும் எப்போது அவரது மரணச்செய்தி வரும் என்று காவேரியின் வாசலில் ஊடகக்காரர்கள் காத்திருப்பபதையும் காணும்போது பெரும்பழியாக கிடக்கிறது.

இலக்கியத்தின் நாயகனாக — அரசியலின் நாயகனாக — சாணக்கியத்தின் நாயகனாக விளங்கிய கருணாநிதியை இன்று சாவின் நாயகனாகவும் தத்தெடுப்பதற்கு ஊடகங்கள் படுகின்ற பாடு, அவை ஓயாது ஒலிபரப்பிக்கொண்டிருக்கும் Breaking News பின்னணி இசையின் வழியாக ஒப்பாரியாகவே கேட்டுக்கொண்டிருக்கிறது.

**ப. தெய்வீகன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Thermo Care
## HEATING & COOLING

TCHC

**For all your repairs & installation needs**

**O: 416 640 1174 | C: 416 825 9373 | F: 416 640 1175**

We offer flexible Financing Options to specifically meet your budget.
It's the fast, flexible and easy way to upgrade your home-comfort system.

**Toll Free : 1 800 416 1623**

1. Financing Loan for 1 year with No Payment and No Interest Charged.
2. Equal Payment Plans that can be arranged to be paid within 2 or 3 Years.
3. Financing Options offered for 5 or 10 years, paid with equal installation payments

- Furnace
- Air Conditioner
- Furnace Cleaning
- Humidifiers
- Air Cleaners
- Tankless Water Heater Rental

Avail up to $2350 In Rebates on Eligible Heating & Cooling Equipment

» **Heating / Cooling Protection Plan $14.99/monthly**

» **Maintenance Plan $7.99/monthly**

» **Air Conditioner, Furnace Rental Rate from $29.99/monthly**

» **Tankless Water Heater Rental Rate from $34.99/monthly**




## The Next Generation

Water Softeners

*Quality water better than bottled water*

Refineosoft

EXCALIBUR Water Systems

- Removes Chlorine
- Softens Water
- Save 70% On Soap & Cleaners
- Removes Chemicals
- Soften Skin & Hair
- Save 27% On Hot Water Cost
- Shinny Kitchen & Bath Sink




VISA

BEST SERVICE

BEST WARRANTY

BEST PRICE

1365 Morningside Avenue, Unit #6 | Scarborough, M1B 4Y5 | www.thermocare.ca | thermocare@hotmail.ca




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்காபுரோ ரூச் பார்க் தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரி அவர்களது கோடைகால மக்கள் சந்திப்பு நிகழ்வு ஜூலை 08 2018











மேலதிக புகைப்படங்களை இகுருவி இணையத்தளத்தில் பார்வையிடலாம்.








# AANiiN Community Centre & Library திறப்புவிழா







ஜூலை 20 கனடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ அவர்கள் புதிதாக திறந்து வைக்கப்பட்ட AANiiN Community Centre & Library ஐ பார்வையிட்டு, கனடாவின் குழந்தை நலன் (CCB) உயர்கல்விக்கான செலவினத்தை உயர்த்துவதற்காக அறிவிப்பை வழங்கினார். இந்த மாற்றம் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னரே திட்டமிடப்பட்டு, ஒவ்வொரு மாதமும் பெற்றோர்கள் தங்கள் குடும்பங்களுக்குத் தேவையான பொருட்களை வாங்குவதற்கு அதிகமான பணத்தை வழங்குகின்றது

மேலதிக புகைப்படங்களை இகுருவி இணையத்தளத்தில் பார்வையிடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்ப அரசியலின் எதிர்காலம்...?

## மூக்குக்கண்ணாடி

நான் உயர் தர வகுப்பில் கல்வி கற்றுக்கொண்டிருந்த பொழுது, எமது வகுப்பிற்கான தமிழ் மன்றத்தில் எனது நண்பர் அன்று பேச வேண்டும். அவர் பேச ஆரம்பித்த போது வழமை போல் 'சேற்றில் செந்தாமரை போல் வீற்றிருக்கும்' தலைவர் அவர்கட்கும், புத்தியில்லாதவன் போல் அமர்ந்திருக்கும் செயலாளருக்கும் என விளித்து தனது பேச்சை ஆரம்பித்தார். அவர் பேசிய பின்னர், பலரும் அவர் செயலாளரை விளித்த விதம் தவறானது மன்னிப்புக் கேட்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்கள். அன்றைய கூட்டத்துக்கு போசகராக அமர்ந்திருந்த அதிபரும் அதனை வலியுறுத்தினார். மேடைக்குச் சென்ற நண்பன் தான் 'புத்தியில் ஆதவன்' போல் வீற்றிருக்கும் எனத்தான் கூறினேன், நீங்கள் நான் அவரை முட்டாளாகக் கூறியதாக நினைத்திருந்தால் நான் மன்னிப்புக் கேட்கின்றேன். நான் அவரை சூரியனைப் போல் அறிவுள்ளவராகவே கூறினேன் என்றார். அதிபர் 'கருணாநிதியின் பேச்சுக் கேட்ட தாக்கம்' என நண்பரை பாராட்டி முதுகில் அன்பாக(?) தட்டினார். எங்களது கல்லூரியில் தமிழ் ஆதிக்கம் குறைவு. எங்களது கல்லூரி நிகழ்வுகள் அனைத்தும் ஆங்கிலத்திலேயே நடைபெறும். அவ்வாறான கல்லூரிக்கு கலைஞர் உபயோகிக்கும் சிலேடையை ஒரு மாணவன் கூறக் கேட்பது புதிதாக இருந்தது. இதுவே எனக்கு கலைஞரின் தமிழ் மீது ஈர்ப்பை ஏற்படுத்தியது. நான் இந்தியாவில் இருந்த காலங்களில் கலைஞரின் கூட்டங்கள் நடைபெற்றால் அவரது தமிழுக்காக மட்டும், தவறாமல் கலந்து கொள்வேன்.



### சினிமா - நாடகம்

திராவிட இயக்கங்களின் வருகையே தமிழ்ச் சினிமாவை அதன் திரை மொழி ஆளுமையிலிருந்து விலகவைத்து விட்டது. எனவே தமிழ்ச் சினிமா 'நாடகத் தமிழ்'க் கே முக்கியத்துவம் கொடுத்தது. இதனை பேசியே சிவாஜி என்னும் மிகை நடிகரை தமிழ்த் திரையுலகிற்கு கொடுத்தது. நான் ஒரு பொழுதும் சிவாஜியை சிறந்த நடிகராக கருதுவதில்லை. அவர் ஒரு மிகை நடிகர். திராவிட இயக்கங்கள் சினிமாவின் ஊடாக பகுத்தறிவை பரப்பினார்கள் என்பது மறுப்பதற்கில்லை. சினிமாவை ஒரு கலைவடிவமாக கருதாது, அதனை ஒரு பிரச்சார உத்தியாகவே பயன்படுத்தினார்கள்.

தமிழ் மொழியை வன்மையாக பாவித்து இவர் திரைப்படங்களுக்கு வசனம் எழுதியிருப்பார். பராசக்தி, மனோகரா போன்ற படங்களில் இத் தன்மையை காணலாம். சொற்கள் கடும் மழை போல் பொழிந்தன. இவரது வசனங்களைப் பேசிக் காட்டியே நீண்ட காலம் பல புதிய நடிகர்கள் சினிமா வாய்ப்புக்களைப் பெற்றனர்.

மருதநாட்டு இளவரசியில் இவர் எழுதிய வசனங்கள் இவை

நீதியின் நிலைக்களமாய் இ
நேர்மையின் உலைக்களமாய் வாழ்ந்த
வண்டமிழ் வளநாடே!

நீ, சூதர்களின் உறைவிடமாய்,
சூழ்ச்சியின் இருப்பிடமாய்
ஆனது ஏன்? இந்த
மண்ணிலேதான் பிறந்தேன்!
இந்த மண்ணிலேதான்
மழலை மொழி
பேசித் தவழ்ந்து
விளையாடினேன்!
இந்த மண்ணிலேதான்
சவமாகச்
சாயப்போகிறேன்.
வந்தாரை வாழ
வைக்கும் இந்த மண்ணில்
சொந்த நாட்டுக்காரன்
அநியாயமாகச்
சாவதா?
குற்றமற்றவன் சாவதா?'

பராசக்தியில் இவர் எழுதிய வசனங்கள் இவை

'சிங்கத் திருநாடே நீ சிலந்திக் கூடாக மாறியது எப்போது? வந்தாரை வாழ வைக்கும் வளமிகு தமிழகமே நீ சொந்த நாட்டானையே சுரண்டுவது எத்தனை நாட்களாக?'

இவர் எழுதிய வசனங்களுக் கெதிராகவே இவரது அரசியல் அமைந்திருந்தது. தமிழ் நாட்டு மக்களை மிக மோசமாக இவரது குடும்பமே சுரண்டியது.

எம்.ஜி.ஆர், சிவாஜி என்ற இரு நடிகர்களின் வளர்ச்சிக்கு இவரது வசனங்கள் துணைபோயின. அதே போல் தமிழுக்கு அதீத நடிப்பையும் இவரது வசனங்களே அறிமுகப்படுத்தின. தமிழ்த் திரைப்படங்களின் திரை மொழியை சுமார் 25வருடங்கள் பின் தள்ள இவரது வசனங்கள் காரணமாயின.

நாடகமும் மரபு ரீதியான நாடகங்களாகவே மேடையேற்றப்பட்டன. நவீன நாடக வளர்ச்சியின் போக்கு தாமதமானதிற்கு திராவிட பிரச்சார நாடகங்கள் காரணமாயின.

### அரசியல்

'வாளை எடு! வாழ்வா? சாவா? என்பதை போரில் புரிந்து கொள்வோம்' என முரசொலி யில் முழங்கி தனது அரசியல் வாழ்வை ஆரம்பித்த கலைஞர், முள்ளிவாய்க்கால் ஈழத் தமிழர் இன அழிப்பின் போது அமைதி காத்தார். அவர் நினைத்திருந்தால், தமிழ் நாட்டில் பெரும் மக்கள் போராட்டத்தை நடாத்தியிருக்கலாம். மத்திய அரசுக்கு நெருக்கத்தை கொடுத்திருக்கலாம். முதல் முரசொலி இதழின் ஆசிரியர் தலையங்கத்தில் 'இந்தப் பொங்கல் உன் உள்ளம் பொங்கட்டும்' என மத்திய அரசையும், இலங்கை அரசையும் குளிர்வித்தார். இந்தியாவில் ஈழத் தமிழ் அகதிகள் மிக மோசமான வாழ்விற்கு தள்ளப்பட்டமைக்கு கலைஞரும் ஒரு காரணம் என்பது மறுப்பதற்கில்லை. பல இளைஞர்கள் சிறையில் கொடுமையான சித்திரவதைகளை அனுபவித்தார்கள். ஏன்?

இவரது அரசியல் வாழ்வு என்பது சிக்கல்கள் நிறைந்தது. ஒரு ஊழல் அரசியலையையே முன்னெடுத்தார். அறிஞர் அண்ணா இறந்த பொழுது, அண்ணாவிற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலக்கியம்

மனித உணர்ச்சிகள், அவற்றின் சமூகத் தளம், பின்புலம் போன்ற விடயங்களை தமிழ் இலக்கியத்தில் கலைஞர் வெளிப்படுத்த தவறவில்லை. பரம்பரை இலக்கியங்களை மீள மக்கள் மத்தியில் இலகுவான தமிழில் மக்களுக்கு அறிமுகப்படுத்தியமை கலைஞரின் மிக முக்கிய பங்களிப்பாகும். குறளோவியம், சங்கத் தமிழ் என்பன இதற்கு மிகச் சிறந்த உதாரணங்கள். மேடைத் தமிழுக்கு அவரளித்த முக்கியத்துவம், இன்றும் தமிழ் தமிழ்நாட்டில் உயிர்ப்புடன் வாழ காரணமாகியுள்ளது. திராவிட இயக்கங்களாலேயே இன்றும் தமிழ் தமிழ் நாட்டில் வாழ்ந்து கொண்டிருக்கின்றது. இல்லையேல் தமிழ் நாட்டில் தமிழ் என்றோ அழிந்து இருக்கும். ஒரு 30 வீதமான மக்களே தமிழை பேசுபவர்களாக இருப்பார்கள். அடி நிலை தமிழர்களின் பேச்சுத் தமிழையே உரைத் தமிழாக மாற்றியவர்.

## இலங்கையில் திராவிடம்

ஆரம்பத்தில் தமிழ் அரசுக் கட்சி, காங்கிரஸ், பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணி என அனைத்துக் கட்சிகளும் திராவிட அரசியல் பிரச்சார உத்திகளை பயன்படுத்தியுள்ளார்கள். நெற்றில் இரத்தப் பொட்டிடுதல், வீர வசனப் பேச்சுக்கள் இவையனைத்தும் திராவிட வழிவந்தவை.

## கலைஞரைப் பற்றிய ஒரு சிறு அறிமுகம்






- நாகப்பட்டினம் மாவட்டத்தில் திருவாரூருக்கு அருகில் உள்ள திருக்குவளை என்னும் கிராமத்தில் 1924 ம் வருடம் ஜூன் 3 ம் தேதி அன்றுஇ முத்துவேலருக்கும் அஞ்சுகம் அம்மையாருக்கும் மகனாக பிறந்தார். இவரது இயற்பெயர் தட்சிணாமூர்த்தி ஆகும்.
- நீதிக்கட்சியை சேர்ந்த அழகிரிசாமியால் தன் சிறுவயதில் ஈர்க்கப்பட்டு அரசியலுக்கு வந்தவர் கருணாநிதி. அதன் காரணமாகவே தம் மகனுக்கு அழகிரி என்று பெயர் சூட்டினார்.
- மூன்று முறை திருமணம் செய்துகொண்டவர் கருணாநிதி. முதல் மனைவி பத்மாவதி. அவருக்குப் பிறந்தவர் மு.க.முத்து. திருமணமான சில ஆண்டுகளிலேயே மரணமடைந்தார் பத்மாவதி. கலைஞரின் இரண்டாவது மனைவியான தயாளு அம்மாளுக்கு பிறந்தவர்கள் அழகிரி, ஸ்டாலின், செல்வி மற்றும் தமிழரசு. அவரது மூன்றாவது மனைவியான ராஜாத்தியம்மாளுக்குப் பிறந்தவர் கனிமொழி.
- 50களிலிருந்து 70கள் வரை தமிழ்த் திரையுலகில் கோலோச்சிய சிவாஜி கணேசன், எம்.ஜி.ராமச்சந்திரன் ஆகிய இருவருக்கும் மிகப் பெரிய வெற்றிப்படங்களை அளித்தவர் கருணாநிதி. சிவாஜிக்கு பராசக்தி, மனோகரா. எம்.ஜி.ஆருக்கு மந்திரி குமாரி, மலைக்கள்ளன்.
- 1947ல் வெளியான ராஜகுமாரி தொடங்கி, 2011ல் வெளியான பொன்னர் சங்கர் வரை சுமார் 64 வருடங்கள் திரையுலகில் கதை, திரைக்கதை, வசனம், பாடல்கள் என பல்வேறு துறைகளிலும் பணியாற்றியிருக்கிறார் கருணாநிதி.
- கருணாநிதி பணியாற்றிய படங்களின் எண்ணிக்கை 69.
- இதுவரை 13 சட்டமன்றத் தேர்தல்களில் போட்டியிட்டிருக்கும் கருணாநிதி இதுவரை ஒரு தேர்தலில்கூட தோல்வியடைந்ததில்லை.
- உடல்நலம் நன்றாக இருந்தவரை, காலை 4.30 மணிக்கு எழுந்து, எல்லாப் பத்திரிகைகளையும் படித்துவிடும் பழக்கம் கொண்டவர் கருணாநிதி. சில சமயங்களில் சம்பந்தப்பட்ட பத்திரிகை அலுவலகங்களுக்கும் அதிகாலையிலேயே அழைத்துப் பேசுவார்.
- 1969–1971 — கா. ந. அண்ணாதுரை மறைவுக்குப் பின் முதல் முறை ஆட்சி
- 1971-1976—இரண்டாவது முறையாக
- 1989–1991 –எம். ஜி. இராமச்சந்திரன்இ மறைவுக்குப் பின் மூன்றாம் முறை ஆட்சி
- 1996-2001—நான்காம் முறை ஆட்சி
- 2006-2011—ஐந்தாம் முறை ஆட்சி
- இலக்கியப் பங்களிப்புகள்

குறளோவியம், நெஞ்சுக்கு நீதி, தொல்காப்பிய உரை, சங்கத் தமிழ், பாயும் புலி பண்டாரக வன்னியன், ரோமாபுரி பாண்டியன், தென்பாண்டி சிங்கம், வெள்ளிக்கிழமை, இனியவை இருபது, சங்கத் தமிழ், பொன்னர் சங்கர், திருக்குறள் உரை, மேடையிலே வீசிய மெல்லிய பூங்காற்று

(நன்றி பி.பி.சி)




அடுத்தபடியாக இருந்த நெடுஞ்செழியன் முதல்வராக தேர்வு செய்யப்பட்டிருக்க வேண்டும். ஆனால் பின் கதவால் கருணாநிதி முதல்வராகி விட்டார். நெடுஞ்செழியனை அமைச்சர் பதவியேற்குமாறு பல தடவைகள் கேட்டும் மறுத்து விட்டார். இது கருணாநிதியின் முதல் அரசியல் தோல்வியுமாகும்.

அண்ணாவிடம் ஒரு ஒழுக்க கூச்சமிருந்தது (moral fastidiousness). கலைஞர் ஒரு நியதியற்ற அரசியலையே நடாத்தினார். பகுத்தறிவு பாசறையிலிருந்து வந்திருந்தாலும், சிந்தனையற்ற ஒரு ஆட்சியையே நடாத்தினார்கள். மனிதனின் சமூக ஒழுங்கமைப்பு, அதிகாரம், அதிகாரத்தின் அடிப்படைகள் என்பன அரசியலின் முக்கிய கூறுகளாகவுள்ளன. கலைஞர் ஒரு கட்சியின் தலைவர். ஐந்து தடவைகள் முதலமைச்சர். இவ்விரு பதவிகளிலும் அவர் தனது குடும்பத்துக்கு அளித்த முக்கியத்துவம், கட்சித் தொண்டர்களுக்கும், முக்கியஸ்தர்களுக்கும் கொடுக்கவில்லை. அவரது அமைச்சரவையில் குடும்ப உறுப்பினர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டன. மத்தியில் தி.மு.க ஒரு முக்கிய ஆளுமையாக, காய் நகர்த்தும் திறனுடன் இருந்த போதெல்லாம், அவரது குடும்பத்துக்கும் கொடுக்கப்பட்ட முக்கியத்துவத்தால், அவரால் தமிழ் நாட்டிற்கு எதுவும் செய்ய முடியாமல் போய்விட்டது. குடும்ப உறுப்பினர்களின் ஊழல்களை மையப்படுத்தி, மத்திய அரசு இவரது கைகளை கட்டிப் போட்ட போது அமைதியாக இருந்து விட்டார்.

அதுவே ஈழத் தமிழர்களின் நிலையிலும் ஏற்பட்டது. முதலாவதாக அவருக்கு ஒரு பொழுதும், ஈழத் தமிழரின் சுயநிர்ணய உரிமையில் நம்பிக்கையிருக்கவில்லை. 'ஈழத் தமிழர்' என்பது அரசியல் வெற்றிக்கான கருவியாகவே பாவிக்கப்பட்டது. எம்.ஜி.ஆருக்கு இருந்த அக்கறை இவருக்கு இருக்கவில்லை. மத்தியில் காங்கிரஸ் ஈழத் தமிழ் பிரச்சினைக்கு ஆதரவு தெரிவித்த போது, கலைஞரும் தலையாட்டினார்.

கலைஞர், எம்.ஜி.ஆருக்கு பின்னர் ஆட்சியல் அமைந்த காலங்களில், பல பிரச்சினைகளில் மத்திய அரசாங்கத்தின் ஒரு தலையாட்டியாகவே செயல்பட்டார். இதற்கான மிக முக்கிய காரணம், அவரது குடும்ப உறுப்பினர்களின் ஊழல். சுய நலம்.


குறளோவியம் நூலில் ஒரு குறளுக்கு கலைஞர் எழுதிய பொழிப்புரை

**'உலகின் எல்லா உயிர்களையும் தூங்கச் செய்கின்ற இரவே! உனக்கு இப்போது என்னைத் தவிர வேறு யாரும் துணையில்லை. உன் நிலை இரங்கத்தக்கது.'**

**ரதன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 35வது வருட கறுப்பு ஜூலையிலிருந்து

1956 தொடக்கம், கடந்த மார்ச் மாதம் நடைபெற்ற கண்டி, திகன வன்முறைகள் வரையில், அனைத்து வன்முறைகளும் திட்டமிட்ட வகையில் நடாத்தப்பட்டவை. அதுபோலவே, 1983 கறுப்பு ஜூலை வன்முறைகளும் அரச தலையீட்டுடன் நடாத்தி முடிக்கப்பட்டவை.

இலங்கை அரசாங்கமும், அதன் பாதுகாப்புத் தரப்பும் செய்த ஒவ்வொரு திட்டமிட்ட வன்முறைகளுக்குப் பின்னாலும், பேரினவாத— இன அழிப்புச் சிந்தனை இருந்தது. சுதந்திர இலங்கையில், பௌத்த சிங்களப் பேரினவாதம் கோலோச்ச ஆரம்பித்தது முதல், சிறுபான்மையினருக்கு எதிரான திட்டமிட்ட ஆக்கிரமிப்பும் அழிப்பும் வலுப்பெற்றன.

அதன், முதல் கட்டமாக 'சிங்களம் மட்டும்' சட்டத்தினூடாக, அரச சேவையிலிருந்த தமிழ் மக்கள் இலக்கு வைக்கப்பட்டார்கள். அதன்பின்னரான ஒவ்வொரு கட்டத்திலும், தமிழ் மக்களின் நிலம், கல்வி, பொருளாதாரம் என்கிற அடிப்படைகள் இலக்கு வைத்துத் தகர்க்கப்பட்டன.

2009களுக்குப் பின்னரும் கூட, நில ஆக்கிரமிப்பு என்பது, திட்டமிட்ட வழிகளில் வடக்கு, கிழக்கு பூராவும் முன்னெடுக்கப்படுகின்றது. இராணுவ முகாம்களாகவும் பௌத்த விகாரைகளாகவும் தொல்லியல் திணைக்களத்தின் வடிவத்திலும் ஆக்கிரமிப்பின் கூறுகள் நீள்கின்றன.

கறுப்பு ஜூலை வன்முறைகளின் 35ஆவது ஆண்டு நிறைவு கடந்த திங்கட்கிழமை (23) நினைவு கூரப்பட்டது. 1983ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் விடுதலைப் புலிகளின் தாக்குதலில் 13 இராணுவத்தினர் கொல்லப்பட்டதுதான், ஜூலை வன்முறைகளுக்கான காரணம், என்கிற உணர்வு நிலையொன்று, இன்னமும் தென்னிலங்கை மக்களிடம் தக்க வைக்கப்படுகின்றது. அதுபோல, விடுதலைப் புலிகளின் உருவாக்கம்தான், இன முரண்பாடுகளுக்கான காரணம் என்று திரும்பத் திரும்ப போதிக்கப்படுகின்றது.

உண்மையான பிரச்சினைகள் தொடர்பில் பேசுவதை, தென்னிலங்கை எப்போதுமே தவிர்த்து வந்திருக்கின்றது. மாறாக, விளைவுகள் பற்றியே பேசி விடயங்களைக் கடக்க நினைத்திருக்கின்றது.

தமிழ்த் தேசியப் போராட்டம் என்பது சிங்கள மக்களுக்கு எதிராக எழுந்த ஒன்றல்ல. அது, பௌத்த, சிங்களப் பேரினவாத சிந்தனைகளுக்கு எதிராக எழுந்த ஒன்று. பௌத்த, சிங்களப் பேரினவாதம் தன்னுடைய கொடுங்கரங்களை ஒவ்வொரு கட்டத்திலும் இன அழிப்பை முன்னிறுத்தி நீட்டும் போதும், தமிழ்த் தேசியவாதம் தன்னைத் தற்காத்துக் கொள்வதற்காக எழுந்திருக்கின்றது.

அதன்வழியே, தமிழ்த் தேசியப் போராட்டங்கள், அஹிம்சை வழி தொடங்கி, ஆயுத வழி வரை சென்று சேர்ந்தது.

ஒரு நாட்டின் அரசமைப்பு உள்ளிட்ட அரச கட்டுமானங்களில் அத்துணை ஏற்றதாழ்வுகளையும் சிறுபான்மைச் சமூகங்கள் மீதான அடங்குமுறையையும் வைத்துக் கொண்டு, சமாதானத்தையும் சகோதரத்துவத்தையும் பேசுவது அல்லது புகட்டுவது என்பது அயோக்கியத்தனத்தின் உச்சம்.

இலங்கையின் அரசமைப்பில் இருந்து, பௌத்தத்துக்கு முதலிடம் என்கிற விடயத்தையே மாற்ற முடியவில்லை என்கிற போது, அதிகாரங்களின் பகிர்வு என்பது, எந்த வகையில் சாத்தியமாகும்.

இந்த நாட்டிலுள்ள அனைவரும் சமமானவர்கள் என்கிற சாதாரண எண்ணத்தை, அனைத்து மதங்களுக்கும் சம அந்தஸ்து என்கிற விடயத்தை அரசமைப்பில் உறுதி செய்வதிலிருந்தும் தொடங்கலாம்.

ஆனால், அந்தக் கட்டத்தைத் தென்னிலங்கையின் அதிகார பீடங்கள் அனுமதிக்காத போது, எவ்வாறு தமிழ் மக்களுக்கு எதிரான இன அழிப்புச் சிந்தனை தென்னிலங்கை கொண்டிருக்கவில்லை என்று கொள்ள முடியும்?

"நாங்கள் முதலிடத்துக்கு உரியவர்கள்; எங்களுக்கு கீழேயே நீங்கள்" என்று திரும்பத் திரும்ப ஒரு சனக்கூட்டத்தை நோக்கிச் சொல்லும் போது, அதற்கு எதிரான எழுவது என்பது மனித சுதந்திரத்தின் அடிப்படையாகும்.

நாடொன்று தன்னுடைய பிரஜைகளில் ஒரு தொகுதியினரை முதன்மையானவர்களாகவும் இன்னொரு தொகுதியினரை கீழானவர்களாகவும் அரசமைப்பினூடு பேண முயலும் போதும், அதனை உணராது, பாதிக்கப்பட்ட மக்களிடம் வந்து, ஜனநாயக வகுப்பு எடுக்கும் தன்மை என்பது ஏற்றுக்கொள்ள முடியாதது.

அதிகதருணங்களில்தென்னிலங்கை அரசியல்வாதிகள் மட்டுமல்ல, கொழும்பு லிபரல்வாதிகளும் இந்தச் சிந்தனையோடு தமிழ் மக்களை நோக்கி வருகின்றார்கள்.

அவர்கள் பொத்தம் பொதுவாக, அரசாங்கமும் குற்றமிழைத்திருக்கின்றது; புலிகளும் குற்றமிழைத்திருக்கின்றார்கள், ஆகவே குற்றங்களை மறந்து மன்னித்து அடுத்த கட்டத்துக்கு போவோம் என்கிறார்கள்.

தவறுகளை மறப்பதும்,மன்னிப்பதும் மனித இயல்புதான், ஆனால், திட்டமிட்ட வன்முறைகளையோ, திட்டமிட்ட அடக்குமுறையையோ, இன அழிப்பையோ மறப்பதும், மன்னிப்பதும் அறமல்ல. அது, அடிமைத்தனத்துக்கு ஒத்திசைவது.

சிங்கள மக்களோடு இணக்கமாக வாழ்வது தொடர்பில் தமிழ் மக்களுக்கு என்றைக்குமே பிரச்சினை இருந்ததில்லை. ஆனால், பௌத்த சிங்களப் பேரினவாதக் கட்டமைப்புக்குள் அடங்கி ஒடுங்கி வாழ்வது தொடர்பில் பெரும் பிரச்சினையுண்டு. ஏனெனில், அது என்றைக்குமே அச்சுறுத்தலானது.



கறுப்பு ஜூலை வன்முறைகள் உள்ளிட்ட கடந்த காலத் திட்டமிட்ட வன்முறைகளை, இனக்கலவரமாகச் சிந்திப்பதிலிருந்து விலகி நின்று,'பௌத்த சிங்களப் பேரினவாதக் கட்டமைப்பின் இன அழிப்புச் சிந்தனை' என்பதாக உணரப்படும் போது, தெளிவு கிட்டும்.

அப்போதுதான், நாட்டின் சமாதானம் மற்றும் சுபீட்சம் தொடர்பில் அனைவராலும் சிந்திக்க முடியும். அது இல்லாமல், பிரச்சினைகளுக்கான அடிப்படைக் காரணங்களுக்கு வெளியில் நின்று சிந்திப்பதானது, பிரச்சினைகளின் அளவை அப்போதைக்கு வேண்டுமானால் மடை மாற்றுவதற்கு உதவும்.

ஆனால், பிரச்சினைகளை உண்மையாகத் தீர்ப்பதற்கான எந்தவொரு கட்டத்தையும் அடைய உதவாது. கறுப்பு ஜூலை வன்முறைகள் பற்றிய அண்மைய உரையாடல்களிலும் அதையே அதிகமாகக் காண முடிந்தது.

**புருஜோத்தமன் தங்கமயில்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயுத மௌனிப்பு... முடிவிற்கு வருகிறதா?



2009ம் ஆண்டு மே மாதம் பதினேழாம் திகதி தமது ஆயுதங்களை மௌனிப்பதாக விடுதலைப்புலிகள் அறிவித்தனர். முப்பது வருடங்காக சிறிலங்கா அரசாங்கத்தின் ஒடுக்குமுறைக்கு எதிராக தமிழ் மக்கள் மேற்கொண்ட ஆயுதப்போராட்டம் அத்துடன் முடிவிற்கு வந்தது. இன்று ஒன்பது ஆண்டுகள் உருண்டோடிய பின்னர் மீளவும் ஆயுதப் போராட்டம் தொடங்குவதற்கான அறிகுறிகள் தென்படுவதாகப் பேசப்படுகிறது.

இடைப்பட்ட காலத்திலும் சிலர் ஐந்தாம் கட்டப்போர் நடக்கும், போர் தொடரும் என உணர்ச்சி பொங்கப் பேசிவந்தனர். தாயகத்திற்கு வெளியிலிருந்து வந்த இக்குரல்களை யாரும் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை. ஆனால் தற்போது தாயகத்திலிருந்து வரும் செய்திகள் தமிழ் மக்கள் மீண்டும் ஒரு ஆயுதப்போருக்குத் தயாராகுகின்றார்களா என்ற ஐயப்பாட்டை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளன.

இவ்வாறு வன்முறை தழுவிய போராட்டத்தில் மக்கள் ஆர்வங் கொள்கிறார்கள் அல்லது மீண்டும் ஒரு ஆயுதப்போராட்டம் ஏற்படக்கூடிய ஏது நிலை இருக்கிது என சிங்கள மக்களும், வெளித்தரப்பினரும் நம்பும் வகையில் அண்மையில் வெளிவந்த சில செய்திகளைப் பார்ப்போம்.

1. கடந்த மாதம் முல்லைத்தீவு ஒட்டி சுட்டான் பகுதியில் முச்சக்கரவண்டி ஒன்று சிறிலங்கா காவற்துறையினரால் சோதனையிடப் பட்டபோது, விடுதலைப்புலிகளின் சீருடை, தமிழீழ தேசியக் கொடி மற்றும் கிளைமோர் வெடிபொருட்கள் ஆகியவை மீட்கப்பட்டதுடன், அவ்வண்டியில் பயணம் செய்தவர்கள் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்டவர்கள் முன்னர் விடுதலைப்புலிகளின் புலனாய்வுப் பிரிவில் இணைந்திருந்ததாகவும் செய்திகள் வெளியாகின.

2. யாழ்ப்பாணத்தல் நடைபெற்ற அரச வைபவமொன்றில் உரையாற்றிய சிறிலங்காவின் சிறுவர்கள் விவகார இராஜங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் விடுதலைப்புலிகளை மீள உருவாக்கவேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார். யாழ்பாணத்தில் அதிகரித்துவரும் பெண்களுக்கு எதிரான பாலியல் வன்முறை, போதைப்பொருட்பாவனை ஆகிய வற்றை சிறிலங்கா காவற்துறையினால் கட்டுப்படுத்த முடியாதிருப்பதைச் சுட்டிக்காட்டிய அவர் விடுதலைப் புலிகளின் காலத்தில் இவ்வாறு எதுவும் நடைபெறவில்லை எனவும் கூறியுள்ளார். அவரது கருத்து தென்னிலங்கையில் பெருத்த அதிர் வலைகளை உருவாக்கியதுடன், விஜயகலா தனது பதவியிலிருந்து விலகியுள்ளார்.

3. சிறிலங்கா அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் இருக்கும் லேக்ஹவுஸ் நிறுவனத்தினால் வெளியிடப்படும் Sunday Observer பத்திரிகைக்கு சுமந்திரன் அண்மையில் வழங்கிய செவ்வியில் வடக்கு கிழக்கில் இளைஞர்கள் தீவிரவாதத் தரப்புகளின் பரப்புரைகளுக்கு எடுபடாமலிருப்பதற்கு அங்குள்ள பிரச்சனைகள் உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டும் எனத் தெரிவித்திருக்கிறார். இதற்கு சில வாரங்களுக்கு முன்னர் பிறிதொரு ஊடகமொன்றிற்கு அவர் வழங்கிய செவ்வியில் தமிழ் மக்களின் பிரச்சனைகள் தீர்க்கப்படாதவிடத்து இளைஞர்கள் மீளவும் ஆயுதம் ஏந்தும் நிலை ஏற்படும் எனத் தெரிவித்தார்.

4. தமிழ்நாடு இராமேஸ்வரத்தில் உள்ள தங்கச்சி மடம் பகுதியில் இயந்திரத்துப்பாக்கிகள்,வெடிமருந்துகள் உட்பட ஆயுதப் பொருட்கள் புதைத்து வைத்திருப்பதனை கண்டுபிடித்த தாகவும்,இவை விடுதலைப்புலிகளினால் புதைக்கப்பட்டவை எனவும் கொழும்பிலிருந்து வெளியாகும் Daily Mirror பத்திரிகை அண்மையில் செய்தி வெளியிட்டிருந்தது.

இதனிடையே புலம்பெயர் நாடுகளில் ஓரிருவர் ஆயுதப் போராட்டத்திற்காகப் பணச் சேகரிப்பில் ஈடுபட முனைவதாகவும், முள்ளிவாய்க்கால் இனவழிப்பின் பத்தாண்டு நிறைவில் மீண்டும் ஆயுதப்போராட்டம் ஆரம்பிக்க விருப்பதாக அவர்கள் கூறுவதாகவும் உறுதிப்படுத்தப்படாத சில தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவற்றை வைத்துப் பார்க்கையில் தமிழர்கள் மீண்டும் ஒரு ஆயுதப்போராட்டத்திற்கு தயாராகிறார்களா என்ற ஐயம் எழுவது தவிர்க்க முடியாது.

ஆனால் தாயக நிலவரங்களை அறிந்து வைத்திருப்பவர்களைப் பொறுத்தவரையில் மேற்படி செய்திகள் வேண்டுமென்றே திரிபுபடுத்தி வெளியிடப்படுகின்றன என்பதனை அவர்களால் உறுதிபடக் கூற முடியும். தமிழ்நாட்டில் கண்டுபிடிக்கப்பட்ட ஆயுதங்கள் பல வருடங்களுக்கு முன்னர் புதைத்து வைக்கப்பட்டிருக்கப் பட்டவை எனவும் அவை இயங்குநிலையில் இருக்கவில்லை எனவும் தெரிவிக்கப் படுகிறது. ஒட்டிசுட்டானில் கைது செய்யப் பட்டவர்கள் சிறிலங்கா இராணுவ புலனாய்வுப் பிரிவுடன் இணைந்து செயற்படுபவர்கள் எனவும் தெரிய வருகிறது.ஆகவேஇவ்வாறானசெய்திகள் திட்டமிட்டு திரிபுபடுத்தப்பட்டு வெளியிடப்படுகின்றன என்பது புலனாகிறது.

ஆயுதப் போராட்டம் தவறான அணுகுமுறை என்பதோ தமிழ் மக்கள் இனி ஆயுதமேந்த மாட்டார்கள் என்பதோ இக்கட்டுரையாளரின் வாதம் அல்ல. அதுபோல் ஆயுதப் போராட்டத்தினால் மட்டுமே தமிழ் மக்கள் தமது அரசியல் உரிமைகளைப் பெற்றுக் கொள்ள முடியும் என்ற கருத்துடையவர்களுடனும் இக்கட்டுரை முரண்படவில்லை. ஆனால் அதற்குரிய புறச்சூழல் இல்லாத நிலையில் திட்டமிட்ட முறையில் ஆயுதப்போராட்டம் பக்கம் மக்கள் சாய்கிறார்கள், தீவிரவாதம் மீளத்தலை தூக்குகின்றது போன்ற செய்திகளப் பரப்புவோர் விடயத்தில் தமிழ்மக்கள் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என்பதனையே இக்கட்டுரை வலியுறுத்துகிறது. தாயகத்தில் கிராமமட்டத்திலிருந்து சமூகத்தின் பல்வேறு நிலைகளிலும், சிறிலங்கா உளவுப்பிரிவினர் ஆழ ஊடுருவியுள்ளனர். இவர்களுக்கான தகவல்களை வழங்குவதற்கு உள்ளூரில் பலர் பணிக்கு அமர்த்தப்பட்டுள்ளனர். வேறும்பலர் அச்சுறுத்தல் காரணமாகத் தகவல்களை வழங்கி வருகிறார்கள். இவ்வாறான சூழலில் அங்கு இன்னொரு ஆயுதப்போராட்டம் முகிழ்ப்பதற்கான வாய்ப்புகள் காணப்படவில்லை. யுத்த அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மக்கள் மீளத் தங்களை நிலைநிறுத்த முடியாது அவதிப்படும் நிலையில் இவ்வாறான செய்திகள் அவர்களுக்கு மேலும் பாதிப்புகளையே ஏற்படுத்தும். அதுபோலவே அங்கு பலம்பெற ஆரம்பித்திருக்கும் கொள்கை நிலை பாட்டில் உறுதியான இளம் அரசியற் தலைமை நெருக்குவாரங்களைச் சந்திக்கும்.

இவ்வாறான செய்திகள் ஏன் வெளியிடப்படுகின்றன என்பதனையிட்டு தமிழ்மக்கள் நன்கு சிந்திக்க வேண்டும். சிறிலங்கா அரசபடைகளினால் நன்கு திட்டமிட்ட முறையில் குழுக்களும், பேரினவாதக் கட்சிகளில் இணைந்திருக்கும் விஜயகலா, இக்கட்சிகளை நிபந்தனையின்றி ஆதரிக்கும் சுமந்திரன் போன்றவர்களும், இவ்விடயத்தில் சிறிலங்காவின் அதிகார மையத்திற்கு உதவுபவர்களாக இருக்கிறார்கள்.

யாழ்ப்பாணத்தில் அதிகரித்துவரும் வன்செயல்களை தடுப்பதற்கு கிராமமட்டத்தில் இளைஞர்கள் விழிப்புக் குழுக்களை அமைத்து இரவு நேரங்களில் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபட வேண்டும் என சுமந்திரன் அண்மையில் தெரிவித்திருக்கிறார்.


விசேட அதிரடிப்படையினரின் பாதுகாப்பின்றி தனக்கு வாக்களித்த மக்களைச் சந்திக்க முடியாதிருக்கும் சுமந்திரன் சமூக விரோதச் செயல்களில் ஈடுபடும் ஆயுததாரிகளை எதிர்கொள்ள ஆயுதமற்ற இளைஞர் குழுக்களை அமைப்பது பற்றிப் பேசுவது ஒருபுறம் வேடிக்கையாகவும், மறுபுறம் இளைஞர்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்தும் நடவடிக்கையாகவும் தெரிகிறது. இவ்விடயத்தில் கருத்துத் தெரிவித்திருக்கும் டக்ளஸ் தேவானந்தா, ஒருபடி மேற்சென்று, பாதுகாப்புக் கடமைகளில் இராணுவத்தை ஈடுபடுத்த வேண்டும் எனத் தெரிவித்திருக்கிறார்.

தாயகத்தில் ஒரு அரசியல் மாற்றம் ஏற்பட்டு வருவதனையும், மீளவும் இளைஞர்கள் அரசியலில் ஆர்வத்துடன் ஈடுபட ஆரம்பிப்பதனையும் பிற்போக்கு அரசியல்வாதிகளால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை என்பதனையே மேற்படி அரசியல்வாதிகள் வெளியிட்டு வரும் கருத்துகளிலிருந்து அறிய முடிகிறது. இவ்விடயத்தில் உணர்ச்சிகளைக் கிளப்பி இலாபம் சம்பாதிக்க முனையும் தரப்புகளைவிட்டு தமிழ் மக்கள் மிகுந்த அவதானமாக இருக்க வேண்டும்.

**கோபி இரத்தினம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பூட்டனின் திட்டம் என்ன? ரம் பலியாக்கப்பட்டது எவ்வாறு?

ரம் உத்தியோகபூர்வ வேட்பாளராவற்கு முன்பிருந்தே அவர் குறித்த கடுமையான விமர்சனங்களை நான் வெளியிட்டு வந்திருக்கின்றேன். அமெரிக்கா பாதிக்கப்பட போகிறது என்ற ஆதங்கத்தால் அல்ல உலக ஒழுங்கில் மக்கள் வாழ்வில் உலகளாவிய பல பாதிப்புகளை இந்த முட்டாள் ஏற்படுத்தப் போகிறார் என்ற ஆதங்கத்தினாலேயே! அவ் ஆதங்கம் இன்று நிசர்சனமாகி வருவதை நாம் கண்கூடாகக் காணுகிறோம்.

ஆனால் இதன் சூத்திரதாரி பூட்டன் அவர்களை நாம் அடிக்கடி மறந்து விடுகின்றோம். மறைவாக இரு அப்போது தான் நிறைவாக செய்யலாம் என்பதற்கிணங்க தான் பதவிக்கு கொண்டுவந்த ரம்பில் தான் வேண்டும் ஆட்டத்தை அமைதியாக ரசித்துக் கொண்டிருக்கிறார் அவர். இங்கு தான் அவர் ரஸ்சிய உளவுத்துறையின் தலைவராக இருந்ததை வெளிப் படுத்துகின்றார். தனது ரஸ்சிய நாட்டை உலகப்பந்தில் உயர்த்தி நிறுத்த சபதம் ஏற்று 24 ஆண்டுகளுக்கு முன்னர் சனாதிபதியானவர் அவர். ஆனால் மேற்கத்திய உலகிற்கு நிகரான வளர்ச்சியை எட்டுவது என்பது பகல் கனவு என்பதை புரிந்து கொண்டார்.

இங்கு தான் அவர் தனது பிரமாஸ்திரத்தை பயன்படுத்த முயன்றார். எம்மால் உச்சத்திற்கு போக முடியவில்லை. ஏனவே எமக்கு மேலே இருப்பவர்களை நாங்கள் உயர்ந்த அளவிற்கு கீழே இழுத்து விழுத்திவிட்டால் சமநிலையை ஏய்திவிடலாம் அதற்கும் கீழே விழுத்திவிட்டால் உயர்நிலையை எய்திவிடலாம் தானே என சிந்தித்தார் அதற்கான செயலிலும் இறங்கினார். அவர் போட்ட ஸ்கெட்சில் மாட்டிக் கொண்டவர் தான் எங்கள் ரம் ஜயா! ரம் ஜயாவின் தலைக்கணம் தானே பெரியவன் என்ற அகங்காரம் யாரிடமும் ஆலோசனை கலக்க விரும்பாத திமிர் வெள்ளையின வலதுசாரி தீவிரவாதம் அனைத்தையும் தனக்கான முதலீடாகக் கொண்டு களம் இறங்கினார் பூட்டன்.

புலனாய்வுத் துறை கொண்டு அவர் விரித்த வலையில் தனது பலவீனங்களால் பலியாகியது அமெரிக்க தேசம். விளைவு ரம் ஜயாவின் வெற்றி. ரம் ஜயாவின் குடுமிப்பிடியை முன்கூட்டியே திட்டமிட்டு தன்னகப்படுத்திக் கொண்டதால் அவரை மிகவும் லாவகமாக கையாளுகிறார் பூட்டன். அதன் உச்ச வெளிப்பாடே பின்லாந்தின் தலைநகர் கெல்சிங்கியில் அரகேறியுள்ள அவலம். ஒரு உளவுத்துறை தலைவருக்கும் ஒரு கட்டிட விற்பனை வியாபாரிக்கும் இடையில் எவ்வளவு பாரிய இடைவெளியுண்டு என்பதை அது உலகிற்கு நிதர்சனமாக வெளிப்படுத்தியது.

அமெரிக்காவில் சிதைவிற்கு ஸ்கெட்ச் போட்ட பூட்டன் தொடர்ச்சியாக பிரிட்டன் ஜேர்மனி என திட்டத்தை விரிவாக்கி மேற்கத்தைய உலகின் அடித்தளத்தையே ஆட்டம் காண வைத்துள்ளார். அதை மேலும் சிதைக்கும் பணியை ரம் ஜயா சிறப்பாக அவருக்கு செய்து கொடுத்த வண்ணம் உள்ளார். சனநாயக ஆட்சிமுறைமையில் பாரிய சிதைவு உலக பொருளாதார ஒழுங்கில் வர்த்தக போர்களினூடாக சிதைவு. நேச சக்திகள் நேட்டோ இராணுவ கட்டமைப்பு என தனக்கு எதிரான கட்டமைப்புக்கள் அனைத்தின் எதிர்காலத்திலும் பாரிய நெருக்கடிகள் என உலக ஒழுங்கே அனைத்து விடயங்களிலும் வரலாற்றில் என்றுமில்லாத சவால் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

கூடவே மனித உரிமைகள் விடயங்கள் கிடப்பிற்கு தள்ளப்படுவதும் சர்வாதிகார ஆட்சிகள் உலகில் எழுச்சி பெறுவதும் ஒடுக்கப்பட்ட மக்கள் வாழ்வு பேரவலத்திற்கு தள்ளப்படுவதும் பணக்காரன் ஏழை இடைவெளி அதிகரித்துச் செல்வதும் சுற்றாடல் பாதிப்பு மனித குலத்தின் இருப்பிற்கே பெரும் அச்சுறுத்தலாக மாறுவதை விருப்புடன் அனுமதிப்பது என ஒரு தனிமனிதனின் அதியுட்ச முட்டாள் தனங்களால் அமெரிக்கர்கள் மட்டுமல்ல மனித குலமே பேரபாயத்தை எதிர் கொண்டு நிற்கிறது. குட்டையை குழப்புவதில் வெற்றி பெற்றுவரும் பூட்டன் தனது உலக தலைமைப் பதவிக்கான அரியாசணைக்கும் அதற்கான கிரீடத்திற்குமாக காத்திருக்கிறார். ரம் தொடர்ந்தும் அரியாசணையில் இருக்க அனுமதிக்கும் காலங்கள் பூட்டன் தன் இலக்கில் நெருங்கிவரும் காலங்களாகவே இருக்கும்...

Nehru Gunaratnam

# மானுடருக்கு அவமானம் !!

**அன்மையில் தமிழ்நாட்டில் 11 வயது சிறுமிக்கு 17 நபர்களால் ஏற்பட்ட பாலியல் கொடுமை மனதை உலுக்கியது. இந்த 17 காமுகர்களுக்கும் அதி உயர் தண்டனை வழங்கி தண்டிக்கப்பட வேண்டும். சமுதாயம் சிறுமிகளை பாதுகாப்பதில் கூடிய கவனம் செலுத்தப்பட வேண்டும்.**

அதில் ஈடுபட்ட காமுகர்கள் பெரும்பாலானோர் வயதில் கூடியவர்கள். இதில் 67 வயதினர்கூட அடங்குகிறார்கள். எப்படி வயோதிபர்கள் காமுகர்களாக இருக்கிறார்கள்? இதுபற்றி பாலியல் ஆய்வாளர் (டீமீஜ்ஷீறீஷீரீவீடீ) டாக்டராக இருக்கும் எனது நண்பரிடம் நேற்று விரிவாக கதைத்தேன். இவர் எனது வேலை செய்யும் இடத்து நண்பனின் சகோதரன். அதனால் அவருடன் நட்பாக்கும் வாய்ப்புக் கிடைத்தது.

இந்தச் சிறுமிக்கு ஏற்பட்ட பாலியல் கொடுமை பற்றி நேற்று அவருடன் கதைத்தேன். அவர் தந்த சில தகவல்கள் எனக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியது. குறிப்பாக வயோதிபர்கள் பற்றி அவர் சொல்லிய விடயங்களை நான் அறிந்திருக்கவில்லை.

பெண்களுக்கு மாதவிலக்கு (விமீஸீஷ்ஜீணீஉடமீ) நிற்கும் காலம் என்ற பகுதி 45 50 வரையான காலப்பகுதியாகும். அதன்பின்பு அவர்களுக்கு கருத்தரிக்கும் முட்டைகள் உற்பத்தியாவதில்லை. அதன்பிறகு அவர்களுக்கு பாலியல் சார்ந்த ஆர்வம் குறைகிறது. ஆனால் ஆண்களுக்கு அப்படியில்லை. ஒரு ஆணுக்கு இறக்கும்வரை விந்துக்கள் உற்பத்தியாகிறது. இதுவும் ஒவ்வொருவரின் உடல் ஆரோக்கியத்தைப் பொறுத்து இது வேறுபடலாம். கருத்தரிக்கும் அளவிற்கு திறன் இருக்கும் என்பது மருத்துவ ரீதியான சான்றாகும். அப்படி 92 வயதுடைய ஒருவருக்கு நடந்தும் இருக்கிறது.

இப்படியான வயோதிபர்களில் சிலருடைய குணாதிசயங்கள் வேறுபட்டவை. சிலர் குடும்பமாக மனைவியுடன் வாழ்பவர்கள். சிலர் மனைவி இறந்தபின் தனிமையில் வாழ்பவர்கள். தனிமையில் வாழ்பவர்கள் இப்படியான செயல்களில் ஈடுபட வாய்ப்பு அதிகமாக உள்ளது. ஏனெனில் பாலியல் ரீதியான தேவை அவர்களுக்கு



அதிகமாக உள்ளது. சந்தர்ப்பங்கள் வரும்பொழுது இவர்கள் வயதையோ அல்லது சமுதாயத்தைப் பற்றியோ பார்க்க மாட்டார்கள். தங்கள் இச்சையைத் தீர்க்கத்தான் முயற்சிப்பார்கள். சில நல்லவர்களாக இருப்பவர்கள்கூட பாலியல் ரீதியான அனுபவிக்கும் வாய்ப்புக்கள் கிடைக்கும்பொழுது குற்றம் செய்யத் தயங்க மாட்டார்கள். இதனால் வரும் பின்விளைவுகளையும் சிந்திக்க மாட்டார்கள் என்பது ஆய்வுகள் மூலமாக கண்டறியப்பட்டுள்ளது.

இப்படியான செயல்கள் எல்லா இனத்திலும் எல்லா சமூகத்திலும் இருக்கிறது. ஆனால் வறுமையில் வாழும் மற்றும் சட்டம் சரியாக நடைமுறைப்படுத்தாத நாடுகளில் கூடுதலாக நடைபெறுகிறது. அதில் ஒருபகுதிதான் இந்த 17 பேர் கொண்ட காமக்கும்பலின் கொடூரமாகும். ஆகையால் பெண் சிறுமிகள் மீது அக்கறையுடன் கூடிய கவனம் இருக்க வேண்டும். சிறுமிகள் வாழும் சூழலை ஆராய்ந்து ஜாக்கிரதையுடன் பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும். ஒரு பாலியல் வைத்திய நிபுணராக இப்படி தனது தகுதி ரீதியான கருத்துக்களையும் ஆலோசனைகளையும் கூறினார். மிக்க நன்றிகள் டாக்டர் அவர்களே.

*காமுகர்கள் ஜாக்கிரதை !!*

Boopal Chinappa



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## இந்த நூற்றாண்டின் மறக்கமுடியாத நிகழ்வு !!

இது செய்தி என்பதை விட பல பாடங்களை உலகிற்கு கற்பித்த இந்த நூற்றாண்டின் மறக்கமுடியாத நிகழ்வு.

நம்பிக்கை என்ற அந்த ஒற்றை வார்த்தையின் பலம் மட்டுமே 10 நாட்கள்... முதன்முறையாக 4km தொலைவில் கண்டுபிடிக்கப்படும் வரை அவர்களை உயிரோடு வைத்திருந்தது.

நம்பிக்கை, திட்டமிடல் இந்த இரண்டும் தான் அசாத்தியமான பாதை வழி அத்தனை பேரையும் உயிரோடு மீட்டுவருவதை சாத்தியமாக்கியது.

தியாகம் என்ற ஒற்றை குணம் தான் தன் உயிரை பணயம் வைத்து பல மணிநேரம் பயணித்து சுவாசத்தை அச்சிறுவன்களுக்கு வழங்கி விட்டு தாய்லாந்தின் முன்னாள் கடற்படை வீரர் Suman Gunan சுவாசத்தை பாதிவழியில் நிறுத்திக்கொண்டது.

புத்தகப்படிப்போடு மட்டும் நின்றுவிடாது முக்குளிப்பு துறையில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டது தான் அந்த மிரட்டல் பாதைவழி Dr Richard Harris என்ற ஒரு வைத்தியனை செல்லவைத்து 13 உயிர்களின் நலனை பேணவைத்தது.

பிரார்தனை என்ற ஒற்றை வார்தை தான் 17 நாட்களாக மழைகாலத்தில் கூட மழையை கட்டுப்படுத்தி வைத்திருந்தது.

"சாத்தியமில்லை" என்பது எதுவுமில்லை என்பது சில சுரங்க விபத்தின் மீட்புக்கு பிறகு மறுபடியும் ஒருமுற நிரூபணம்!!

Dr Richard Harris (Australia) மீட்புப்பணியில் இறுதியாக குகையிலிருந்து வெளியேறியவர் இவர்தான். மீட்புப்பணி முடிந்து சிலமணி நேரத்தில் இவரின் தந்தையார் காலமாகிவிட்டார். இது அவருக்கு மிகப்பெரிய இழப்பாகும். நாங்களும் இந்த துயரில் பங்குகொள்வோம். அவர் ஆத்மா சாந்தியடையட்டும்

Boopal Chinappa



## அவள் ஒரு தேவதை

அவள் ஒரு தேவதை... 'இணையதளத்தில் வைரலாகிவரும் நைஜீரியன் சிறுமியின் புகைப்படம்...!

Angelic five-year-old Nigerian, Jare, is 'world's most beautiful girl'

உலகின் மிக அழகிய சிறுமி என்று அனைவராலும் பேசப்பட்டு வருகிறார் நைஜீரியாவை சேர்ந்த 5 வயது சிறுமி ஜேர் இஜலானா (Jare Ijalana ).

சமூக வலைதளமான ட்விட்டர் மற்றும் பேஸ்புக்கில், ஜேரின் புகைப்படத்தை பதிவேற்றம் செய்தார் புகைப்படக்கலைஞர் மோஃபி பமூயிவா (Mofe Bamuyiwa). "அவள் ஒரு சிறுமி.... இருந்தாலும் அவள் ஒரு தேவதை" என்று ஜேரின் ஒரு புகைப்படத்திற்கு மோஃபி தலைப்பிட்டிருந்தார்.


பதிவேற்றம் செய்யப்பட்ட சில மணி நேரத்திலேயே அதிக மக்களால் லைக் செய்யப்பட்டு, தற்பொழுது 50 ஆயிரத்திற்கும் அதிகமானோர் ஜேரின் புகைப்படத்திற்கு லைக் செய்துள்ளனர்.

ஜேரின் கருமை நிறமும், அழகான கண்களும், அடர்ந்த முடியும் அனைவரின் கவனத்தை ஈர்ப்பதாக இருக்கிறது. பொம்மை போன்று மிக அழகாக இருக்கும் ஜேரின் புகைப்படத்திற்கு பெரும்பாலானோர் உலகின் மிக அழகிய சிறுமி என்பது போல கருத்து பதிவிட்டுள்ளனர்.

குழந்தைப்பருவத்திற்கும் இளமைப்பருவத்திற்கும் இடையிலான ஒரு விஷயத்தை புகைப்படம் எடுக்க முயற்சித்ததாகவும், ஜேரின் இயற்கையான அழகை அப்படியே படம்பிடிக்க வேண்டுமென நினைத்ததாகவும் ஜேரை புகைப்படம் எடுத்த மோஃபி தெரிவித்தார்.

Dinesh

## சீமானும் வைகோவும்



சீமானது பொய்யில் பிரபாகரன் உயிர் வாழ்வார், வைகோவின் பொய்யில் பெரியார் உயிர் வாழ்வார்,

வைகோ,நெடுமாறன் போன்றவர்கள் இரண்டு தசாப்தங்களுக்கும் மேலாக விடுதலைபபுலிகளுடன் நீணடகாலமாக தொடர்பில் இருந்தவர்கள்,ஆனால் சீமான் அவ்வாறில்லை,சமாதான காலத்தில் வன்னி சென்று குறுகிய நாட்களே தலைவருடனும்,வன்னியிலும் தங்கியிருந்து பின்னர் தமிழ் நாடு திரும்பிவிட்டார்,இதுதான் சீமானுக்கும் புலிகளுக்குமான உறவு, நெடுமாறன், வைகோ போன்று இரண்டு தசாப்தகால உறவை சீமான் புலிகளுடன் கொண்டிருக்கவில்லை,

ஆனால் இரண்டு தசாப்தகால உறவை புலிகளுடன் கொண்டிருந்தவர்களல் தமிழ் நாட்டில் செய்ய முடியாததை, சில வாரங்கள் வன்னியில் புலிகளுடன் தங்கியிருந்த ஒருவரால் செய்ய முடிந்திருக்கிறதெனில், அதற்கு காரணம், சீமான் உணர்வுபூர்வமாக தமிழ் தேச விடுதலையை நேசித்தார் நேசிக்கிறார். ஆனால் வைகோ உணர்வு பூர்வமாக தமிழ் தேச விடுதலையை நேசித்ததுமில்லை, விரும்பியதுமில்லை, அத்துடன் அவர் உண்மையில் உணர்வளவில் தமிழராக இருந்ததுமில்லை, தனது அரசியல் அதிகாரத்திற்காக தமிழராக வலம் வந்து, அதற்கா தமிழ் தேச விடுதலையை அவ்வப்போது மிக நுணுக்கமாக பேசினார், புலிகள் புகழ் பாடுவதுபோல் பாசாங்கு செய்தார், இதுதான் அவரது தமிழ் தேச விடுதலையின் விசுவாசம், எனவே அவரால் தமிழ் தேச விடுதலைக்கான எழுச்சியை தமிழ் நாட்டில் உருவாக்க முடியவில்லை,

தலைவர் பிரபாகரனுடன் தனது சில நாட்கள் உறவை வைத்து, இவ்வளவு பெரிய எழுச்சியை தமிழ் நாட்டில் உருவாக்க முடியுமென்றால், அதற்காக சீமான் இன்னும் ஆயிரம் பொய்களை வேண்டுமானால் சொல்லட்டும், சொல்லவேண்டும். சீமான் கூறும் ஒவ்வொரு பொய்யிலும் பிரபாகரன் உயிர் வாழ்வார், தமிழ் தேசிய அரசியலும் உயிர் வாழும், வைகோ கூறும் ஒவ்வொரு பொய்யிலும் பெரியார் உயிர் வாழ்வார்,திராவிட அரசியலும் உயிர்வாழலாம்,இதுதான் வித்தியாசம்.

ஆயிரம் பொய்கள் கூறியாவது ஆழட்டும் தமிழ் தேசியம், வீழட்டும் திராவிடம்,

சீமான் கூறும் பொய்களால் பிரபாகரனியம் வாழும் என்றால், பேசட்டும் பல்லாயிரம் பொய்கள், வாழட்டும் பிரபாகரனியம்,

Thamil Mathy



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மனித பேராசை!

மக்களை பொய்கூறி ஏமாற்றி,அதிகாரத்தை கைப்பற்ற தெரிந்தவன் சிறந்த அரசியல்வாதி, நாடுகளுக்கிடையிலான அரசியல் உறவுகளில் பொய்கூறி ஏமாற்றத்தெரிந்தவன் சிறந்த இராஜதந்திரி,சட்டத்தின் ஓட்டைகளூடாக குற்றவாளிகளை காப்பாற்ற தெரிந்தவன் சிறந்த சட்டத்தரணி, பிறகு அந்த சிறந் சட்டத்தரணி சிறந்த நீதிபதி, மனித சமூகத்திற்கும், இயற்கை உலகத்திற்கும் கேடுவிளைவிக்கும் கண்டுபிடிப்புக்களை செய்ய தெரிந்தவன் சிறந்த விஞ்ஞானி,

சிறந்த அரசியல்வாதிகள், சிறந்த இராஜதந்திரிகள், சிறந்த சட்டத்தரணி, சிறந்த நீதிபதி, சிறந்த விஞ்ஞானி, இவர்கள் அனைவரையும் பணத்துக்கு வாங்கி தனக்கேற்றாற்போல் உலகின் இயற்கை வளங்களை கொள்ளையடிப்பதற்கு சட்டங்களை உருவாக்கி, பொருட்களை விற்க தெரிந்தவனும், மக்களை சுரண்டத் தெரிந்தவனும் சிறந்த வியாபாரி. இந்த சிறந்த வியாபாரியால்தான் உலகம் கட்டுப்படுத்தப்படுகிறது, ஆளப்படுகிறது.

இங்கு நான் குறிப்பிடும் சிறந்தவர்கள் சகலரும் நீதிநியாயம் இன்றி பொய்கூறி ஏமாற்ற தெரிந்தவர்கள், அவர்களையே சிறந்தவர்கள் என கருதும் சமூகம் உருவாகிவிட்டது, எனவே நாகரீகமான வளர்ச்சியடைந்த சமூகம் எனப்படுவது, ஏமாற்றுதல், பொய்கூறுதல் என்பனவற்றை சட்டபூர்வமாக வைத்துக்கொண்டு தப்பி பிழைத்தல் எனும் நிலைக்கு வரும்போது நாரீகம் என்பதன் அர்த்தம் ஏமாற்றுதல் எனப்படும்.

இவை சகலதுக்கும் அடிப்படை காரணம் மனிதனின் பேராசை.

Thamil Mathy



## தமிழர்கள் - சிங்களவர்கள்

இதுவரை நாம் கண்ட இனக்கலவரங்கள் வந்த காலங்களில் சிங்கள இனவாதிகள் தமிழர்களை தமது நேரடி எதிரிகளாகப் பார்த்தார்கள். ஆனால் இன்று நிலைமை மாறிவிட்டது. சிங்கள இனவாதிகள் இன்று ஈழத்தமிழர்களை (வடகிழக்கு வாழ் 'தமிழ்பேசும் சைவசமயிகளை') தோற்றுப்போனவர்களாகத்தான் பார்க்கிறார்கள். 'புலம்பெயர் ஈழத்தமிழர்களின்' ஆதரவோ அல்லது 'தமிழகத்தமிழர்களின்' ஆதரவோ கிட்டாமல்போனால் இனிவரும் காலங்களில் "சைவசமயிகள் பலவீனமானவர்களே!" என்பது அங்குள்ள சிங்கள பௌத்த பேரினவாதிகளின் அசைக்க முடியாத நம்பிக்கை. அதனால்தான் —

'சைவசமயிகளைகளையும்', 'தமிழ்க் கிறிஸ்தவர்களையும்' எதிரிகளாகப் பார்ப்பதைத் தவிர்த்து "இஸ்லாமியர்களை நேரடி எதிரிகளாக பார்க்கும் நிலை" இன்று அங்கு இருக்கிறது.

இதை புரிந்து கொண்டுவிட்ட இன்றைய முஸ்லிம் அரசியல்வாதிகள் சிங்கள — முஸ்லிம் உறவை மேம்படுத்துவதில் மிகக் கவனமாக இருக்கிறார்கள். 'சைவசமயிகளுக்கு' எதிராக சிங்கள பௌத்தர்களால் இலங்கைத்தீவில் ஒரு "தமிழ் சிங்கள இனக்கலவரம்" உருவாக்கப்படுமானால் அதன்விளைவாக "முஸ்லிம்களுக்கு எதிரான பெரும்பான்மை சமூக வெறுப்பு தணிக்கப்படும்" என்பது அங்குள்ள ஒருபகுதியினரின் ரகசிய ஆசை. விளைவாக வடக்கில் 'சைவசமயிகளும்', கிழக்கில் 'முஸ்லிம் சகோதரங்களும்' தங்களைத்தாங்களே கவனித்துக் கொள்ள.. சிங்கள நிலத்தில் வாழும் 'இந்தியத்தமிழரை' பௌத்தர்கள் கவனித்துக் கொள்வார்கள். that's it.

(சிங்கள தமிழ் இனக்கலவரம் வந்தால் "புலம் பெயர் ஈழத்தமிழர்களின் ஆதரவுடன் வெளிநாடுகளின் தலையீடு நடக்கலாம்" என்ற மெல்லிய பயமும் அங்கே உண்டு என்பதையும் மறுப்பதற்கில்லை. ஆனால் எங்கட புலம் பெயர் தமிழ்நண்டுகளைப் பற்றி அவர்களுக்குத் தெரியாது.)

Narayana Moorthy



## காய்நகர்த்தும் குடும்ப அரசியல்

கனடாவில் "தமிழ் குடும்ப" அரசியலை வரவேற்காதீர்கள். தகுதியான மற்றைய தமிழர்களிற்கும் வாய்ப்பை கொடுங்கள் !

கனடாவில் எம்மவர்கள் கடந்த 15 — 20 வருடங்களின் முன்பு தான், கனடிய அரசியலில் கால் அடி எடுத்து வைத்தார்கள். ஆனால், பொது வாழ்க்கைக்கு தகுதியானவர்களென்ற அடிப்படையில் அன்று, எம்மவர்கள் முழு ஆதரவைக் கொடுத்து வாக்குப் போட்டு வெல்ல வைக்கவில்லை, ஏதோ ஒரு தமிழர் கேட்கின்றார் அவருக்கு நாம் கண்டிப்பாக ஆதரவை கொடுக்க வேண்டுமென்ற அடிப்படியில் தான் தங்களின் வாக்குக்களை போட்டார்கள் !

ஆனால், வெற்றி பெற்றவர்களும் தமிழர்களிற்காக எதையும் பெரிதாக செய்த மாதிரி சொல்ல முடியாது. மக்களும் வெற்றி பெற்றவரை திரும்பத் திரும்ப தெரிவு செய்தார்கள். தமிழர் என்றதற்காக மட்டும் !

ஆனால், அவர் தனது தொகுதியில் இருந்து அடுத்த கட்ட அரசியல் பதவிக்கு போகும் போது தனது குடும்ப உறுப்பினருக்கு, தான் வகித்த பதவியை கொடுக்குமாறு எந்த அடிப்படையில் கேட்டு வாக்கு சேகரிக்க முடியும் ?

அப்ப மற்றைய தமிழர்கள் அந்தப் பதவிக்கு வரத் தகுதி அற்றவர்களா ?

கடந்த காலத்தில், அந்த தமிழ் அரசியல்வாதிக்கு தமிழர்கள் ஆதரவு கொடுத்ததற்காக, தற்பொழுது அவரின் குடும்ப உறுப்பினர் அந்தப் பதவிக்காக போட்டியிட்டால், அந்த குடும்ப உறுப்பினருக்குத் தான் வாக்குப் போட வேண்டியதில்லை !

தகுதியான மற்றைய தமிழர்களையும் தெரிவு செய்யலாம் !

ஆசிய நாடுகளில் பெரும்பாலும் குடும்ப அரசியல் வருவதற்கு முக்கிய காரணம்.அவர்கள் பொது வாழ்க்கைக்கு வந்து அரசியல் பதவி வகிக்கும் போது, பல ஊழல்கள் இடம்பெறுவது சர்வ சாதாரணமாகிவிட்டது. அதன் பிறகு அவர்கள் அந்தப் பதவியில் இருந்து வெளியேறும் போது, தன் விசுவாசியை வெற்றி பெற வைப்பார்கள். ஏன் எனில், அந்த ஊழலை வெளியில் வர விடாமல் அடித்த சொத்துக்களை பாதுகாக்க மட்டுமே :)

இது தான் யதார்த்தமான உண்மை!

சிலரிடம் இருந்து எனக்கு எதிர்ப்புகள் வந்தாலும் தொடரும் எனது பயணம் ......

உங்கள் நண்பன்,

பரா(கனடா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Chapel Ridge
FUNERAL HOME & CREMATION CENTRE

# Serving the Tamil Community OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

## At Need Funeral Arrangements



Vilosanan Sivatharman
416-993-0826

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:
- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception* • *Burial* • *Cremation*

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை



Christeen Seevaratnam
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

## *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

**1911 Woodbine Ave, Markham ON, L3R 5G1**
**www.chapelridgefh.com**
**info@chapelridgefh.com**



CTCC Canadian Tamils' Chamber of Commerce

PRESENTS

ANNUAL GOLF CLASSIC

WED 15 AUG 2018
10:30 AM

AJAX DEER CREEK

11:00 am - Registration
11:30 am - Lunch
12:00 pm - Tee-Time
6:00 pm - Dinner

$200 (1) | $700 (4)
Includes cart fee, 18 holes, lunch and dinner



FOR MORE INFO CONTACT: THIPAN RAJ - 416.629.2444
GAJAN MAHAKANAPATHY - 416.999.2777

OR EMAIL: INFO@CTCC.CA



# 1HR RMT MASSAGE

# $65 1 HOUR

DIRECT BILLING
DON'T PAY A CENT


416-757-2220




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




### 1]. டொரொன்டோ மிருகக்காட்சி சாலை




இந்த ஆண்டு,பார்வையாளர்களைக் கவரும் வண்ணம் டொரொன்டோ மிருகக்காட்சி சாலை சில குழந்தை விலங்குகளை இணைத்துள்ளது. சிறப்பு பூங்கா கனடா நினைவு பரிசு என முழு குடும்பமும் கொண்டாட முடியும் அத்துடன் விலங்கு காப்பாளர்களுடன் உரையாடலாம் தீவுகளையும் பார்க்க முடியும். இதற்கான விபரங்களை இதன் torontozoo.com இணையதளத்தில் பார்வையிடவும்.

### 2]. றிப்பிளிஸ் நீர்வாழினக் காட்சியகம்



நீர்வாழினங்களுடன் தொட்டு விழையாடும் வாய்ப்பினை இந்த கோடை காலத்தில் வழங்குகிறது றிப்பிளிஸ் நீர்வாழினக் காட்சியகம். ஆறு வயதிற்கு மேற்பட்டவர்கள் றிப்பிளிஸ் நீர்வாழினக் காட்சியக பணியாளரின் மேற்பார்வையாளருடன் இணைந்து நீச்சலடிக்க முடியும். இதற்கான விபரங்களை இதன் ripleyaquariums.com இணையதளத்தில் பார்வையிடவும்.

### 3]. டயனசோர் காட்சியகம்



உங்கள் வீட்டுச் சிறுவர்கள் டயனசோரில் நாட்டமுள்ளவர்களா? அப்படியாயின் ஒன்ராரியோ அருங்காட்சியகத்தில் உள்ள டயனசோர் காட்சிப் பிரிவில் உள்ள தொல்காப்பிய வல்லுனர்களுடன் சேர்ந்து டயனசோர் பற்றிய தகவல்களைத் தெரிந்துகொள்ள வையுங்கள். இதற்கான விபரங்களை இதன் rom.on.ca இணையதளத்தில் பார்வையிடவும்.

### 4]. சுவையும் டன்போத்தும்



கனடாவின் மாபெரும் உணவுத் திருவிழாவாக ரொறன்டோ மத்தியில் இருக்கும் டன்போத் வீதியில் வருடாவருடம் நடைபெறும் கிறீக் உணவித்திருவிழா சிறப்புப் பெறுகிறது. குடும்பத்தாருடன் சென்று பல்வேறுபட்ட உணவுகளைச் சுவைத்து மகிழுங்கள். இதற்கான விபரங்களை இதன் tasteofthedanforth.com இணையதளத்தில் பார்வையிடவும்.

### 5]. கனேடிய தேசியக் கண்காட்சி (CNE)



ஆகஸ்ட்டு மாதம் 17ம் திகதி ஆரம்பிக்கப்படவிருக்கும் CNE திருவிழா செப்டம்பர் மாதம் 3ம் திகதி நிறைவுபெறும். இவ்வருடம் ஒரு குடும்பத்துக்கு $59 டெலர்கள் அனுமதிச்சீட்டு அறவிடப்படுகிறது. இதில் இரண்டு பெரியவர்களும் 13 வயதிற்குட்பட்ட இரு சிறுவர்களும் செல்ல முடியும். இதற்கான விபரங்களை இதன் theex.com இணையதளத்தில் பார்வையிடவும்.

### 6]. த றெக் றூம் (The Rec Room)

இது சிறுவர்களையும் பெரியவர்களையும் கவரக்கூடிய விளையாட்டு இடம். இங்கே இலத்திரனியல், கணினிகளை மையமாகக் கொண்ட பல விளையாட்டுகள் உண்டு. இது



ணங்களுமக்கும் பிள்ளைகளுக்கும் மெய்நிகர்( virtual reality) அனுபவத்தைக் கொடுக்கும். இதற்கான விபரங்களை இதன் therecroom.com இணையதளத்தில் பார்வையிடவும்.

### 7]. ரொறன்டோ தீவுப்பூங்கா



ரொறன்டோ லேக்சோர் ஏரியினுள் அமைற்திருக்கும் இப்பூங்கா பலலாயிரக் கணக்கானோரை கோடை காலத்தில் ஈர்த்து வருகின்றது. இங்கே பலர் தமது குழந்தைகளின் பிறந்தநாள் விழாக்களையும் கொண்டாடுவது விசேடமான ஒன்றாக கருதப்படுகிறது. இதைவிட சின்னச் சின்ன சாவாரிகளை இந்தப் பூங்கா கொண்டிருப்பதால் பலரும் விரும்பும் பூங்காவாக சென்றவில் பூங்கா இருக்கிறது. இதற்கான விபரங்களை இதன் centreisland.ca இணையதளத்தில் பார்வையிடவும்.

### 8]. கரபானா திருவிழா



தமிழர்களுக்குமார்கம்திறந்தவெளித் திடலில் கொண்டாட்டங்கள் நடைபெறுவதுபோல். மேற்கு இந்திய தீவைச் சார்ந்தவர்கள் கொண்டாடும் இத்திருவிழா வட அமெரிக்காவின் அதிஉச்ச பார்வையாளர்களைக் கொண்டதாகும். சுமார் 1.3 மில்லியன் வருகையாளர்களோடு இது கொண்டாடப்படுகிறது. இதற்கான விபரங்களை இதன் caribanatoronto.com இணையதளத்தில் பார்வையிடவும்.

### 9]. இரவு கப்பல் விருந்து



ரொறன்டோ லேக்சோர் ஏரியில் இருந்து பல உல்லாசக் கப்பல் நிறுவனங்கள் இந்த இராப்போசன விருந்து சேவையை நடாத்துகின்றது. உங்களுக்கு வசதியான நாளில் அல்லது வெளியூர் விருந்தினர்கள் வந்திருக்கும் நேரங்களில் அவர்களோடு இணைந்து பயணித்து, உண்டு, ரொறன்டோ நகரின் அழகை ஏரியில் இருந்து ரசித்து வரலாம். இதற்கான விபரங்களை mariposacruises.com, cruisetoronto.com, tallshipcruisestoronto.com, todocanada.ca இணையதளத்தில் பார்வையிடவும்.

### 10). Harbourfront Centre



பலவகை நிகழ்ச்சிகள் பல்கலாச்சார உணவுச் சாலைகள் என கோடைகாலத்தை கலகலப்பாக வைத்திருக்கும் இந்த ஹார்புரண்ட் மையம். ஏரிக் காற்றை உரசியவாறு இங்கு வருபர்கள் இசை, உணவு, விளையாட்டு என பலவாறு தம்மை ஈடுபடுத்தி இன்புறுவர். இதற்கான விபரங்களை இதன் harbourfrontcentre.com இணையதளத்தில் பார்வையிடவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# NAVA WILSON LLP

BARRISTERS AND SOLICITORS



**WE OFFER SERVICES IN:**

Real Estate

Corporate Law

Litigation

10 Milner Business Court, Suite 210 Toronto, ON M1B 3C6

416.321.1100

416.321.1107

info@navawilson.law

www.navawilson.law




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீடு வாங்க விற்க வாங்கி



CONSUMER CHOICE AWARD 2016 GTA EAST

RE/MAX COMMUNITY
Realty Inc , Brokerage

**Esan** Kulasegaram
Sales Representative

**416.833.9999**

off: 416.287.2222 | fax: 416.282.4488
203 - 1265 Morningside Ave Toronto, ON
Brokerage Independently Owned And Operated

# 20 Year Pay Insurance

## இருபது வருடக் கட்டுப்பணம்!
## வாழ்நாள் முழுவதும் காப்புறுதி!

**இருபது வருடங்களுக்கு மட்டும்**
**மாதாந்தக் கட்டுப்பணத்தைச் செலுத்துங்கள்.**
**அதன் பின்னர் உங்கள் வாழ்நாள் முழுவதும்**
**உங்களுக்கு காப்புறுதி இருக்கும்.**

இருபது வருடங்களின் பின், விரும்பினால் காசுப் பெறுமதியை (Cash Value) அல்லது Policy Loan ஐப் பெற்றுக் கொள்ளலாம்.

| Age | 20 | | 25 | | 30 | | 35 | | 40 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | 72 | 60 | 82 | 68 | 92 | 84 | 112 | 98 | 131 | 116 |
| 200K | 126 | 108 | 147 | 126 | 172 | 158 | 211 | 185 | 248 | 223 |
| 300K | 188 | 162 | 220 | 188 | 258 | 236 | 317 | 278 | 372 | 334 |



RBC Insurance | Manulife | Industrial Alliance | La Capitale Financial Group | Assumption Life | BMO Insurance | Sun Life Financial

**Thana Manickavasagar** Broker

**Cell:416.728.5772 Office:416.519.3896**

• Life Insurance • Critical Illness Insurance • Disability Insurance • Mortgage Insurance • RRSP • RESP • Non-Medical Insurance • Travel Insurance • Super Visa Medical Coverage • Drug and Dental Plan • TFSA

thana7@gmail.com www.thana.ca Fax: 647.547.8147 80 Nashdene Road, #D218, Scarborough, ON, M1V 5E4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கை என்றால் ஆயிரம் இருக்கும். அவ்வப்போது மனம் துவண்டு விடலாம். அப்போதெல்லாம் சந்தர்ப்பத்திற்குத் தகுந்தபடி, கீழ்க்கண்ட மந்திரச் சொற்களில் பொருத்தமானவற்றை வாய்விட்டு உச்சரித்துப் பழகுங்கள். மனம் நிமிரும். சக்தி பெருகும். வெற்றி நெருங்கும்.

1. போனது போச்சு, ஆனது ஆச்சு, இனி என்ன ஆகணும்? அதைப் பேசு.

2. நல்ல வேளை. இதோடு போச்சுன்னு திருப்திப்படு.

3. உடைந்தால் என்ன? வேறு வாங்கிவிட்டால் போச்சு.

4. பஸ்ஸு போயிடுச்சா, அதனால் என்ன? அடுத்த பஸ் இருக்கு, இல்லையா?

5. பணம் தான போச்சு. கை கால் இருக்குல்ல. மனசுல தெம்பு இருக்குல்ல

6. சொல்றவங்க நூறு சொல்வாங்க. எல்லாமே சரின்னு எடுத்துக்க முடியுமா?

7. அவன் அப்படித்தான் இருப்பான். அப்படித்தான் பேசுவான்.அதையெல்லாம் கண்டுக்கலாமா? ஒதுங்கு. அப்பொழுதுதான் உனக்கு நிம்மதி.

8. இதெல்லாம் சிறிய விஷயம். இற்காகவா கவலைப்படுகிறது..

9. கஷ்டம் தான். ஆனால் முடியும்.

10. நஷ்டம் தான். ஆனால் மீண்டு வந்துவிடலாம்.

11. இதில் விட்டால் மற்றொன்றில் எடுத்துவிட மாட்டேனா?

12. விழுந்தால் என்ன? எழுந்திருக்க மாட்டேனா?

13. விழுந்தது விழுந்தாச்சு. எழுந்திருக்கிற வழியைப் பாரு.

14. உட்கார்ந்து கொண்டே இருந்தால் என்ன அர்த்தம்? எழுந்திரு. ஆக வேண்டியதப் பார்.

15. இவன் இல்லை என்றால் வேறு ஒருவன் இல்லையா?

16. இந்த வழி இல்லை என்றால் வேற வழி இல்லியா?

17. இப்பவும் முடியவில்லையா? சரி. மீண்டும் ஒரு முயற்ச்சி..

18. இது கஷ்டமே இல்லையே. கொஞ்சம் யோசித்தால் வழி தெரியுமே.

19. முடியுமா என்று நினைக்காதே. முடியணும் என்று நினை.

20. கிடைக்கலியா, விடு. வெயிட் பண்ணு. இதை விட நல்லதாகவே கிடைக்கும்.

21. அவன் கதை நமக்கெதுக்கு. நம்ம கதையைப் பாரு.

22. விட்டுத் தள்ளு. வெட்டிப் பேச்சு எதற்க்கு? வேலை தலைக்கு மேலே இருக்கு.

23. திரும்பத் திரும்ப அதயே பேசாதே. அது முடிஞ்சு போன கதை.

24. சும்மா யோசித்துக்கொண்டே இருக்காதே. குழப்பம் தான் மிஞ்சும். சட்டென்று வேலையை ஆரம்பி.

25. ஆஹா, இவனும் அயோக்கியன் தானா? சரி, சரி. இனிமேல் எல்லோரிடமும் நான்கு மடங்கு ஜாக்கிரதையாகத்தான் இருக்கணும்.

26. உலகத்தில் யார் அடிபடாதவன்? யார் ஏமாறாதவன்? அடிபட்டாலும் ஏமாந்தாலும், அவனவன் தலை தூக்காமலா இருக்கான்?

27. ஊரில் ஆயிரம் பிரச்சனை. என் பிரச்சனைய நான் தீர்த்தா போதாதா?

28. கஷ்டம் இல்லாத வாழ்க்கை எது? அது பாட்டுக்கு அது. வேலைபாட்டுக்கு வேலை.

29. எப்பவுமே ஜெயிக்க முடியுமா? அப்பப்ப தோத்தா அது என்ன பெரிய தப்பா?

30. அவனை ஜெயிச்சாதான் வெற்றியா? நான் தான் தினம் வளர்றேன, அதுவே வெற்றி இல்லையா?

31. அடடே, இதுவரை நல்லா தூங்கிட்டேனே, பரவாயில்ல. இனிமே முழிச்சிருந்தாலே போதும்.

32. நாலு காசு பாக்குற நேரம். கண்டதப் பேசிக் காலத்தைக் கழிக்கலாமா?

ஆம், நண்பர்களே,

*வீழ்வது கேவலமல்ல*,
*வீழ்ந்தே கிடப்பது தான் கேவலம்*....

முயற்சியுடன் எழுந்திடுங்கள்! உங்கள் உயரத்தை உலகுக்குக் காட்டுங்கள்.

#படித்ததும்_பிடித்தது

# மனதை நிமிர்த்தும் மந்திரச் சொற்கள்!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குழந்தைகளோடு சேர்ந்து நாமும் கற்றுக் கொள்வோம்.

குப்பைகளைப் பிரித்தெடுத்தல் முறை மூலம் மீள் சுழற்சிக்கு உட்படுத்துதலென்பது எங்கள் குழந்தைகளுக்கு ஒரு கவலையே இல்லை (le tri, pas un souci pour nos petits) என பிரான்சில் குழந்தைகளிடையே மேற்கொள்ளப் பட்ட ஒரு ஆய்வு கூறுகிறது. அந்த ஆய்வின் விபரங்கள் Juin 27 இல் வெளிவந்த பிரஞ்சுப் பத்திரிகையான 'Le Parisien' இல் ஒரு கட்டுரையாக வெளிவந்துள்ளது.

இதனை 'Émilie Torgemen' எழுதியிருக்கிறார்.

இவர் ஒரு சூழலியலாளர். 'Shanghai' நகரத்தின் சூழலியல் பொறுப்பதிகாரியாக இருந்த ஒரு பிரஞ்சுக்கார்.

குழந்தைகளுக்கு இதன் மேலுள்ள ஆர்வத்தையும் அக்கறையையும் இந்த ஆய்வு காட்டுவதாகவும் குப்பைகள், குழந்தைகளால் 'வரிசையாக்க செயன் முறை'க்கு உட்படுத்தப்படும் இச் செயல்முறை பல ஆச்சரியங்களைக் கொண்டிருக்கிறதெனவும் அவர் கூறுகிறார்.

4—14 வயதிற்குற்பட்ட குழந்தைகள் இச் செயல் திட்டத்தில் கலந்து கொள்ள வைக்கப்பட்டார்கள். குப்பைகளின் மீள்சுழற்சி தொடர்பாக அவர்களிடம் கேள்விகள் கேட்கப்பட்டது.

குறிப்பாக குழந்தைகளினுடைய இது தொடர்பான கலந்துரையாடல்கள் தந்தையுடன் வெளிப்படையாக இருப்பதில்லை எனவும் 45% மான அப்பாக்களே இது தொடர்பில் குழந்தைகளுக்கு முன்னுதாரணமாக இருக்கிறார்கள் எனவும் கூறுகிறது ஆய்வு.

மேலும் தேர்ந்தெடுக்கப்பட்ட குழந்தைகளைக் கொண்டு நடத்தப்பட்ட இக்கணிப்பில் 89% மான குழந்தைகள் அம்மாவின் பயிற்சியால் இது தங்களுக்குள் ஏற்பட்டதென தெரிவித்ததோடு அம்மாவே தங்களுக்கு தொடக்க புள்ளியாக இருந்ததாகவும் கூறுகிறார்கள்.

பொதுவாக 4—9 வயதிற்குட்பட்ட குழந்தைகள் சரியான குப்பைத் தொட்டிகளில் சரியான கழிவுகளை மிகவும் எளிதாக இடுவதோடு அவர்கள் இந்த விளையாட்டின் விதிகளைப் புரிந்து கொண்டு பெரும்பாலும் வெற்றியடைவதில் பெருமைப்படுகிறார்களெனவும் சொல்லப்படுகிறது.

10வது வயதைக் குழந்தைகள் தாண்டும் போது நேர்மைத் தன்மையாகவும் தன்னியக்கமாகவும் இருப்பதால் குப்பைகளை 'வரிசையாக்க செயன்முறை'க்கு உட்படுத்துதல் மென்மேலும் அவர்களுக்கு தெளிவாகிறதெனவும் ஆய்வு சொல்கிறது.

விடுமுறைக்குச் செல்லும் போது செல்லுமிடங்களிலுள்ள கழிவுப் பொருட்கள் எவ்வாறான செயன்முறைக் குட்படுகின்றன? இரண்டு வேறுபட்ட நகராட்சிகளிலுள்ள இது தொடர்பான நடைமுறைகளை எவ்வாறானவை? என்பவற்றை அறிவதில் இவர்கள் ஆர்வமாக உள்ளனர். முக்கியமாக அறிவிப்புப் பலகைகள் அவர்களை வழிநடத்துகின்றன. அவ்வாறு இல்லையெனில், இவை தொடர்பான வழிகாட்டியின் பயன்பாட்டை பெற்று செயலாற்றுகின்றனரென அக்கட்டுரை நீள்கிறது. குழந்தைகளின் சுவாரஸ்யமான கேள்வி பதில்கள், உரையாடல்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

இவ்வாய்வானது நம் அனைவரினதும் கண்முன்னே நிகழும் குழந்தைகளின் யதார்த்த சூழலை அப்படியே பிரதிபலிக்கிறதென பாராட்டப்படுகிறது.

பாரிஸ் போன்ற பெரு நகரங்களில் ஒரு நாளில் சேருகின்ற குப்பைகளினளவு மிகப் பெரியது. இந்த பூமி நமக்கானது மட்டுமல்ல எதிர்கால நம் குழந்தைகளுக்குமானது என்பதைப் புரிந்து கொண்ட சூழலியலாளர்கள் குழந்தைகளையே இவற்றில் பங்கு பற்றச் செய்து, முன்நகர்த்தி ஆர்வப்படுத்துகிறார்கள். அவர்களை இந்தப் பூமி கண்டிப்பாக ஆர அரவணைத்துக் கொள்ளும்.

குழந்தைகளோடு சேர்ந்து நாமும் இவற்றைக் கற்றுக் கொள்வோம்.

நம் சூழலை நாமே அழகாக்குவோம்.

Luxman Vithyah


## உங்கள் குடும்பத்தின் எதிர்காலத்தை பாதுகாக்க இன்றே திட்டமிடுங்கள்?




Super Visa 100% Refund if Visa Denied

போதுமான பாதுகாப்பே குடும்பத்தில் நிறைவான நிம்மதியைத் தரும்.

உங்களிடம் உள்ள காப்புறுதி உங்களுக்கு எவ்வாறான பாதுகாப்பைத் தருகிறது என்று அறிய வேண்டுமா? இலவச ஆலோசனைக்கு என்னை அழையுங்கள்.

உங்களுக்கு விரும்பிய காப்புறுதி நிறுவனத்தில் காப்புறுதி செய்யலாம்

திலீபன் இராமநாதன் BBM (Hons)
(Thileepan Ramanathan) Dir : (647) 381-8445
ஆயுள் காப்புறுதி முகவர் Email: itsthil@yahoo.ca

ஆயுள் காப்புறுதி விலைவிபரங்கள்

| வயது | | 25 | | 30 | | 35 | | 40 | | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | | 70 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| காப்புறுதி தொகை | காப்புறுதி வருடங்கள் | M | F | M | F | M | F | M | F | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 200 000 | 10 | 15 | 11 | 15 | 12 | 15 | 14 | 19 | 18 | 26 | 21 | 34 | 26 | 62 | 45 | 99 | 71 | 167 | 113 | 294 | 204 |
| 500 000 | 10 | 28 | 18 | 28 | 19 | 29 | 23 | 36 | 8 | 51 | 37 | 76 | 54 | 143 | 99 | 232 | 163 | 405 | 270 | 705 | 491 |
| 200 000 | 20 | 17 | 14 | 18 | 15 | 20 | 16 | 26 | 21 | 40 | 29 | 63 | 43 | 116 | 79 | 204 | 137 | 309 | 208 | 481 | 326 |
| 500 000 | 20 | 34 | 23 | 34 | 24 | 37 | 28 | 50 | 38 | 80 | 54 | 136 | 83 | 268 | 178 | 482 | 324 | 734 | 500 | 1139 | 762 |
| 100 000 | ஆயுள்வரை | 49 | 44 | 58 | 52 | 69 | 61 | 81 | 69 | 103 | 86 | 122 | 107 | 154 | 128 | 201 | 168 | 269 | 229 | 360 | 308 |
| 250 000 | ஆயுள்வரை | 95 | 83 | 115 | 102 | 142 | 126 | 178 | 149 | 234 | 195 | 280 | 239 | 370 | 303 | 476 | 393 | 641 | 541 | 878 | 744 |

Non medical- Term & Permanent Products

| வயது | | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | | 70 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| காப்புறுதி தொகை | காப்புறுதி வருடங்கள் | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 150 000 | 10 | 46 | 42 | 64 | 53 | 92 | 72 | 166 | 121 | 292 | 197 | 586 | 369 |
| 100 000 | 10 | 33 | 30 | 46 | 38 | 64 | 52 | 113 | 83 | 197 | 134 | 393 | 248 |
| 50 000 | 10 | 20 | 20 | 33 | 23 | 36 | 29 | 60 | 45 | 102 | 71 | 200 | 128 |
| 150 000 | 20 | 56 | 46 | 92 | 67 | 147 | 104 | 243 | 164 | 398 | 257 | 675 | 442 |
| 100 000 | 20 | 40 | 33 | 64 | 47 | 101 | 72 | 165 | 112 | 268 | 174 | 452 | 297 |
| 50 000 | 20 | 24 | 20 | 36 | 27 | 54 | 40 | 86 | 60 | 138 | 92 | 230 | 152 |
| 20 000 | ஆயுள்வரை | 45 | 37 | 49 | 41 | 61 | 52 | 80 | 68 | 111 | 86 | 157 | 117 |
| 30 000 | ஆயுள்வரை | 64 | 53 | 71 | 59 | 89 | 75 | 117 | 96 | 164 | 126 | 232 | 173 |
| 40 000 | ஆயுள்வரை | 84 | 69 | 92 | 78 | 117 | 98 | 154 | 126 | 217 | 167 | 308 | 229 |
| 50 000 | ஆயுள்வரை | 104 | 85 | 114 | 94 | 144 | 121 | 191 | 156 | 270 | 207 | 384 | 285 |
| 75 000 | ஆயுள்வரை | 153 | 124 | 169 | 139 | 214 | 178 | 283 | 231 | 402 | 308 | 573 | 425 |
| 100 000 | ஆயுள்வரை | 202 | 164 | 223 | 183 | 283 | 236 | 376 | 306 | 534 | 409 | 763 | 564 |

Call me for your free consultation.

Life100 INSURANCE & INVESTMENTS INC.

"Price are based on current rates and it may change time to time. condition may apply"






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரதத்தின் பன்முக ஆளுமை அகேனம் வசந்தா டானியல்



தமிழ் மொழியின் ஆரம்பம் முதல் இன்று வரை, தமிழின் வளர்ச்சியை 130 நிமிடங்களில் ஒரே மேடையில் தரிசிக்க முடியுமா? முடியும் என நிரூபித்துள்ளார் திருமதி வசந்தா டானியல்.

67 வயதான திருமதி வசந்தா டானியல், தனது சிறிய வயதில் நடனம் பயில இந்தியா சென்றார். ஒரு கட்டுக்கோப்பான கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்த இவர், பரதம் பயில விரும்பியதே இவரது மன உறுதியையும், கலை மேல் உள்ள ஆர்வத்தையும் வெளிப்படுத்துகின்றது. திருமதி வசந்தா டானியலின் தந்தையார் தேவேந்திரசிங்கம் பியுவல் ஒரு தேர்ந்த புல்லாங்குழல் கலைஞர். தந்தையாரின் வேலை நிமித்தம் கந்தப்பொலையில் தனது சிறிய வயதினைக் கடந்தார். 1958 இனக் கலவரம் தேவேந்திரசிங்கம் குடும்பத்தை சாவகச்சேரிக்கு அழைத்துச் சென்றது. வேம்படி மகளிர் கல்லூரியில் தனது கல்வியினைத் தொடர்ந்தார் திருமதி வசந்தா டானியல். திருமதி வசந்தா டானியல் ஒரு சிறந்த பாட்மின்ரன் வீராங்கனையுமாவார். வேம்படியிலிருந்து இந்தியா சென்று அங்கு தற்பொழுது பிண்ணனி பாடகராக இருக்கும் மாணிக்க விநாயகத்தின் தந்தையாரும், பிரபல்ய நாட்டிய ஆசிரியருமான பத்மஸ்ரீ தண்டாயுதபாணி பிள்ளையிடம் பரதம் கற்றார். அங்கு பரதத்துடன், பரதத்தின் பின்னால் இயங்கும் இசை, மேடையமைப்பு போன்ற நுண் விடயங்களையும் கற்றார். இவரது சக மாணவர்களாக தமிழ் நாட்டின் முன்னால் முதல்வரும், நடிகையுமான ஜெயலலிதா, நடிகை ஸ்ரீவித்தியா ஆகியோர் இருந்துள்ளனர். இவர்களுடன் இணைந்து பரத நிகழ்ச்சிகளிலும் பங்கு பற்றியுள்ளார்.

நாடு திரும்பிய திருமதி வசந்தா டானியலின் அரங்கேற்றம் அவரது 17வது வயதில் நடைபெற்றுள்ளது. இடையில் திருமதி. வஜீரா சித்திரசேனா கண்டிய நடனமும் கற்றார். பின்னர் நடன ஆசிரியையாக வாழ்வைத் தொடங்கியவா, ; தமிழ் மக்கள் பல இன்னல்களை சந்தித்த நேரங்களில் மக்களது அவலங்களை நாட்டிய நாடகமாக வெளிப்படுத்தினார். பாரதியார் பாடல்களை மையப்படுத்திய பல நாட்டிய நாடகங்களை இவர் படைத்துள்ளார். இக் கால கட்டத்தில் இவரது வீடு இலங்கை இராணுவத்தினரால் தீக்கிரையாக்கப்பட்டது.

திருமணத்தின் பின்னர், கணவனின் பணி நிமித்தம் உகண்டா சென்றார். ஆபிரிக்க மண்ணிலும் பரதத்தை பதிவு செய்தார். 1986ல் கனடாவிற்கு புலம் பெயர்ந்த திருமதி வசந்தா டானியல், ரொரன்ரோவில் பல நாட்டிய நாடகங்களை மேடையேற்றியுள்ளார். பொதுவாக நடன ஆசிரியைகள் நடனம், அரங்கேற்றம் என்பதற்கு அப்பால் நகர்வதில்லை. திருமதி வசந்தா டானியல் சமூகத்திற்கு நன்மைபயக்கும் விடயங்களை தனது நடனத்தின் மூலம் வெளிப்படுத்தினார். இவரது நாட்டிய நாடகங்கள் ஒரு கட்டுடைப்பாகும். குறிப்பாக பெண் கவிஞர்களின் கவிதைகளை மையமாகக் கொண்டு சொல்லாத சேதிகள் நாட்டிய நாடகத்தை மேடையேற்றினார். மேழி, Moods and Rhythms of Nature, Secret Daughter என்ற நாவலை மையமாகக் கொண்ட தாய்மை, புத்தருக்கு அஞ்சலி, உயிர்ப்பு, ஆன்ம பலம், அம்பேத்காரின் கருத்துக்களை மையப்படுத்திய 'எச்சமாய் பதிந்து நிற்கும் காலடிகள்' ( (Foot prints he left behind) ) போன்ற பல நாட்டிய நாடகங்களை மேடையேற்றியுள்ளார்.

பந்த நல்லூர் பாணியை தனது பரத நாட்டியத்தில் மேற்கொண்டாலும் நாட்டிய நாடகத்தில் ஒடிசி, கத்தக், கதகழி, குச்சிப்புடி, கண்டியன் நடனம் போன்றவற்றை உள்ளடக்கினார். சமூகத்தில் புரையோடியிருக்கும் பல ஏற்றத் தாழ்வுகள், ஒடுக்கு முறைகள், பெண்ணடிமைத்தனம் போன்ற பல பிரச்சினைகளை தமது நாட்டியத்தில் வெளிப்படுத்தியுள்ளார். பரத நாட்டியத்தில் மிக அதிக தேடல் மிகுந்தவராக இவருள்ளதால் இப் பிரச்சினைகளின் வெவ்வேறு பரிமாணங்களை பல் வேறு வடிவத்தில் வெளிப்படுத்தியுள்ளார். இன்றைய வர்த்தக நுகர்வுக் கலாச்சாரத்தின் எதிர் நிலையில் இருந்து பார்வையாளர்களுக்கு வித்தியாசமான அனுபவங்களையளித்துள்ளார்.

இவரை ஒரு சமூகப் போராளிக் கலைஞராக கண்கொண்ட சுயாதீன கலை, திரைப்பட மையம் இவரது சமூகக் கட்டுடைப்புக்கும், மாற்று ஊடக முயற்சிக்குமான வாழ்நாள் சாதனையாளர் விருதான அகேனம்



விருதை வழங்கியது. கே..எஸ் பாலச்சந்திரன், பி.விக்னேஸ்வரன், டொமினிக் ஜீவா, பாலேந்திரா, குறமகள், ஞானதாஸ் போன்றோர் இவ் விருதினைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அகேனம் வசந்தா டானியல் என விளித்து தனது அறிமுகத்தை ஆரம்பித்தார் சுதர்சன் துரையப்பா. அன்றைய நிகழ்வின் தொகுப்பாளர். அத்துடன் சிறந்த பரத நாட்டியக் கலைஞருமாவார். ஆறு ஆண்டுகளுக்கு முன்னர் தமிழ் மொழியின் சிறப்பு, சரித்திரம் பற்றி ஒரு நாட்டிய நாடகம் செய்ய வேண்டும் என அகேனம் வசந்தா டானியல் தன்னிடம் குறிப்பிட்டதாக கூறினார். தமிழ் ஏன் செம் மொழியானது என்ற விளக்கத்துடன் ஆரம்பமாகி பல படிகளில் வளர்ந்த தமிழினை, தமிழர் வாழ்வை நாட்டிய நாடகமாக பார்வையாளர்களுக்கு கொடுத்தார். சுமார் 40க்கும் மேற்பட்ட நாட்டிய தாரகைகள் நாட்டியமாடினர். சில சிறுவன்களும், இளைஞர்களும் கூட நடனமாடினர். ஆரம்பம் முதல் முடிவு வரை மிகவும் சிறப்பாக இருந்தது இவரது நடன அமைப்பு. மாணவர்கள் மிகச் சிறப்பாக நடனமாடினர். ஏழு வயதிலிருந்து எழுபது வயது வரையிலானவர்கள் நடனமாடினர். அகேனம் வசந்தா டானியலுக்கு இன்னும் மூன்று வருடங்களில் 70வயது. மாணவர்களுக்கு ஈடு கொடுக்கும் வகையில் அவரும் சிறப்பாக ஆடினார்.

அகேனம் வசந்தா டானியலின் மாணவர்கள் வெகு அரிதாகவே அரங்கேற்றம் செய்வார்கள். கற்றது கையளவு, கல்லாதது கடல் அளவு என்ற கூற்றினைப் போல் அரங்கேற்றத்துக்கு அப்பாலும் நாட்டியம் தொடரவேண்டும். ஓரளவிற்கு முழுமையாக நாட்டியத்தை கற்றவர்களாலேயே அரங்கேற்றம் செய்யப்பட வேண்டும். இன்று இது ஒரு வியாபாரமாக யூனியர் அரங்கேற்றம் என நடைபெறுகின்றது. மாணவர்கள் பாடு திண்டாட்டம். அகேனம் வசந்தா டானியலின் மாணவர்கள் இதற்கு விதிவிலக்கு. இவர்கள் மேடையில் ஆடிய விதமும், ஒழுங்கும் மிகவும் சிறப்பாக அமைந்திருந்தது. திரு. பொன்னையா விவேகானந்தன் இந்த நாட்டிய நாடகத்தை எழுதியிருந்தார். தமிழின் சிறப்பு இவரின் எழுத்து வாயிலாலும், அகேனம் வசந்தா டானியலின் நாட்டியத்தாலும் வெகு சிறப்பாக வெளிப்பட்டது. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், ஆங்கிலேயர் காலம், பக்தி நெறி காலம், மூவேந்தர் காலம் என தமிழ் வளர்ந்த அனைத்துக் காலப் பகுதிகளையும், மண்ணுக்குரிய வெளிப்பாட்டுடன் அழகாக திருமதி வசந்தா டானியல் தனது மாணவிகளினூடாக வெளிப்படுத்தினார்.

ஆங்கில மொழி வணிக மொழியாகவும், செம் மொழியாகவும் வளர்ச்சியடைந்த போது பல சிறு மொழிகள் அழிந்து போயின. ஆபிரிக்க நாடுகள் பலவற்றில் ஆங்கிலமே தாய் மொழியாகவுள்ளது. பிலிப்பைன் நாட்டு மொழிகளுக்கு ஆங்கில எழுத்து வடிவமேயுள்ளது. அவ் வகையில் தமிழ் கூட பல சிறு மொழிகளை அழித்து விட்டே இன்று அரசாள்கின்றது. அவை பற்றிய எந்த வெளிப்பாடுகளும் இல்லை. இக் குறையை விட வேறு குறைகளற்ற சிறந்த நிகழ்ச்சி இது. நாடக அமைப்பு வெகு சிறப்பாக இருந்தது.

நாட்டியக் கலாயத்தின் ஐம்பதாவது ஆண்டு விழாவில் தமிழுக்கு மகுடம் சூட்டியுள்ளார்கள். விழாவின் மற்றொரு நாயகன் ஓவியர் மருது. இவரது ஓவியங்கள் நிகழ்வை மேலும் மெருகூட்டியது. தமிழைப் பற்றிய பெருமையை உலகறியச் செய்துள்ளார்கள். சுவாமி விபுலானந்தர் பரதம், பண், இரதம், தாளத்திலிருந்து தோன்றியது என்றார். பாவ, இராக தாளத்திற்கேற்ப ஆடுவதால் பரதம் என் பெயர் வந்ததாகவும் குறிப்பிடுகின்றார்கள். இந் நிகழ்வில் இவையனைத்தையும் காணக் கூடியதாகவிருந்தது. வெகு அரிதாகவே இவ்வாறு நிகழும். அகேனம் வசந்தா டானியலுக்கு வாழ்த்துக்கள்.

**ரேவதி-யாத்ரீகா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மனித உரிமைகளின் துஷ்பிரயோகங்கள்!

## கனடாவில் நியாயம் எங்கே?

### (Human Rights Violations & Justice in Canada)

கொஞ்ச வருடங்களின் முன்பு கனடாவில் உள்ள இந்து ஆலயத்தில் மனிதநேயத்தினை தொலைத்த அந்த சம்பவம் நடந்து, அது அன்று பகிரங்கத்திற்கு வந்து அனைவரையும் வேதனைப்படுத்தியது.

கனடிய மனித உரிமைகளின் சட்டங்களின் பிரகாரம், அதி உச்ச மனித உரிமைகளின் மீறல்களுக்கு இது ஒன்றினையே உதாரணமாக குறிப்பிடலாம்.

அன்று புது வருட தினம்!

பிரசித்தி பெற்ற அந்த கோயிலுக்கு அந்த இனிய காலை நேரம் பல பக்தர்கள் வந்துக் கொண்டிருக்கின்றனர்.

வருகை தந்துக் கொண்டிருக்கும் பக்தர்கள் கூட்டததில் வயது குறைந்த, ஓர் இளம்பெண் சக்கர நாற்காலியின் உதவியுடன், அவர்களின் குடும்பத்தவரோடு ஆலய வாசலில் பிரவேசித்தார்.

தாயக மண்ணில் நடந்த பாரிய யுத்தத்தில் சிக்குப்பட்ட அந்த வயது குறைந்த பெண் உடல் அங்கவீனமான நிலைமைக்கு தள்ளப்பட்டிருந்தார் என்பது பலருக்கும் தெரிந்த விடயம் ஆகும்.

அந்த ஆலயத்தின் ஏகபோக உரிமையாளரான அர்ச்சகர், சக்கர நாற்காலியில் ஆலயத்திற்கு வந்த, அந்த இளம்பெண்ணை கண்டதும் வாசலுக்கு விரைந்து வந்தார்.

அலங்காரமான வேஷ்டி! சால்வை! நெற்றியிலும், கைகளிலும் குறியிட்ட திருநீறு! கழுத்தில் ஏராளமான புனிதமான உருத்திராட்ச மாலைகள்! என யாவும் சேர்ந்து, அந்த அர்ச்சகரை ஆண்டவனின் பிரதிநிதி போல காட்டிக் கொண்டிருந்தது.

முன்னம் முன்னம் புது வருடம் பிறக்கும் நேரம், உடல் அங்க வீனமானவர் கோயிலுக்குள் வரக் கூடாது என வாசலில் வைத்து திருப்பி அனுப்ப கிளம்பி, அது பாரிய சர்ச்சையினை அந்த நேரம் உருவாக்கி தொடர்ந்து தமிழ் ஊடகங்களிலும் பரபரப்பாகியிருந்தது.

அர்ச்சகருக்கு அன்று நல்ல காலம்! மனித உணர்வுகளை அணுஅணுவாக கொல்லும், இந்த மனிதாபிமானமற்ற ஈனசெயல் மனித உரிமைகள் நியாய மன்றத்தின் பார்வைக்கு செல்லாமல் தப்பிவிட்டது.

"ஆலயம் அவரது பிரத்தியேகமான தனியார் உடமை" என்ற ஒரு வக்காலத்து நியாயத்தினை சிலர் முன் வைக்கலாம். ஆனால் அது மனித உரிமை சட்டங்களின் பிரகாரம் கனடாவின் நியாயமன்றத்தில் ஒரு போதும் எடுபடாது.

கனடாவில் தொழில் செய்யும் இடங்கள் உட்பட எந்தவொரு இடத்திலும்,

- குடியேற்றவாசிகள்
- குறிப்பிட்ட நிறத்தவர்
- இனம் / மதம்
- மொழி
- ஆண் / பெண் பாகுபாடு
- நோய்வாய்பட்டவர் / உடல் அங்கவீனமானவர்
- கர்ப்பிணி பெண்
- குழந்தைகளுடன் வசிப்பவர்

என எவரையும் எவரும் எந்த இடத்திலும் பாகுபாடு காட்ட முடியாது. "துவேஷம்" என்ற சொல்லினை செயல்களில் உபயோகித்தால் அது ஆபத்தாகவே முடியும் என்பதற்கு கனடாவின் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக நடந்த பல நீதிமன்ற வழக்குகள், தீர்ப்புகளை இங்கு குறிப்பிட்டுக் கொண்டே போகலாம்.

ஆனால், இங்கு ஊடகங்களில் வெளிவந்த செய்தி கட்டுரைகளில் ஐந்து நிகழ்வுகளை மட்டும் இங்கு உதாரணமாக பலருக்கும் ஒரு படிப்பினைக்காக குறிப்பிட்டு, பாதிக்கப்பட்டவர்கள் இங்கு எப்படி இவ் நியாயமன்றத்தினை அணுகுவது என்ற விடயத்திற்கு வருவோம்.

"Disability Woman Wins Discriminatory. Pay case at Ontario Human Rights Tribunal"

(வேதனம் வழங்குவதில் பாகுபாடு காட்டிய வழக்கில் ஒன்ராரியோ மனித உரிமைகள் நியாயமன்றத்தில் வெற்றி எடுத்த உடல் அங்கவீனமான பெண்)

என்னும் தலைப்பில் "ரொரன்ரோ ஸ்ரார்" பத்திரிகை கடந்த மார்ச். 07, 2014யில் ஒரு செய்தி கட்டுரை வெளியிட்டிருந்தது.

JANUS JOAN INC.
10, DUNLOPE DRIVE
ST. CATHARINES, ONTARIO

என்பது அதே விலாசத்தில் தனி ஒருவருக்கு சொந்தமான வைன் போத்தல்கள் பெட்டிகளில் அடைக்கும் ஒரு தொழிற்சாலை.

அங்கு 1999ம் ஆண்டு தொடக்கம் வேலை செய்து வந்தவர் விஹ. Terri - Lynn - Garrie என்ற பெண் ஒருவர்!

"மதியிறுக்கம்" என குறிப்பிடப்படும் விவேகம் குறைந்த ஒரு அப்பாவி பெண்! (Intellectual Disable Woman)

தினமும் தனியாக பஸ் எடுத்து ஆர்வமாக வேலைக்கு போய் வருவார்.

என்ன அநியாயம்!

தொடர்ந்து பத்து வருடங்களாக மணித்தியாலத்திற்கு $1.25 மட்டுமே சம்பளமாக அவருக்கு வழங்கப்பட்டு நாள் முழுவதும் வேலை வாங்கப் பட்டது.

இறுதியாக 2009ம் ஆண்டில் நிரந்தரமாக வேலையிலிருந்து நிறுத்தி விட்டனர்.

பிரச்சினை இறுதியில் மனித உரிமைகள் நியாய மன்றத்தின் விசாரணைக்கு வந்தது.

"மதியிறுக்கம்" என்ற உளரீதியான அங்கவீனத்திற்கு உட்பட்டிருந்தாலும், அவருக்கு மாகாணத்தின் சட்டப் படியாக குறைந்தளவு வேதனம் (Minimum Legal Wages) வழங்க தவறியது குற்றம் என முடிவு செய்து மொத்தமாக $142,000 டொலர் தவறிய வேதனமாக அவருக்கு தொழிற்சாலை வழங்க வேண்டும் என்று மனித உரிமை நியாய மன்றம் தீர்ப்பு வழங்கியது.

2. "மனித உரிமைகள் சட்ட ஆதரவு மையம்" என்னும் நிறுவனத்தின் இணையதள செய்தியில், (Human Rights Legal Support Centre News) இந்த தகவல் பொதுக்களுக்கு பகிரங்கப்படுத்தப்பட்டது.

அந்த நிறுவனம் கனடா முழுவதும் நூற்றுக்கு மேற்பட்ட கிளைகளை கொண்ட பிரபல்யமான ஆண்களுக்கான உடுப்புகள், துணிகள் விற்பனை செய்யும் ஒரு வர்த்தக நிறுவனம்.

"Internatinoal Clothiers" என்பது அந்த வர்த்தக நிறுவனத்தின் பெயர் ஆகும்.

அந்த நிறுவனத்தில் பணிபுரிந்து வந்தவர் Ms. Vanda Kholi என்ற பெண்!

உதவி மானேஜராக பதவி உயர்வு பெறுவதற்கு தமது தகுதிகள், அனுபவங்களை அடிப்படையாக வைத்து விண்ணப்பம் செய்தார்.

ஆண்களுக்கு துணிகள் விற்பனை செய்யும் நிறுவனத்தில் உதவி மானேஜராக பெண் ஒருவரை நியமிக்க முடியாது என கம்பெனி மறுத்து விட்டது.

நிறுவன மானேஜர் (Store Manager Mr. Shafig Bajwa) மற்றும் பிராந்திய மானேஜர் (District Manager Mr. Malik Awan) ஆகிய இருவரும் கைச்சாத்திட்டு கடிதம் அனுப்பி, அந்த பதவி உயர்வுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகுதியில்லை என்பதனை அறிவித்து விட்டனர்.

தட்டி கேட்டதால் வேலை நேரங்களை குறைத்தார்கள். விடுமுறையில் பணிசெய்ய வற்புறுத்தப் பட்டார். இறுதியில் வேலையிலிருந்து நிறுத்தியே விட்டார்கள்.

அந்த பெண்மணி தமது பிரச்சனையினை மனித உரிமைகள் நியாய மன்றத்திற்கு முறைப்பாடு செய்தார்.

பெண் என்ற காரணத்திற்காக பாகுபாடு காட்டி பதவி உயர்வினை தடுத்தது! மற்றும் காரணமில்லாது வேலையிலிருந்து நிறுத்தியதற்கு $12,000 டொலர் நட்டஈடு. இவ்வளவு கால சம்பள இழப்பிற்கு மேலதிகமாக $25,586 டொலர் வழங்க வேண்டும் என தீர்ப்பு வழங்கப்பட்டது.

3. "Nino D' Arena Salon" என்பது கனடாவின் பிரபல்யமான சிகை அலங்கார தொழில் நிறுவனம். மிசுசாகாவில் உள்ள இதன் கிளை நிறுவனம் ஒன்றில் ஆகஸ்ட், 2008யில் இந்த சம்பவம் நடந்தது.

"Ms. Jessica Maciel" என்ற இருபது வயது அழகான பெண் ஒருவர் கம்பெனியின் "வரவேற்பாளர்" (Receptionist) தொழிலுக்கு அமர்த்தப் பட்டு முதல்நாள் சில மணி நேரத்தினுள் வேலையிலிருந்து துரத்தப்பட்டார்.

முதல்நாள் வேலை ஆரம்பித்து சில மணி நேரத்தின் பின்பே தாம் நான்கு மாத கர்ப்பிணியாக இருக்கும் இல்லற வாழ்வில் இணையாத பெண் (Single Mother) என்பதனை தெரிவித்தார்.

நிர்வாகம் உடனடியாக வேலையிலிருந்து வெளியே அனுப்பி விட்டது.

"கர்ப்பிணி பெண்" என்ற பாகுபாட்டுக்காக தமது தொழிலை பறித்த அநியாயத்தினை மனித உரிமைகள் நியாய மன்றத்திற்கு முறைப்பாடு செய்தார்.

தொழிலை பறித்த நிறுனம் $35,000 டொலர் நட்டஈடு அந்த பெண்ணுக்கு வழங்க வேண்டும் என மனித உரிமைகள் நியாயமன்றம் தீர்ப்பு வழங்கியது.

ஆதாரம் —

"Woman Fired Over Pregnancy Wins $35,000 in Right Case"

(கர்ப்பிணி என்பதற்காக வேலை நீக்கம் செய்யப்பட்ட உரிமை வழக்கில் $35,000 டொலர் சன்மானம் பெற்ற பெண்)

"Toronto Star", Oct. 30, 2009.

4. "Le Nouveau Papillon on the Park",

100, Eastern Ave, Toronto

என்பது ரொரன்ரோ நகரில் மேற்குப்பிட்ட விலாசத்தில் இயங்கும் பாரிய இத்தாலியன் உணவகம் ஆகும். இங்கு,

Mr. Abdul Malk

Mr. Mohammed Islam

Mr. Arif Hossaiz

என்ற பெயரில் உள்ள மூன்று முஸ்லீம் இளைஞர்கள், சமையல் பகுதியில் தொடர்ந்து பணியாற்றி வந்தனர்.

அவர்களினால் சமையல் செய்யப் படும் பன்றி இறைச்சி உணவுகளை முஸ்லீம் மதம் என்றபடியால் சாப்பிட்டு பதம் பார்க்க மாட்டோம் என்பதில் உறுதியாக மூவரும் நின்றனர்.



உணவக நிர்வாகம் அவர்களின் நாடு, பேசும் பாஷை, இறுக்கமான கலாச்சாரங்களை சுட்டி பேதமைக் காட்டி நையாண்டி செய்தது.

வற்புறுத்தி பன்றி இறைச்சி சாப்பிட்டமையால் ஒருவர் வாந்தி எடுக்கும் நிலைமைக்கு தள்ளப்பட்டார்.

இறுதியில் அவர்களின் உறுதியான மறுப்பின் காரணமாக வேலையிலிருந்து நிறுத்தி விட்டனர். அவர்களும் அமைதி யாக இருக்கவில்லை. கனடாவின் மனித உரிமைகள் நியாயமன்றத்தில் முறையிட்டனர்.

ஒரு லட்சம் டொலர் மூவருக்கும் நட்ட ஈடாக வழங்க வேண்டும் என மனித உரிமைகள் நியாய மன்றம் தீர்ப்பு வழங்கியது.

ஆதாரம் —

"3 Muslim Restaurent Workers Awarded #100,000 in Discrimination Case"

(பாகுபாட்டு வழக்கில் $100,000 டொலர் சன்மானமாக பெற்ற மூன்று முஸ்லீம் உணவக தொழிலாளர்கள்)

"Toronto Star", Dec.17,2013.

5. அன்று! மே—2014 யில் ஒரு நாள்!

திரு. இமிலி விக்கம் (Mr. Emile Wickham) என்ற 27 வயது யோர்க் பல்கலைக்கழக கறுப்பின இளைஞன், தமது பிறந்த தினத்தில் மூன்று நண்பர்களுடன் ரொரன்ரோ நகரில் உள்ள சீனர்களின் உணவகம் ஒன்றுக்கு உணவு அருந்த சென்றிருந்தார்.

சாப்பிட்டு முடிந்தவுடன் சகலரும் அங்கு பணத்தினை செலுத்தும் நடைமுறை வழமை போல் நடந்து கொண்டிருந்தது.

ஆனால், இந்த கறுப்பின இளைஞர்களின் நேர்மையில் சந்தேகம் கொண்ட உணவு நிர்வாகம், கட்டணம் முன்பணமாக செலுத்திய பின்பே உணவு அங்கு இவர்களுக்கு மட்டும் வழங்கப்படும் என்ற கோரிக்கையினை உறுதியாக முன் வைத்தனர்.

தொடர்ந்து இந்த சம்பவம் கனடாவின் மனித உரிமை மீறல் நியாய மன்றத்திற்கு அவர்களினால் முறைப்பாடு செய்யப்பட்டது.

அன்று கறுப்பின இளைஞர்கள் மீது மனித உரிமை என்பது பாகுபாடு காட்டி மீறப்பட்ட குற்றத்திற்காக $10,000 டொலர் நட்டஈடாக அவர்களுக்கு உணவகம் வழங்க வேண்டும் என மனித உரிமை நியாயமன்றம் தீர்ப்பு வழங்கியது.

உணவகத்தின் பெயர் : Hong Shing Chinese Restaurent, 195, Dundas St. West, Toronto, Ontario.

ஆதாரம் — CBC News on Apr.30, 2018/ (Toronto Restaurant ordered to Pay Black man $10,000 after asking him to prepay Meal)

ஒன்ராரியோ மாகாணத்தில் மனித உரிமை மீறல்களில் பாதிக்கப்பட்ட ஒருவர் ஆரம்ப நிலையில் முறைப்பாட்டினை எப்படி முன் எடுப்பது?

பின்வரும் விலாசத்தில் இயங்கும் மனித உரிமை மீறல்களை விசாரிக்கும் நியாய மன்றத்தில் நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அல்லது அவர்களின் இணையதளத்திலிருந்து பதிவு இறக்கம் செய்தோ விண்ணப்ப படிவங்களையும், வழிகாட்டும் கையேடு களையும் பெற்றுக் கொள்ளலாம்.

அதன் விலாசம் பின்வருமாறு :

HUMAN RIGHTS TRIBUNAL OF ONTARIO
655, BAY STREET, 14TH FLOOR
TORONTO, ONTARIO M7A 2A3
Phone : 1-866-598-0322
Fax : 1-866-355-6099
Email : hrto.registrar@ontario.ca
website : www.hrto.ca

மனித உரிமை மீறல்களில் பாதிப்புகளை எதிர்கொண்டவர்களுக்கு இலவசமாக ஆலோசனை வழங்கி, வழிகாட்ட பின்வரும் அரச சட்ட உதவி மையம் ஒன்று என்றும் தயார் நிலையில் உள்ளது. அதன் விபரம் பின்வருமாறு:

HUMAN RIGHTS LEGAL SUPPORT CENTRE
180 Dundas Street West, 8th Floor
Toronto, Ontario M7A 0A1
Phone: 1-866-625-5179

தமிழ்மொழி உட்பட 140 மொழிகளில் இங்கு மொழிபெயர்ப்பு கேள்விகளும் வழங்கப்படுகின்றது. மனித உரிமை சட்டங்களில் அனுபவமுள்ள வக்கீல் குழு நியாயமன்றத்தின் சரியான நியாயத்தினை பெற்று தர வழிகாட்டுவார்கள்.

ஆனால் கனடாவின் மத்திய அரச நிறுவனங்களில் மனித உரிமை மீறல்கள் வந்தால் தலைநகரில் உள்ள பின்வரும் நிறுவனத்திற்கு விசாரணை எடுத்துச் செல்லப்படல் வேண்டும்.

Canadian Human Rights Commission
344 Slater Street,8th Floor
Ottawa, Ontario K1A 1E1
Phone : 1-888-214-1090

மனித உரிமைகள் நியாய சபைக்கு தங்கள் பிரச்சனையினை மனு செய்த பின்பு அடுத்த கட்டம் என்ன நடக்கும்?

தங்களுக்கு ஏற்பட்ட பிரச்சனை மனித உரிமை சட்டங்கள், கோட்பாடுகளை மீறும் நிலைக்கு உள்ளாக்கப்பட்டதா? என்பது நியாய சபையினால் முதலில் பரிசீலனை செய்து கொள்ளப்படும்.

தங்கள் முறைப்பாட்டினை பிரதி எதிர்வாதிக்கு அனுப்பி அவர் பக்கத்தில் உள்ள நியாயத்தினை எழுத்தில் பெற்றுக் கொள்வார்கள்.

இணக்கமான முறையில் தீர்த்து வைக்க முயல்வார்கள். இணக்கமான முறையில் தீர்வுக்கு எதிர்தரப்பு உடன்படவில்லையானால் ஒரு முடிவினை கண்டு கொள்ள விசாரணை நடத்துவார்கள்.

விசாரணை முடிவில் நியாயமான தீர்ப்பு வழங்கப்படும்.

நியாயமான மீறல்களாக இல்லையேல் குற்றசாட்டு நிராகரிக்கவும் படலாம்.

எனவே முறைப்பாட்டினை சமர்பிப்பதற்கு முன்னர், நடந்த சம்பவம், கனடாவின் சட்டப்படி மனித உரிமையினை மீறியதா? என்பது முதலில் வக்கீலுடன் அல்லது மேலே குறிப்பிடப்பட்ட அரச சட்ட உதவி மையத்துடன் ஆலோசித்து, குற்றச்சாட்டினை நிரூபிப்பதற்கு ஆதாரங்களும் இருந்தால் மட்டுமே நியாயமன்றம் வரை செல்ல வேண்டும்.

**சிவ பஞ்சலிங்கம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாகன விபத்தில் காயமடைந்துவிட்டீர்களா?



அனுபவசாலிகளின் ஆலோசனை பெற்றபின்
உங்கள் முடிவை எடுங்கள்.

MOTOR VEHICLE ACCIDENT

SERIOUS PERSONAL TRAUMATIC INJURIES AS RESULT OF A
MOTOR VEHICLE ACCIDENT
Fractures | Spinal Cord Injury | Brain or Head Injury | Internal Injuries | Scarring or Disfigurement | Catastraphic Injuries

**FOR CASH SETTLEMENT KNOW YOUR RIGHTS AGAINST THE INSURANCE COMPANY.**

MATRIX LEGAL SERVICES
PROFESSIONAL CORPORATION

**Over 30 Years Combined Experience**




Even if you are at fault:
Unemployed . Employed
Passenger . Pedestrian
Cyclist . Travelling in
public transit . Student
Housewife.

DON'T BE MISLEAD INTO TAKING
A POOR OR SMALL
**CASH SETTLEMENT**
IF YOU ARE INJURED
PHYSICALLY AND/ OR
PSYCHOLOGICALLY
CALL US NOW!

இலவச ஆலோசனைகளுக்கு
இன்றே அழையுங்கள்.

**தீபன்**
**(416) 505-9804**
**(416) 831-4444**
24 Direct Line

2190 Warden Ave., Suite 202,
Toronto, ON M1T 1V6



## DEBT FREE CREDIT SOLUTION

Seeking freedom from **DEBT?**
We offer Total Debt
**FREE SOLUTIONS**



**Elankeeran .T**
*Certified Insolvency Counsellor*
By Canadian Association of Insolvency and Restructuring Professionals (CAIRP)

- கடன் தொகையினை 80% வரை குறைத்து அதனை வட்டியின்றி ஒரு மாதத் தவணையில் கட்ட ஏற்பாடு செய்தல்.
  We provide expert advice on how to consolidate and reduce debt payments safely without borrowing money.
- பாதுகாப்பான முறையில் கடனை அடைப்பது பற்றிய அறிவுரையும் ஆலோசனையும் தரப்படும்.
  We shield you from your creditors and offer you a guranteed protection.

SETTLEMENT
CONSUMER PROPOSAL
BANKRUPTCY

Cell. 416.834.7227 Fax. 1.877.800.789
Tel. 416.434.1522 freedebt.toro@gmail.com

**Head Office:**
10 Milner Business Court, Suite 334
Toronto, ON. M1B 3C6

**Branch Office:**
101 Palstan Road
Mississauga, ON. L4Y 4E7

www.TotalDebtFree.ca




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குடாநாடு முப்படையினரின் முற்றுகையிலேயே உள்ளது

யாழ்ப்பாண மாவட்டத்தில் இன்றும் 93 கடற்படை முகாம்கள், 54 இராணுவ முகாம், 1 விமானப்படை முகாம் மற்றும் 30 பொலிஸ் மையங்கள் என்பவற்றின் இரும்பு பிடிக்குள்ளேயே இங்கு வாழும் 5 லட்சம் மக்களின் சட்டம் ஒழுங்கு பேணிப் பாதுகாக்க முடியாமல் அரச இயந்திரம் திணறுகின்றது.

குடாநாடு இன்றும் போர்ச் சூழலை ஒத்த நிலமையில் முப்படையினரின் முற்றுகையிலேயே உள்ளது. யாழ்பாணக் குடாநாட்டின் ஆயிரம் சதுரக் கிலோ மீற்றர் பரப்பையும் முற்றுகையிட்டு தற்போதும் 148 படை முகாம்களும் பொலிசாரின் 30 பிரதான நிலையங்களுமாக 178 ஆயுத முகாம்கள் உள்ளநிலையிலேயே போதைப்பொருள் பாவனையும் குற்றச் செயல்களும் இடம்பெறுகின்றன எனில் இங்கு தங்கியுள்ளவர்களின் பணி அல்லது நோக்கம் என்ன என்ற பெரும் வினா எழுகின்றது.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் மகிந்த காலத்தில் முழத்திற்கு ஓர் படை முகாம்இருந்த நிலையில் இன்று சற்று இடைவெளி கானப்படுகின்ற அதேநேரம் ஒரு மாவட்டம் மட்டும் 200 படை முகாமினால் சூழப்பட்டுள்ளது வெளிப்படையானது. இதே நேரம் மகிந்த காலத்தில் 450 படை நிலைகள் கானப்பட்ட நிலையில் படையப்புலனாய்வாளர்களும் படை முகாம்களிலேயே இயங்கினர் . ஆனால் இந்த சொல்லாட்சி அரசில் மூடப்பட்டதாக கூறப்படும் படை முகாம்களின் புலனாய்வாளர்கள் தனிப்பட்ட இரகசிய இல்லங்களில் இயங்கத்தான் செய்கின்றனர்.

இருந்தபோதிலும் இன்று 2018ம் ஆண்டின் யூலை மாத்திலும் யாழ்ப்பாணக் குடாநாட்டின் நிலவரத்தின் பிரகாரம் படை முற்றுகை என்பது எந்த வகையிலும் குறையவில்லை என்பதே யதார்த்தமாகவுள்ளது. குடாநாடு 3 பக்கமும் கடலால் சூழப்பட்டு கடலே பெரும் பகுதி என்பதனால் முற்றுகை வலயமும் கடற்படையினர் அதிக முகாம்களே கானப்படுகின்றன. பரப்பளவில் அதிக ஏக்கர் நிலம் இராணுவ வசம் உள்ள நிலையில் இன்று யாழ்ப்பாணக் குடாநாட்டில் மட்டும் 54 இராணுவ முகாம்கள் இன்றும் உள்ளது. இதற்காக இராணுவத்தின் வசம் தற்போது 2946 ஏக்கர் நிலம் உள்ளது. அதாவது 12 சதுரக் கிலோ மீற்றர் பரப்பளவை மிஞ்சிய நிலம்.

இதேநேரம்யாழ்ப்பாணக் குடா நாட்டிலேயே அதிக படை நிலைகளைக் கொண்ட படைப்பிரிவாக கடற்படையினரே உள்ளனர். இதன் பிரகாரம் ஆயிரம் சதுரக் கிலோமீற்றர் குடாநாட்டின் கடற்பரப்பையும் சூழ 93 கடற்படை முகாம்கள் மற்றும் தளங்கள் உள்ளன. இவ்வாறு கானப்படும் 93 கடற்படை முகாமிற்காகவும் 529 ஏக்கர் நிலப்பரப்பினை கடற்படையினர் விழுங்கியுள்ளனர். இந்த நிலப்பரப்பை தாண்டியே எமது குடாநாட்டு மீனவர்கள் தமது வாழ்வாதாரத் தொழிலிற்கான இடங்களை தேடவேண்டும்.

விமானப்படையினரைப் பொறுத்தமட்டில் ஒரேயொரு முகாமாக கானப்படுகின்றபோதும் அவர்களின் பிடியில் மட்டும் ஆயிரம் ஏக்கர் நிலம் உள்ளது.

இதேபோன்றே பொலிசாரின் 30 பிரதான பொலிஸ் மையங்களில் 18 பொலிஸ் நிலையங்களும் பொலிஸ் அத்தியட்சகர் பணிமனைகள் , பிரதிப் பொலிஸ்மா அதிபர் பணிமனை போன்றவை கானப்படுகின்றன. இவ்வாறு 178 ஆயுத நிலைகளிலும் சுமார் 50 ஆயிரம் துப்பாக்கி தாரிகள் நிற்கும் நிலையில் வன்முறையை கட்டுப்படுத்த முடியவில்லையாம். இதற்கும் மேலான நகச்சுவையான விடயம் குடாநாட்டை சூழ 93 கடற்படை தளம் உள்ள நிலையில் கஞ்ச சர்வ சாதாரணமாக வேண்டிய அளவில் நகருக்குள் வருகின்ற நிலமை கானப்படுகின்றமையானது கடற்படையினர் கஞ்சாவை தடுக்கின்றனரா அல்லது விநியோக மையமா என்று கேட்கும் கேள்விக்கு பதில் அளிக்கமுடியவில்லை.

இலங்கையில் உள்ள படையினரில் சுமார் நான்கில் ஒரு பங்கு படை குடாநாட்டில் நிற்கும் நிலையிலும் முப்படைகளையும் தன்வசம்கொண்டிருந்த விடுதலைப் புலிகள் அமைப்பையே தோற்கடித்த படையினர் என மார் தட்டும் படைகளால் இன்று இலங்கைக்குள் கடத்தப்படும் போதைப் பொருட்களை கட்டுப்படுத்த முடியவில்லையாம் என்பதோடு வன்முறைக் கும்பல்களையும் கண்டறிய முடியவில்லை என்பதனை ஊகிப்பதற்கு எந்த இராணுவ நிபுணர்களும் தேவையில்லை. சாதாரண பொதுமகனே கண்டறிவான்.

இவ்வாறெல்லாம் நிந்த அளவில் உள்ள படைகளால் இவற்றினை கண்டறியமுடியவில்லை எனில் குடாநாட்டில்இவர்களின் பணிதான் என்ன. என்ற வினாவே எழுகின்றது. இவ்வாறு குடாநாட்டின் நிலமைகள் கானப்படும் நிலமையில் தெற்கில் உள்ள சில இனவாதிகளோ வடக்கில் இருக்கும் படை முகாம்கள் மூடப்படுகின்றன. அதன் காரணமாக படையினர் வெளியேற்றபடுகின்றனர். படைகள் குறைக்கப்படுகின்றனர். எனக் கூக்குரல் இடுகின்றனர்.

உண்மையில் யாழ்ப்பாணக் குடாநாட்டில் இன்றும் 4 ஆயிரத்து 507 ஏக்கர் நிலம் படையினர் வசம் உள்ளது. இந்த நிலத்தின் 9 ஆயிரத்து 564 குடும்பங்களைச் சேர்ந்த

33 ஆயிரத்து 286 மக்கள் மீளக்குடியமர வேண்டிய நிலமையே கானப்படுகின்றது. இதிலும் 580 குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 204 பேர் 24 இடைத் தங்கள் முகாம்களிலேயே சொந்த ஊர் திரும்ப முடியாது அகதி வாழ்வில் உள்ளனர். இவ்வாறு குடாநாட்டின் சிவில் மற்றும் வாழ்வாதார நில விடுவிப்புக்கள் தொடர்பான உண்மை நிலவரம் சர்வதேசத்தின் பக்கம் செல்லவிடாது தடுக்கும் நோக்கமே இனவாத கூக்குரலாகவுள்ளது.

SP Sutharsan



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோட்கேஜ்



புதிய, முதல் தரம் வீடு வாங்குவோருக்கான மோட்கேஜ்,
1ஆம், 2ஆம், 3ஆம், Bridge, Private மோட்கேஜ்
சுய தொழில் புரிவோருக்கான மோட்கேஜ்
பழுதடைந்த கிரடிற் உள்ளவர்களுக்கான மோட்கேஜ்
குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கான மோட்கேஜ்

# MORTGAGE NESAN

**416-908-5656**

*Residential / Commercial / Industrial / Investment Properties*

- 1st, 2nd and 3rd Mortgages
- Refinance
- Secured Line of Credit
- New House Commitment, Pre-approval
- Home Equity Loan

## 1st Mortgage ('A' lender) Majaor, Under write Banks

| Mortgage Amount | Weekly | Bi Weekly | Semi Month | Month |
|---|---|---|---|---|
| 698,000 | 659.62 | 1319.25 | 1429.19 | 2858.37 |
| 546,000 | 515.98 | 1031.96 | 1117.96 | 2235.92 |

## 1st Mortgage ('B' lender) Under write Banks, Trust, Cridit Union

| Mortgage Amount | Weekly | Bi Weekly | Semi Month | Month |
|---|---|---|---|---|
| 698,000 | 765.04 | 1530.08 | 1657.59 | 3315.17 |
| 546,000 | 598.44 | 1196.88 | 1296.62 | 2593.24 |

## Private Mortgage ('C' lender) Private lender

| Mortgage Amount | Weekly | Bi Weekly | Semi Month | Month |
|---|---|---|---|---|
| 698,000 | 1059.81 | 2119.62 | 2296.26 | 4592.52 |

## 2nd Mortgage ('D' lender) Private lender

| Mortgage Amount | Weekly | Bi Weekly | Semi Month | Month |
|---|---|---|---|---|
| 98,000 | 179.15 | 358.29 | 388.15 | 776.30 |

## 3rd Mortgage ('E' lender) Private lender

| Mortgage Amount | Weekly | Bi Weekly | Semi Month | Month |
|---|---|---|---|---|
| 49,000 | 113.72 | 227.43 | 246.39 | 492.77 |

## Secure Line of Credit & Loan

| Mortgage Amount | Secure Line of Credit | Home Equity Loan |
|---|---|---|
| 225,000 | 1005.95 / per month | 1276.51 / per month |

MORTGAGE ALLIANCE
Thavanesan Subra
Independently Owned and Operated
Brokerage # 10530

1585 Markham Rd, Unit # 407,
Toronto, ON. M1B 2W1
www. nesan.ca
mortgage@nesan.ca

SUBRA MORTGAGE SOLUTIONS INC.
Office: 1-844-878-2721
Fax: 647-351-3099



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பால் கட்டு

பெண்மையின் மென்மைகளை உணர்ந்தவர்கள் அவர்கள் வேதனைகளை பிதிபலிக்கும் ஓர் உண்மை சம்பவம் முகநூல் நண்பியின் பதிவிலிருந்து....

பள்ளிக் காலங்களில் ஒரு பெண் டீச்சரைப் பார்த்து 'பால்பண்ணை' என்று சகமாணவர்கள் கூப்பிடுவார்கள்.

அவருடைய மார்பு பெரிதாக இருப்பதுதான் அதற்குக் காரணம். பெரிய மார்பில் நிறைய பாலிருக்கும். 'நிறைய பால்' பண்ணையில்தான் இருக்கும். அத்தகைய பெரிய மார்பகங்களை கொண்டுள்ளதால் அவரைப் 'பால்பண்ணை' என்று அழைப்பார்கள்.

அப்பெயரை நான் உச்சரிக்க வில்லையே தவிர பையன்கள் அப்படிச் சொல்லும் போது கலகலவெனச் சிரித்திருக்கிறேன்.

அதற்கும் முன் சிறுவயதில் 'சம்சாரம் அது மின்சாரம்' திரைப்படத்தில் லட்சுமி நடித்திருக்கும் கேரக்டருக்கு பால்கட்டி கொண்டது என்று துன்பப்படுவதாக ஒரு காட்சி வரும்.

ஒரு விநாடி இப்படின்னா என்ன? என்று தோன்றி பின் மறந்த காட்சி அது.

பொதுவாக பெண்ணின் மார்பு என்பது ஆணுக்கு உச்சமான இன்பத்தைக் கொடுக்கும் விசயம். பார்க்கும் பெண்களின் மார்புகளில் எல்லாம் தன் விழிகளை பதிக்காமல் இருக்க அவனால் முடியவில்லை.

ஆனால் அதன் பின்னால் பெண்கள் அடையும் துன்பத்தைப் பற்றி எந்த அளவுக்கு தெரிந்து வைத்திருக்கிறார்கள் என்று தெரியவில்லை.

மாதவிலக்கு, மென்ஸஸ் போன்ற விஷ்யங்கள் பற்றி கூட கொஞ்சம் விழிப்புணர்ச்சி வந்தாற்போல இருக்கிறது. ஆனால் இந்த மார்பினால் வரும் துன்பத்தைப் பற்றி மிகக் குறைந்த விழிப்பே இருக்கிறது.

சமீபத்தில் அமரந்தா எழுதிய 'பால்கட்டு' என்றொரு கதையைப் படித்த பிறகுதான் எனக்கு இதன் வலி புரிந்தது.

கதைச் சுருக்கம் வருமாறு.

மத்திய தர வர்க்கத்துப் பெண்ணுக்கு, வேலைக்கு போயே ஆகவேண்டும் என்ற கட்டாயத்தில் இருக்கும் பெண்ணுக்கு 'பால்கட்டுதல்' என்றப் பிரச்சனை இருக்கிறது.

மார்பகங்களில் பால் அதிகமாகக் கட்டிக்கொண்டு வலியைக் கொடுப்பது தான் இதன் அம்சம்.

மிக அதிகமாக கட்டிக்கொள்ள டாக்டரிடம் போகிறாள். நர்ஸ் பம்ப் வைத்து பாலை எடுக்க முயற்சி செய்கிறார். வலியால் துடிக்கிறாள் இவள்.

இவள் வலியால் துடிப்பதைப் பார்த்த நர்ஸ் 'யார்கிட்டயும் சொல்லாதம்மா" என்று தன் வாயால் மார்பில் வாயைவைத்து பாலை உறிஞ்சி துப்புகிறார்.

பின் பெண்ணின் முலைகளை ஆராய்ந்து, அதில் புண் இருப்பதாகவும், அதனால் பால் சரிவர வெளிவராமல் கட்டிக் கொள்வதாகவும் சொல்லி, அதற்கு ஒரு க்ரீம் கொடுக்கிறார்.

அந்த க்ரீமைத் தடவ வேண்டும். பின் குழந்தைக்குப் பாலைக் கொடுக்கும் முன் அதை சுத்தம் செய்ய வேண்டும். பின் மறுபடியும் தடவ வேண்டும் என்று நரக வாழ்க்கையை வாழ வேண்டியதாயிருக்கிறது.

காலை அலுவலகத்துக்கு வந்துவிட்டு மதியம் குழந்தைக்கு பால் கொடுக்கச் செல்வதற்குள் அது மார்பில் கட்டிக் கொண்டு கெட்டுப் போய் விடுகின்றது.

இவளுக்கு குழந்தை பால் குடித்தால் பாரம் குறையும் என்றிருக்கும் போது, குழந்தையோ கெட்டுப் போன பாலைக் குடிக்காமல் அழுகிறது.

மறுநாளில் இருந்து அலுவலகத்தின் பாத்ரூம் சென்று அவ்வப்போது மார்பை பிதுக்கி அவ்வப்போது பாலை எடுக்கிறாள்.

இப்படியாக பால்கட்டுதலால் அவள் படும் கஷ்டத்தை ஆசிரியர் கதை நெடுகச் சொல்கிறார்.

ஒருநாள் மாலை வீடு செல்லும் போது கதவு திறந்திருக்கிறது. வழக்கமாக இரவு லேட்டாக வரும் கணவன் அன்று சிக்கிரமே வந்திருக்கிறான். அதைப் பார்த்து மகிழ்ச்சி. அவனிடம் காப்பிக் குடிக்க வேண்டும் என்று கேட்க நினைக்கிறாள்.

ஆனால் மார்பு பாரம் தாங்க முடியாமல் குழந்தையை எடுத்து வராண்டாவிலேயே பால் கொடுக்கிறாள். குழந்தைக் குடிக்க ஆசுவாசப்படுகிறாள்.

ஆனால் கணவனோ உள்ளே போ உள்ளேப் போ போ என்று விரட்டு கிறான். இவள் வேறு வழியில்லாமல் உள்ளே வருகிறாள்.

"வாசல்ல இருந்துதான் இதெல்லாம் செய்வியோ' என்று கணவன் அவள் முகத்துக்கு நேரே கையை நீட்டி கடுத்து வருகிறான்.

அவள் தலை கிறுகிறுத்துப் போகிறது.

இப்படியாகக் கதை முடிகிறது.

இதைப் படித்த பிறகுதான் பால்கட்டுதல் என்பதில் இவ்வளவு பிரச்சனையா என்று எனக்குத் தெரிந்தது. மனைவியிடம் கேட்டேன்.

"ஆமா அது எவ்வளவு பெரிய கொடுமை" என்று நிறையச் சொன்னார். நான் அவளிடம் கேட்டேன் "இது எனக்குத் தெரியாதே" என்றேன்.

"இதெல்லாம் சொல்லிட்டா இருப்பாங்க" என்ற பதில் கிடைத்தது.

அம்மாவுக்கு போன் போட்டுக் கேட்டேன்.

அம்மா இந்தக் கதையை ஆமோதித்து, பால் கட்டுதல் என்பது சில பெண்களுக்கு கொடுமையான விசயம் என்று விளக்கினார்.

நான் அம்மாவிடம் கேட்டேன் "ஏம்மா இத்தன வருஷம் உங்க கிட்ட ஃப்ரெண்டா பேசியிருக்கேன். இந்த விஷயத்த எனக்கு சொல்லவே இல்லை" என்றேன்.

யாருமே எங்கேயுமே இதுமாதிரியெல்லாம் பிரச்சனை இருக்கிறது என்று சொல்லாமல் இருந்தால் ஆணுக்கு எப்படித் தெரியும்.

அப்படி ஆணுக்குப் பெண்ணின் வலிதெரிவது இப்போதைய வன்புணர்வு கலாச்சாரத்தில் முக்கிய தேவையாகும்.

என்னைக் கேட்டால் பாட புத்தக சிறுகதைகளில் ஒன்றாக அமரந்தாவில் "பால் கட்டு" சிறுகதையை வைக்க வேண்டும் என்பேன்.

ஒருவேளை இக்கதையைப் படித்தால்

"பால் பண்ணை, இளநீ, காய், முலை, முயல் குட்டி" என்றெல்லாம் மார்பகங்களை பேசுவதை கொஞ்சம் ஆண்களாவது தவிர்ப்பார்கள்.

அந்த கொஞ்ச ஆண்கள் பிற்காலத்தில் நிறைய ஆண்களாக ஆகலாம்.

பண்பட்ட சமூகத்தை அடைவது தான் நம் நோக்கம் என்றால் இது போன்ற சிறுகதைகள் நிறைய வரவேண்டும்.

விவாதிக்கப்பட வேண்டும். முடிந்த அளவு பகிருங்கள்!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Milestone Birthday of Manickampillai & Appreciate his contribution to the Community








Pillai Aiya, a man of great achievements celebrated a well deserved milestone in his life on July 16th at the Markham Civic Centre. A man with great community involvement, who persistently put time and effort into all his community involvement. Years of selfless contributions without claim. He has served in many committees and founded many. He is an inspiration and role model to many individuals like myself and many others in Markham. From 1990 till now. He has been a part of various school councils, food fair volunteer, distributing flyers, Ontario Society of Senior Citizens, Toronto Vegetarian Association, Coordinator at Parents Literacy Centre and much more. He also contributed to many changes we see today such dress code in schools, bill boards in front of school, divertion of TTC bus route #53.

மேலதிக புகைப்படங்களை இகுருவி இணையத்தளத்தில் பார்வையிடலாம்.

# கருப்பு ஜூலையின் 35 வது நினைவு தினத்தன்று ரொரண்டோ-அல்பேர்ட் கம்பல் சதுர்க்கத்தில் நடைபெற்ற நினைவுகூரல் நிகழ்வு








மேலதிக புகைப்படங்களை இகுருவி இணையத்தளத்தில் பார்வையிடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

WORLD WIDE

Saiesan
Money Transfe

துரித பணப்பரிமாற்று சேவை

24/7
SERVICE

GREAT FOREIGN EXCHANGE RATES

- Send money to anywhere around the globe
- Delivered to the recipient within hours at there convenient
- Track your transfer with SMS notification
- It is easy, fast and secured with Saiesan

100%
SATISFACTION
GUARANTEED

FAST AND
SECURE TRANSFER
WITHIN 1 HOUR

WWW.SAIESAN.CA



C117-6055 Steels Avenue-East, M1V 5P6
info@saiesan.ca

+1 866 964 3813
+1 416 613 1888

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org






**Shan Sarvananthan**
*Sales & Leasing Consultant*
Cell 416-720-1184

HONDA
**Formula Honda**
*Where You're Treated like Family.*

2240 Markham Road
Scarborough,
ON, M1B 2W4
Telephone:
416-754-4555

formulahonda.com






**Rajah Tharmalingam**
*Sales & Leasing Consultant*
Cell 647-833-4998


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org